

ஒரு
கல்யாணத்தின்
கதை
ரமணிசந்திரன்

# ஒரு கல்யாணத்தின் கதை

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை-600 014

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஒரு கல்யாணத்தின் கதை |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| முதல் பதிப்பு | : 1983 |
| இரண்டாம் பதிப்பு | : ஜூலை, 1984 |
| மூன்றாம் பதிப்பு | : மார்ச், 1990 |
| நான்காம் பதிப்பு | : நவம்பர், 1991 |
| ஐந்தாம் பதிப்பு | : மார்ச், 1993 |
| ஆறாம் பதிப்பு | : ஜூலை, 1995 |
| ஏழாம் பதிப்பு | : அக்டோபர், 1996 |
| எட்டாம் பதிப்பு | : ஏப்ரல், 1998 |
| ஒன்பதாம் பதிப்பு | : பிப்ரவரி, 2000 |
| பத்தாம் பதிப்பு | : அக்டோபர், 2001 |
| 11ஆம் பதிப்பு | : ஜூலை, 2003 |
| 12ஆம் பதிப்பு | : டிசம்பர், 2004 |
| 13ஆம் பதிப்பு | : மார்ச், 2006 |
| 14ஆம் பதிப்பு | : அக்டோபர், 2007 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : 136 |
| அச்சு எழுத்து | : 12 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : **அருணோதயம்** 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.40.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |


# ஒரு
# கல்யாணத்தின்
# கதை

# ஒரு கல்யாணத்தின் கதை

## 1

அன்புடன் மீராவின் கன்னத்தில் சின்னதாக ஒரு திருஷ்டிப் பொட்டை வைத்து விட்டாள் சித்தி அனுசூயா.

''என்ன சித்தி, அசிங்கமாய்...'' என்று சிணுங்கிய பெண்ணிடம், ''ஷ் அழித்து விடாதே, மீரா. சும்மா ஒருவர் கண்போல எல்லார்க்கும் இராது!'' என்று சுற்று முற்றும் பார்த்தாள்.

பிறகு, தணிந்த குரலில் தொடர்ந்து, ''அதிலும் உன் பெரியத்தையின் பார்வையில் விஷம் கொட்டுகிறது. உன் அம்மாவோ வெகுளி. இதையெல்லாம் கண்டுகொள்ளவே தெரியாது. நீ வேணுமானால் பாரேன். நாளைக்குச் சுற்றிப் போடும்போது கற்பூரப் புகையெல்லாம் உன் அத்தைமார் பக்கந்தான் போகப்போகிறது. வயிறு எரிகிறார்கள். தெரியுமா?'' என்று கிசுகிசுத்தாள்.

''எரிந்தால் கொஞ்சம் ஐஸ் தண்ணீரை ஊற்றுவதுதானே சித்தி?'' என்று சாதுபோலக் கேட்டுவிட்டுக் கிளுக்கிச் சிரித்தாள் மீரா.

''ஷ். மெல்ல, மெல்ல, கல்யாணப் பெண்ணாய் லட்சணமாய்க் குனிந்த தலை நிமிராமல் பொம்மைபோல இருக்க வேண்டும். சும்மாவே எங்கள் வீட்டுச் செல்லத்தில் நீங்கள் எல்லாம் கெட்டுப் போய் விட்டீர்கள் என்று பேச்சாக இருக்கிறது. இப்போது வேறு கிளப்பி விட்டு விடாதே!'' என்று கூறிவிட்டுச் சற்று எட்டி நின்று தன் அக்கா மகளை அழகு பார்த்தாள் சித்தி.

லேசான முறுவலுடன் நெட்டி முறித்துவிட்டு வெளியே சென்றாள்.

இப்படி அவருக்கும் திருஷ்டிப் பொட்டு வைத்து நெட்டி முறிப்பார்களோ?

அவர்!

பெயரில்லாப் பூச்சிபோல் 'அவர்' என்ன அவர்?

கிரிதரன் என்று எவ்வளவு அழகான பெயர்.

'கிரி' என்று செல்லமாக அவள் அழைத்தால் அவனுக்குப் பிடிக்குமோ? எப்படிப் பிடிக்காமல் இருக்கும்?

மீரா — கிரிதரன்.

இப்படிப் பொருத்தமாக இந்தப் பெயர்கள் எப்படி வாய்த்தன?

இந்தப் பெயர்ப் பொருத்தம் பற்றிப் பேசாதவர் இல்லை எனலாம்.

தோற்றப் பொருத்தமும் இருப்பதாகத்தான் எல்லாரும் சொல்கிறார்கள்.

மற்றவர் சொல்லுவானேன்?



கிரிதரனுடைய போட்டோவை அப்பா கொணர்ந்து காட்டியபோதே அவள் மனம் அலைபாயத் தொடங்கி விட்டதே.

எப்போது எப்போது என்று ஒரு பறப்பு...

''நேரிலும் பார்த்துவிடு, பாப்பா,'' என்று அவளை ஒருநாள் அழைத்துச் சென்று காட்டினார் தந்தை.

சாந்தம் தியேட்டரில், ஃபாயரில் யாரோ ஒரு நண்பனுடன் பேசிச் சிரித்தபடி திரும்பிய அவனது தோற்றம்.

சில கணங்கள் மீராவுக்கு மூச்சே நின்று போனது.

அவனுக்கு இவள் தகுந்தவள்தானா?

யாரும் கவனிக்கவில்லை என்று உறுதி செய்து கொண்டு ஓசைப்படாமல் பக்கத்து அறைக்குள் நழுவினாள்.

கண்ணாடி பீரோ — சீதனப் பொருள்களுள் ஒன்று — உயரமாய் நின்றது.

அதன் முன்னே சென்று தன்னையே அளவெடுத்தாள். சந்தேகத்துக்கு இப்படியும் அப்படியுமாகத் திரும்பியும் பார்த்துக் கொண்டாள்.

ஒருவாறு மனம் கொஞ்சம் திருப்தி கொண்டது.

அவளும் அழகாய்த்தான் இருக்கிறாள். அவன் அருகே நின்றாலும் பொருத்தமாகத்தான் இருக்கும் என்று தோன்றியது.

முதலில் எல்லாம் அவளுக்குப் பயந்தான்.

அந்தப் பயத்தின் உந்துதலில் தந்தையிடம் ரகசியமாகச் சொன்னாள். ''அப்பா, எதற்கும் அவருக்கும் பிரி... சம்மதம்தானா என்று கேட்டு விடுங்களேன்,'' என்று.

'வழியில்லையே, மீராம்மா. ஆபீஸ் வேலையாக மாப்பிள்ளை வடக்கே டூர் போயிருக்கிறாராம். திருமணத்துக்கு முந்தின நாள் காலையில்தான் வருகிறாராம். ஆனால் பிள்ளைக்குப் பிரியம்தான் என்று சம்பந்தி அடித்துச் சொல்லுகிறாரே! மாப்பிள்ளையை நான் உனக்குக் காட்டியது போல உன்னையும் அவருக்கு எங்கேயாவது காட்டி யிருப்பார்கள். உன்னைப் பார்த்த பிறகும் ஒருவருக்குப் பிடிக்காமல் போகுமா?'' என்று பெருமையாக உரைத்தார் தந்தை.

அதில் மட்டுமா பெருமை!

''திருமணம் என்றால் ஜாதகப்படி பையனுக்கும் பெண்ணுக்கும் பத்துப் பொருத்தங்கள் பார்ப்பார்களாமே. மூன்று பொருந்தி இருந்தாலே செய்யலாம் என்பார்கள். ஏழு இருந்தால் அதிசயம். எங்கள் மீராவுக்கும் மாப்பிள்ளைப் பையனுக்கும் ஒன்பது பொருத்தங்கள் பொருந்தி இருக்கின்றன. சம்பந்தி குதிக்கிறார். மாப்பிள்ளை மட்டும் ஊரில் இருந்தால் நாளையே திருமணம் என்று விடுவார். ஆனால் மாப்பிள்ளை இரண்டு வாரம் சென்றுதான் வருகிறார். ஏதோ, அதுவும் நமக்கு வசதிதான். 'ஏற்பாடுகள் எல்லாம் செய்யவேணும் இல்லை.''

அம்மாவிடம் அப்பா சொல்லிக் கொண்டிருந்த அந்த ஏற்பாடுகளை எண்ணிப் பார்க்கையில் மீராவின் முகம் கறுத்தது.

பெண்ணுக்காகக் கட்டிவந்த சீட்டை எடுக்க அவகாசம் இல்லை. அங்கே இங்கே கடன் வாங்கி, அம்மாவின் தங்கம், வெள்ளிகளை உருமாற்றி...

மீராவுக்கு ஆத்திரமாகக் கூட இருந்தது.



மற்ற தேசங்களில் இப்படியா செய்கிறார்கள்? அறுபது பவுன் நகை, நாற்பது ஆயிரம் ரொக்கம். இதற்கு மேல் பாத்திர வகைகள், பட்டுச் சேலைகள்... ஒரு பெண்ணுக்கு எவ்வளவு செலவு! இன்னமும் இரண்டு பேர் இருக்கிறார்கள்.

எண்ணிப் பார்க்கையில் மீராவுக்குப் பெருமூச்சு வந்தது.

அதோடு கோபமும் வந்தது. பெண்ணையும் கொடுத்து பணத்தையும் கொடுப்பது என்றால் என்ன அர்த்தம்?

''ரொம்பவும் சீப்பாகத் தெரிகிறது!'' என்று தாயாரிடம் சிடுசிடுத்தபோது சிரிப்புதான் பதிலாக வந்தது.

கூடவே, ''நானூற்று ஐம்பது பவுன் நகையும் மஞ்சக்காணி நிலமுமாக வந்தவளடி!'' என்ற பதில் வேறு.

''உங்கள் கதை வேறே அம்மா. தாத்தாவுக்கு நீங்களும் சித்தியும் மட்டும்தான். எப்படியும் எல்லாம் உங்களு டையதுதானே. இங்கே அப்படியா?'' என்று வாதாடினாள் மகள்.

''உனக்கு அது போலச் செய்ய முடியவில்லையே என்பதுதான் எங்கள் வருத்தம், கண்ணம்மா. கண்டதையும் எண்ணி மனதைக் குழப்பிக் கொண்டு இராமல் கல்யாணப் பெண்ணாய் லட்சணமாய்ச் சிரித்துக் கொண்டு இரு. இந்தக் கவலையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.''

அப்படியும் இப்படியுமாகப் பார்த்த விதத்தைக் காணப் பொறாமல் தந்தையிடமும் பேசிப் பார்த்தாள்.

''பெண்ணையும் கொடுத்துப் பணமும் நகையுமாகக் கொட்டியும் கொடுப்பது என்றால் நியாயமற்றும் கேவலமாயும் தெரிகிறது அப்பா! எனக்குப் பிடிக்கவே இல்லை,'' என்றாள்.

''எனக்கும் பிடிக்கவில்லைதான், பாப்பா! ஆனால் இந்த நாட்டில் பிறந்துவிட்டுப் பெண்ணைப் பெற்றவன் இதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்த முடியாது. நாளை உன் அண்ணன் திருமணம் வரும்போது...''

''மதனுக்கு எதுவுமே வாங்கக் கடாது, அப்பா!'' என்றாள் மீரா வேகத்துடன்.

''அதுதான் அம்மா என் விருப்பமும். கடவுள் கிருபையில் வருகிற மருமகளுக்கு நகைபோட்டு அழைத்து வரவேண்டும் என்று இருக்கிறேன். அதுவரை நீ இதிலெல்லாம் மனதைக் குழப்பிக் கொள்ளாதே. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.''

பார்த்து விட்டார்கள்.

பதினைந்து நாள் பத்தாகி, ஐந்தாகி, அதோ நாளை திருமணம் என்கிற அளவில் நெருங்கி நிற்கிறது.

திருமண நாள் நெருங்க நெருங்க, மற்ற எல்லாம் பின்னே ஒதுங்கிக் கொள்ள அவன் — கிரிதரன் நினைவே பெருமளவும் அவளை... வளைத்துக் கொண்டது.

இனி நாளை இந்நேரம் அவன் அவளுடையவன். அவளை உடையவனும் கூட.

யாரோ வரும் அசைவு கேட்டுக் கண்ணாடியைவிட்டு விலகினாள் மீரா.

வந்தது பெரிய அத்தை பார்வதி.

''ஊ...ம், பீரோவில் கண்ணாடி வேறயா? நல்ல விலையிருக்குமேடி. ம், எல்லாம் அந்தப் பட்டியூரான் அதிர்ஷ்டம். கொட்டோ கொட்டுன்னு கொட்டுகிறானே உன் அப்பன்! பளபளன்னு சட்டையும் டவுசரும் கண்ணை



மறைக்குதாக்கும்? பட்டணத்திலே வாழாட்டியும் என் பிள்ளைக்கு என்ன குறைவாம்? ஒரே வார்த்தையிலே கட்டிக் கொடுக்க முடியாதுன்னுட்டானே இப்போ...'' என்று அந்தச் சீர்ப்பொருள்களை வெறித்துப் பார்த்தாள்.

சித்தி சொன்ன 'கண்ணேறு' சட்டென்று மீராவுக்கு உறைத்தது.

அத்தை மகனைத் தந்தை மறுத்த காரணமும் நினைவு வந்தது.

''அத்தை பிள்ளையானால் என்ன, மாமன் மகனானால் என்ன! எல்லாம் கூடப் பிறந்தது போலத்தான். இந்த மாதிரி நெருங்கிய உறவில் கல்யாணம் செய்துதான் நம் மக்கள் வலுவிழந்து போனார்கள். இந்த மாதிரி கல்யாணங்களினால் பிறக்கும் பிள்ளைகளுக்குப் பிறவி ஊனம் நேருவதும் அதிகமாம். அதனால் நம் வீட்டில் இந்தப் பேச்சே கூடாது,'' என்று தந்தை உறுதியாகக் கூறி விட்டிருந்தார்.

அத்தைக்குச் சமாதானமாக, ''சொந்தத்தில் செய்தால் நல்லது இல்லை என்று விஞ்ஞானப்படி கண்டு பிடித்து இருக்கிறார்கள் அத்தை! அதனால்தான் அப்பா...'' என்று தொடங்கினாள்.

''ஆமாமாம், ஏதோ ஒரு சாக்கு உன் அப்பாவுக்கு. நீ ஒன்றும் வக்காலத்து வாங்கி வரவேண்டாம். எல்லாம் உங்க அம்மா வேலையென்று எனக்குத் தெரியாதா? அதோட பட்டணத்துப் பளபளப்பு கண்ணை மறைக்குது. அவ்வளவுதான் விஷயம். ஆனாலும் பவுன் விற்கிற விலையில் அறுபது பவுனா? நாற்பது ஆயிரமா? விள்ளாமல் விரியாமல் அப்படியே அசலானிடம் அள்ளிக் கொடுப்பதா?'' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள் பார்வதி அம்மாள்.

சகோதரனுடைய பெண்ணிடமிருந்து பதில் வராமல் போகவும் திரும்பி அவளைப் பார்த்து, "மறந்து போனேன் பார். உனக்கு டெலிபோன் வந்து இருக்கிறது. யாரோ உன் சினேகிதியாம். உன்கிட்டேதான் பேசியாகணுமாம். போய்ப் பேசு..." என்று அதட்டினாள்.

நல்ல வேளை தப்பித்தோம் என்று வேகமாக மீரா வெளியேறியபோது, "சினேகிதியோ சினேகிதனோ? யார் கண்டது, குதிரை மாதிரி வளர்த்து விட்டிருக்கிறான்!" என்று அத்தை முணுமுணுத்தது நன்றாகக் கேட்டது.

சுற்றிச் சுற்றி அம்மாவைக் குற்றம் சொல்லாவிட்டால் அத்தைகளுக்கு மூச்சுவிட முடியாதோ? எரிச்சலுடன் எண்ணியபடியே சென்று டெலிபோனை எடுத்தாள் மீரா.

"ஹலோ... மீரா ஸ்பீக்கிங்."

"உன்னிடம் பேச இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமா?" என்று ஆங்கிலத்தில் சிடுசிடுத்தது ஒரு பெண் குரல்.

கனவு, மயக்கங்கள் முழுமையாகக் கலைத்துவிடத் திகைப்புடன், "யார்?" என்று வினவினாள் மீரா.

"நான் யார் என்று உனக்குத் தெரியவேண்டியது இல்லை. ஆனால்... கிரி, இந்தாருங்கள். அந்தப் பெண் பேசுகிறாள்," என்ற குரலைத் தொடர்ந்து, "ஹலோ" என்றது கம்பீரமான ஆண் குரல்.

'கிரி' என்ற வார்த்தை மட்டும் மற்றதை அமுக்கிக் கொண்டு மனதில் பதிய, இனிய எதிர்பார்ப்பும் இனம் புரியாத பயமுமாக, "ஹலோ... நான்... வந்து... அப்பாவிடம் பேச வேண்டுமா?" தடுமாறினாள் மீரா.



'இல்லை இல்லை' என்று அவசரமாக மறுதலித்தான் அவன்.

சிறு தயக்கத்திற்குப் பின் பிசிறின்றி அவன் குரல் தொடர்ந்தது. "தயவுசெய்து இனிய கற்பனை எதிலும் ஆழ்ந்துவிட வேண்டாம். மீரா! இது உனக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தரக்கூடும் என்பது எனக்குப் புரியவே செய்கிறது. ஆனால் வேறு வழியில்லை. அதனால்தான்..."

"அதனால்தான்... அதனால்தான் என்ன? எது... எதற்கு வேறு வழியில்லை?" என்று பதறப் பதறக் குறுக்கிட்டாள் மீரா.

"ப்ளீஸ், அமைதியோடு கேள். இந்தத் திருமணத்தில் எனக்கு அணுவளவும் சம்மதம் இல்லை."

மீரா பிரமித்தாள்.

## 2

"சம்மதம் இல்லையா!"

சம்மதம் இல்லையாமே?

'பையனுக்கு முழுச் சம்மதம் என்று சம்பந்தி அடித்துச் சொல்கிறாரம்மா.'

சில கணங்களாகத் தடைப்பட்டிருந்த புலன்கள் மீண்டும் செயல்படவும் ஓரளவு பேச்சு வந்தவளாக, 'பின்னே... பின்னே உங்கள் அப்பா... எங்கள் அப்பா சொல்லித்தானே..." என்று கோவையாகப் பேச முடியாமல் தடுமாறினாள் மீரா.

"அப்பாவா திருமணம் செய்து கொள்ளப் போகிறார்? என்னையல்லவா கேட்டிருக்க வேண்டும்!"

அழுத்தம் திருத்தமாகக் கேட்கிறானே! அவளுக்கும் தோன்றத்தானே செய்தது? ஆனால், அவனைப் பெற்ற தந்தை

பொய் சொல்லக் கூடும் என்று எப்படி எதிர்பார்ப்பது? அவன் அருகில் இருந்திருந்தால் ஒருவேளை...

''நீங்... நீங்கள் ஊரில் இல்லையே.''

''ஊரில் இல்லையானால் வரும்வரை காத்திருப்பது. அதற்குள் என்ன தலை போகிற அவசரம்?''

''உங்கள்... அப்பா... தான்...'' தொண்டை வறண்டு, நாக்குக் காய்ந்து, பேசுவதே மீராவுக்குச் சிரமமாகிப் போயிற்று.

ஒன்பது பொருத்தங்களும் அப்பாவின் பெருமையும் அவளைப் பார்த்துக் கெக்கொலி கொட்டி நகைத்தன.

பத்தாவது பொருத்தமாக மனப் பொருத்தம் இல்லாமல் மற்ற அத்தனையும் இருந்தென்ன போயென்ன?

தலை விண் விண்ணென்று தெறிக்கத் தொடங்கியது.

மேலே அவன் ஏதோ பேசுவது புரிந்தது.

எல்லாமே சிரமமாகிவிடப் பிரயாசையுடன் நின்று கேட்டாள்.

''இதோ பார்... ஏன், எப்படி, யார் காரணம் என்றெல்லாம் பேசிப் பயனில்லை. முதல் காரியமாக இந்தத் திருமணத்தை நிறுத்த வேண்டும்.''

கடலின் அலையோசை போல 'ஜேஜே' என்று வீட்டின் கலகலப்பு பின்னணியாய்க் காதில் ஒலித்தது.

முகத்தில் ஒரு பெருமையும் எல்லாம் நல்லபடியாக நடந்தேற வேண்டுமே என்ற கவலையுமாகச் சித்தியுடன் பேசியபடி சென்ற தாயார் கண்ணில் பட்டாள்.



கல்யாண வீட்டுக்கே உரிய இன்னும் எத்தனையோ கண்ணிலும் கருத்திலும் விழ அவன் பேச்சு புரிந்து கொள்ள முடியாததாகப் பட்டது மீராவுக்கு.

''ஏன்... ஏன்?'' என்று திணறினாள்.

''இவ்வளவு நேரம் சொன்னதெல்லாம்...'' என்று சினக்குரலில் தொடங்கியவன் சட்டென நிறுத்திக் கொண்டான். சற்றுத் தணிவாகத் தொடர்ந்து பேசினான்: ''இதோ பார் மீரா! இந்த விஷயம் உனக்கு எவ்வளவு தூரம் அதிர்ச்சியாக இருக்கக்கூடும் என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. இதனால் உன்னை ஏதேனும் குறைவாக நான் எண்ணுகிறேன் என்பது பொருள் இல்லை, விஷயம் என்னென்றால் நான் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்.''

''யாரை? யாரை? இப்போது என்னைக் கூப்பிட்டாளே அவளையா?'' என்றாள் மீரா ஆத்திரமாக.

''ஆமாம், அவள்தான். ஆனால் அதெல்லாம் இப்போது அவசியமில்லை...''

அவசியம் இல்லையாமே!

அதெல்லாம் அவசியம் இல்லையாம்.

எதெல்லாம்.

இந்த நகைகள், பட்டுச் சேலைகள், சீர்வரிசைகள் இவற்றைச் சேகரிக்க அப்பா பட்டபாடு, அம்மாவின் தியாகம் எல்லாமே அவசியம் இல்லையாமா? என்ன அநியாயம்?

''மீரா!'' என்றான் அவன் உரக்க.

''ம்?''

''தொடர்பு விட்டுப் போயிற்றோ என்று எண்ணினேன். இப்போது நான் சொல்லப் போவதை நன்றாகக் கவனி. இப்போது நீ என்ன செய்ய வேண்டும் என்றால்...''

''நா... னா?''

''ஆமாம், நீதான். உன் தந்தையிடம் எதையாவது சொல்லி இந்தத் திருமணத்தை நிறுத்த வேண்டும்.''

''நானா?'' என்றாள் மீரா மீண்டும்.

''ஆமாம், மீரா!'' என்றான் அவன் அழுத்தத்துடன்.

அவளுக்குச் சுர்ரென்று கோபம் வந்தது.

''நீங்கள் ஆண்பிள்ளை, தைரியமாக உங்கள் அப்பாவிடம் சொல்லி நிறுத்திவிட வேண்டியதுதானே!'' என்றாள் வெடுக்கென.

''அது தெரியாமல் உன்னிடம் சொல்ல வரவில்லை,'' என்றான் ஏளனமாக.

''பின்னே?'' என்றாள் அவள் விடாமல்.

''மீரா! என் தந்தை மிகவும் வீம்பு பிடிப்பவர். லேசான இதயப் பலவீனம் வேறு உண்டு. அதனால் அவரிடம் அதிகம் பேச வழியில்லை. அதனால் நீதான் துணிந்து செயல்பட வேண்டும். என்னைப்பற்றி இழிவாகப் பேசிப் பழி பேசினால் கூடப் பரவாயில்லை. உங்கள் தரப்பில் இருந்து திருமணத்தை நிறுத்த வேண்டும்.''

திருமணத்தை நிறுத்த வேண்டும்! நிறுத்த வேண்டும் என்றானே, எப்படி முடியும்?

''எ... எப்படி முடியும்?'' என்றாள் எழும்பாத குரலில்.



''முடிந்துதான் ஆகவேண்டும். இல்லையென்றால், அதன் விளைவுகள் உனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். அதைக் கவனத்தில் வைத்து ஆக வேண்டியதைச் செய்,'' என்ற கட்டளையுடன் டெலிபோனை வைத்துவிட்டான் அவன்.

பட்டென்று தொடர்பு முறிந்துவிடக் கையில் டெலிபோனுடன் பேந்தப் பேந்த விழித்தாள் மீரா.

என்ன செய்வது, ஏது செய்வது என்று எதுவும் புரியாமல் எதையும் உணர மாட்டாமல் மரத்துப்போன மூளையுடன் அவள் எவ்வளவு நேரம் நின்றிருப்பாள்?

ஒரு நிமிடம்? ஒரு வருடம்?

மெல்ல மெல்ல உடம்பில் உணர்ச்சி திரும்பவும் டெலிபோனுக்கு வலிக்குமோ என்று அஞ்சுபவள் போன்று மெதுவாக அதைக் கீழே வைத்தாள்.

விசில் அடித்தபடி யாரோ வருவதைக் காது உணர்த்திற்று.

வருவது யார் என்பதை மருக்கொழுந்து சென்டின் மணத்தை உணர்ந்த மூக்கு அறிவுறுத்திற்று.

வருவது பெரிய அத்தையின் மகன் அழகேசன்.

சும்மா என்றால் ஓசையின்றி நழுவிப் போயிருப்பாள்.

ஆனால், அயர்ந்து போன மனமும் உடலும் இன்னமும் முழு நிதானத்திற்கு வரவில்லையே.

காலை அசைப்பதே பிரயாசையாகப்பட்டது.

நாகரிகமற்றுத் துகிலுரியும் அந்தப் பார்வையிலிருந்து மறைய நினைத்தும் முடியாமல் வேரோடியது போல நிற்கத்தான் வேண்டியிருந்தது.

அவளைப் பார்வையிலேயே விழுங்கியபடி, ''ஏதேனும் அதிசயம் நடந்து இந்தக் கல்யாணம் நின்று விடாதா என்று இருக்கிறது. அப்படி மட்டும் நின்றுவிட்டால் மாமா என் காலைத்தானே பிடித்தாக வேண்டும்...'' என்று அவன் முடிக்குமுன் அவளுடைய அண்ணன் மதன் அங்கே வந்து சேர்ந்தான்.

''அத்தான்! உங்களை உங்கள் அப்பா எதற்கோ அழைத்துக் கொண்டு இருக்கிறாரே, சீக்கிரம் போங்கள்,'' என்று அழகேசனை விரட்டினான்.

''எதற்கு? காலையில் கொடுத்த பணத்திற்குக் கணக்குக் கேட்பார் வயசாகிவிட்டாலே... புத்தி...'' என்று முணு முணுத்தபடி வெளியேறினான் அவன்.

காது கேளாத தூரம் அவன் சென்றதும், ''இவன் முன்னெல்லாம் எதற்கு நிற்கிறாய் மீரா! அவனுடைய தொங்கு மீசையும் பார்வையும்! எல்லாவற்றுக்கும் மேலாகக் குளிக்கவே மாட்டான்போல நாற்றமும், அதை மறைக்க மருக்கொழுந்து சென்ட்டும், ஆள் போய் ஐந்து நிமிடம் ஆனபிறகும் அறை நாறுகிறது!'' என்றான் எரிச்சலுடன் மதன்.

விழிகள் வியப்பினால் விரிய, ''மாமா நிஜமாவே அழைக்கவில்லையா, அண்ணா?'' என்று விசாரித்தாள் மீரா.

''அவர் சினிமாவுக்குப் போய் ஆயிற்று. யாரோ உன்னை டெலிபோனில் பேசக்கூப்பிட்டதாக அதை ஒரு குற்றம் போலப் பெரிய அத்தை தன் பெண்ணிடம் சொல்லிக் கொண்டிருந் தார்கள். இவன், மெல்ல இந்த அறைப்பக்கம் நழுவுவதைப் பார்த்துவிட்டு விரட்டுவதற்காக ஓடி வந்தேன். அடித்து விரட்ட முடியாதே, அதற்காகத்தான் இந்தப் பொய். அதை விடு.



அவனைப் பார்த்ததும் நீ உள்ளே போயிருக்க வேண்டாம்?'' என்று அதட்டினான் அண்ணன்.

ஒரே ஒரு வயதுதான் பெரியவன் மதன்.

பார்க்கப்போனால் மீராதான் பெரியவள் என்பது போல எதற்கும் அவளிடம் ஆலோசனை கேட்டுக் கொள்வான்.

இப்போது வீட்டுக்கு மூத்த பிள்ளையாகி அண்ணனாகி அதட்டவும், தன்னையறியாமல் மீராவுக்கு முறுவல் பூத்தது.

''ஆமாமாம். சிரித்துக் கொள்!'' என்று அவன் அலுத்துக் கொண்டான். ''உன்னை வெறித்து வெறித்துப் பார்ப்பதைக் கண்டால் எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. பயமாகவும் இருக்கிறது. ஏதாவது தில்லுமுல்லு செய்து கல்யாணத்தை நிறுத்தி விடுவானோ என்று ஒரே கலக்கமாக இருக்கிறது. நீயானால் சிரிக்கிறாயே.''

சுரீரென்று மீராவுக்கு.

இப்போது வந்த டெலிபோன் கிரிதரனுடையது அல்லவோ?

அழகேசன் அத்தானின் சூழ்ச்சியாக இருக்குமோ?

அந்தக் குரலும் பாவனையும் பேசிய முறையும் 'இல்லை இல்லை! இது அந்தப் பட்டிக்காட்டு மைனரின் சக்தியை மீறியது!' என்று வலியுறுத்தியபோதும், அவள் துரும்பையும் பற்றுகிறவளாகி, 'இது அத்தானுடைய சூழ்ச்சி' என்றே நம்பத் தொடங்கினாள்.

ஆம்! இது அத்தானுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும்.

யாராவது படித்த ஒருவனிடம் சென்று ஆலோசனை கேட்டிருப்பான்.

பணத்தை நீட்டினால் பாவம் செய்ய ஆளுக்குப் பஞ்சமா என்ன?

அதன் விளைவுதான் இந்த டெலிபோன் பேச்சு. வேறு ஒன்றும் இல்லை.

வேறு எதுவுமாய் இராது. கடவுளே! இருக்கக் கூடாது.

இருந்து விட்டால்...

அந்த நினைவில் நெஞ்சு வலித்தது அவளுக்கு.

''என்ன மீரு?'' என்று மிருதுவாகக் கேட்டான் தங்கையின் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்த அண்ணன்.

''எ... என்ன?'' என்று நிமிர்ந்து அண்ணனைப் பார்த்த மீராவுக்கு ஒன்று தோன்றியது.

''அண்ணா! எனக்காக ஒரு காரியம் செய்கிறாயா?'' என்று கேட்டாள்.

''சொல்லு...''

''வந்து... வந்து... மாப்பிள்ளை வீடுவரை சென்று...''

''சென்று, இப்பவே வந்து தாலி கட்டும்படி என் தங்கை சொன்னாள் என்று சொல்லி அழைத்து வரவா?'' என்றான் மதன் கேலியாக.

சிரிக்க முடியாமல் தலையை அசைத்துவிட்டு, ''அங்கே எல்லாரும்... முக்கியமாக அவர் எப்படி இருக்கிறார் என்று பார்த்துவிட்டு வந்து சொல்லு, அண்ணா!'' என்றாள் தங்கை கெஞ்சுதலாக.



''ஓகோகோ! உபசாரம் சரியில்லாமல் சம்பந்திச் சண்டை வந்துவிடக் கூடாதே என்ற பயமா? அடேயப்பா. அதற்குள் இவ்வளவு கரிசனம் வந்துவிட்டதா உனக்கு?''

இவனிடம் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் மீரா.

அவளை விட ஒரு வயது அவன் பெரியவன்தான். என்றாலும் எம் காம். இறுதியாண்டை அவன் படித்துக் கொண்டு இருக்கையில் பி.ஏ. முடித்த அவள் பத்துமாதங்களாக வேலை பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அது மட்டும் இல்லாமல், பொதுவாகவே நம்நாட்டில் பெண்கள் ஆண்களை விடவும் சீக்கிரமாகப் பெரியவர்களாகி விடுகிறார்கள் இல்லையா?

வீட்டின் ஒரே ஆண் பிள்ளை வேறு.

பொதுவாக எப்போதுமே தான்தான் பெரியவள் போல மீராவுக்குத் தோன்றும்.

இன்னும் இந்தக் கவலையைச் சொல்லி அவனுக்குச் சஞ்சலத்தைக் கொடுக்க மனம் இல்லாதவளாக, ''எதற்கும் பார்த்து விட்டுத்தான் வாயேன்,'' என்றாள் லேசாக.

''சரி, போகிறேன். நீயும் கண்டவர்கள் முன்னே வராமல் உள்ளே போய் இரு,'' என்று புத்தி சொல்லிவிட்டுப் போனான் மதன்.

பத்தே நிமிடங்களுக்குள் திரும்பி வந்து சேர்ந்தான்.

''அங்கே மாப்பிள்ளை இல்லை, மீரா. வெளியே போயிருக்கிறாராம். 'நாளைக்குத்தான் உன் தங்கை கணவன் ஆகிவிடப் போகிறானே, இன்றே என்ன தொங்கல்?'' என்று

அவர் அம்மா, தங்கை எல்லாம் கேலி செய்தார்கள். அதனால் வந்துவிட்டேன்,'' என்று வெட்கத்துடன் சிரித்தான்.

''அங்கே... அங்கே எல்லாம்... சிரித்த முகமாய்... சந்தோஷமாக இருந்தார்களா அண்ணா? யாரும் டல்லாக... வருத்தமாக... கோபமாக... அப்படி யெல்லாம் இருக்க வில்லையே?'' என்று தூண்டித் துருவிக் கேட்டாள் தங்கை. ''நன்றாக யோசித்துச் சொல், அண்ணா!'' என்றாள் கெஞ்சுதலாக.

ஆச்சரியத்துடன் தங்கையை நோக்கி, ''ஏன் மீரு? ஏன் இப்படியெல்லாம் கேட்கிறாய்? அங்கு யாருக்கு என்ன வருத்தம் இருக்கப் போகிறது?'' என்று விசாரித்தான் மதன்.

'இவனிடம் சொல்லி விடலாமா?'

சொன்னால் அதன் விளைவுகள்... இல்லை... இல்லை... கொஞ்சம் யோசிக்க வேண்டும், யோசித்துவிட்டு...

''என்ன மீரா?'' என்றான் அவன் மீண்டும்.

''ஓ... ஒன்றும் இல்லையண்ணா, சும்மா ஒரு பயம், ஏதும் குறைகிறை என்று தகராறு வந்து விடக் கூடாதே என்று... என்று.''

அண்ணன் கேலியாகச் சிரித்தான்.

பிறகு, ''பைத்தியம்! பேசாமல் போய் ரெஸ்ட் எடு. யாருக்கும் குறைகிறை வராமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம். நீ மனதை அலட்டிக் கொள்ளாதே, போ!'' என்றான் கனிவுடன்.

இந்தக் கேலியும் குறும்பும் சிரிப்பும் அந்த டெலிபோன் விஷயம் தெரிந்தால் என்ன ஆகும்?



தொண்டைக்குள் வலியுடன் கண் ஓரம் எல்லாம் கரித்துக் கொண்டு வந்தது.

கேலியோ குத்தலோ... எதையும் இப்போது தாங்க முடியாது என்று புரிந்து அண்ணன் சொன்னது போல ஓய்வு எடுக்கும் சாக்கில் தன் அறைக்குள் புகுந்து கொண்டாள் மீரா.

## 3

ஆனால் தனியே இருந்து யோசிக்க யோசிக்கக் கும்பலுக்குள்ளேயே இருந்திருக்க லாம் போலத் தோன்றியது.

பிடிக்காத கணவனுக்கு மனைவியாவது எவ்வளவு பெரிய இழப்பு என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் கிரிதரனுக்கு அவளைப் பிடிக்கவில்லை என்று என்ன நிச்சயம்?

அவன் குரலை அவள் ஒரு போதும் கேட்டது இல்லை.

இந்த டெலிபோன் குரல் அவனுடையதுதான் என்று எப்படி நம்புவது?

அது மெய்யாகவே இருந்தாலும் அப்பாவிடம் என்ன வென்று சொல்லித் திருமணத்தை நிறுத்துவது?

தன் மேல் பழி சொன்னாலும் பரவாயில்லை என்றானே! பழியே சொல்லித் திருமணம் வேண்டாம் என்றாலும் கல்யாணத்தை நிறுத்த அப்பா மற்றும் பெரியவர்கள் ஒப்புக்குவார்களா?

இவ்வளவு செலவு செய்து இவ்வளவு நெருங்கி வந்து விட்ட கல்யாணத்தை நிறுத்தக் கூடாது என்று, வேறு

மாப்பிள்ளை யாரையாவது கொண்டு வந்து தாலி கட்டி விடத்தான் முயல்வார்கள்.

கல்யாணம் நின்றால் என் காலில்தானே விழவேண்டும் என்றானே அழகேச அத்தான்!

அப்படி அவன் காலில் விழுந்து மணமகனாக்கி வைத்தார்கள் என்றால் அது எவ்வளவு பெரிய அசம்பாவிதம்.

அவனை நினைக்கையிலே மீராவுக்குக் குமட்டியது.

அவனை மணந்து மீரா படக்கூடிய துன்பங்கள் ஒரு புறம் இருக்க, அப்பா அம்மாவின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிவிடமாட்டாளா? இப்போதே அப்பா முன்னிலையில் சர்க்கரைப் பேச்சும் அவர் இல்லாத நேரம் விஷக்கொட்டலுமாக அத்தை வருகிறாள். என்னாலே அப்பா தவிர எல்லாரும் அரண்டு போவார்கள். அவள் வீட்டில் வாழ்வது எப்படி? அதைவிடக் கிரிதரனுடைய வேண்டாத மனைவியாக இருப்பது எவ்வளவோ மேல்.

ஒருவேளை, இது அழகேச அத்தானுடைய சூழ்ச்சியாகவே இருந்து மீராவும் மாட்டிக் கொண்டால் அது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்!

கூடவே கிரிதரன் பேசுமுன் டெலிபோனில் அவளை அழைத்த பெண்ணின் குரலும் பேச்சும் மீராவின் நினைவுக்கு வந்தன.

முதல் வார்த்தையிலே சிடுசிடுத்தாள். பிறகும் ஒரு பெண்ணுக்கு எத்தகைய அதிர்ச்சியை அளிக்கப் போகிறோம் என்பதை அறிந்திருந்தும் எவ்வளவு கடுமையாகவும் உதாசீனமாகவும் பேசினாள்.



இவளால் கிரிதரனுடைய வாழ்க்கையை எப்படி மலர வைக்க முடியும்?

மாறாகக் கருகித் தீய்த்து விடுவாள்.

இப்படி யெல்லாம் எண்ணமிட்ட போது மீராவுக்கு இன்னுமொன்றுகூடப் புரிய வந்தது.

இந்தத் திருமணம் நின்றுபோனால் கிரிதரனை அவள் அடியோடு இழக்க நேரிடும். அப்படி அவனை இழந்து விட அவள் தயாரில்லை. அதற்காகத்தான் அவளது மனது இத்தனை சப்பைக் கட்டுகளையும் கட்டுகிறது என்பது தெள்ளெனப் புரிந்தது.

புரிந்ததும் சற்று நேரம் அழுதாள்.

கோழைத்தனமா, சுயநலமா, பிறந்த வீட்டுப்பாசமா?

என்னவென்று புரியாத நிலையில், இனி எது நடந்தாலும் நடக்கட்டும் என்று விதி வழியே வாழ்வை ஓடவிட மீரா முடிவு செய்தாள்.

அந்த நிமிடத்திலிருந்து மீராவின் மனம் இரு கூறாகியது.

ஒன்று இதெல்லாம் அத்தானுடைய சூழ்ச்சியாகவே இருக்கவேண்டும். மெய்யாகவே இருக்கக்கூடாது, கடவுளே என்று விநாடி விடாமல் இறைவனை வேண்டியது.

மறுபாதி, எதுவும் நடவாதது போல் இயல்பாக நடந்து கொள்ள வெகுவாக முனைந்து செயலாற்றியது.

என்ன நடந்தாலும் தாய்க்கொளித்து ஒரு சூலா?

மகளின் கண்களில் கலக்கத்தைக் கண்டு கொண்டு, 'மீருக் குட்டிக்குக் கல்யாண பயம் வந்து விட்டது,' என்று கணவரிடம் சொல்லிச் சிரித்தாள் கற்பகம்.

மகளிடம் வந்து, ஆதரவாய் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

தன்னை மீறி விம்மிவிட்ட மகளை அணைத்து, ''கலங்குவதற்கு ஒன்றும் இல்லை, பாப்பா. கல்யாணத்தில் பயப்பட ஒன்றும் கிடையாது. உன் வீட்டில் எல்லாரும் உன்னிடம் பிரியமாக இருப்பார்கள். கவலைப்படாதே!'' என்று தேற்றினாள்.

முக்கியமானவரைப் பற்றித்தான் சந்தேகம் என்று சொல்ல முடியாமல் மாற்றி, ''உங்களை எல்லாம் விட்டு விட்டு...'' என்று கேவினாள் மகள்.

''இதே ஊரில்தானே இருக்கப் போகிறாய்! இதில் பிரிவு என்ன? நினைத்தால் வந்து விடுவேன். அப்புறம் சும்மா சும்மா வந்து உயிரை எடுக்காதீர்கள் என்று எங்களை விரட்டப் போகிறாய் பார்!'' என்று கேலியாகச் சிரித்தாள் தாயார்.

அதற்குள் சமாளித்துக் கொண்ட மீரா தானும் சிரித்து வைத்தாள்.

அதன் பிறகு ஒவ்வொரு விநாடியும் மீராவுக்கு ஓர் ஆண்டாகத் தோன்றியது.

உள்ளூர நடுங்கியபடி ஒவ்வொரு கணமும் ஏதோ ஒரு கலவரத்தை எதிர்பார்த்தாள்.

''கல்யாணம் நிற்கப் போகிறது!'' என்ற வார்த்தைகளுக்காகப் பயத்துடன் நெஞ்சு பதறக் காத்திருந்தாள்.

அதிகாலையில் எழுப்பிவிடப்பட்டு, எழுந்து குளித்து அலங்காரங்களைச் செய்து கொண்டு அப்போதும் ஏதோ விபரீதத்தையே எதிர்பார்த்தாள்.



''என்னக்கா பலியாடு மாதிரி விழிக்கிறாய்! கொஞ்சம் சிரியேன். அத்தானுக்கு வர வேண்டிய முழியை நீ பிடித்துக் கொண்டால் எப்படி?'' என்று கேலி செய்த தங்கைக்காக வலுக்கட்டாயமாக உதடுகளை இழுத்துப் பிடித்து வைத்தாள்.

ஆனால், உள்ளூர உதறல்தான்.

எங்கோ ஒரு கார் ஹாரன் அடித்தால், இங்கே இவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பயம்! பயம்! பயம்!

டெலிபோன் விஷயம் மெய்யென்றால் அவன் திருமணத்தை நிறுத்த வேறு வழிகளிலும் முயல்வான் அல்லவா?

ஆனால் எல்லாதவிதமான அசம்பாவிதமும் நேராமல் குறித்த நேரத்தில் அவள் கழுத்தில் தாலி ஏறியபோது மீராவால் அந்த நிஜத்தை நம்பக்கூட முடியவில்லை.

அப்படியானால் அந்த டெலிபோன் கால் பொய்யேதானா?

மீண்டும் நெஞ்சுக்குள் குயில்கள் பாடத் தொடங்கின.

குதூகலத்துடன் மாலை மாற்றும்போது அந்தச் சாக்கில் கிரிதரன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் விழிகளைச் சந்திக்கவும் செய்தாள்.

ஆனால், அந்தக் கண்களில் என்ன இருந்தது?

ஒன்றுமே இல்லை.

நேசம் பாசம் என்பன இல்லாததோடு வெறுப்பு. சினம் போன்ற உணர்ச்சிகள்கூட அடியோடு இல்லை.

வெறும் பளிங்குக் கல்போல் உணர்ச்சிகளைத் துடைத்த முகம்.

இயல்பாகவே உணர்ச்சிகளைக் காட்டாத முகமா?

அன்றி, வெகு கவனமாக உணர்ச்சிகளைத் துடைத்து வைத்திருந்தானா?

மீராவுக்கு மீண்டும் நெஞ்சுக்குள் சில்லிட்டது.

மேலே திருமணச் சடங்குகள் அனைத்தும் கிரமப்படி நடந்தேறின.

என்னென்ன நடந்தன என்று அவளிடம் கேட்டால் பேந்த விழித்தபடி கையை விரிக்கக்கூடும்.

அந்த அளவுக்கு எதுவுமே நினைவில் பதியாது இயந்திரப் போக்கில் மூளை செயலாற்றியது.

ஒரு விஷயத்தில் அவளுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி.

எதையும் அவளாக யோசித்துச் செய்ய வேண்டியிருக்க வில்லை.

நில் என்றார்கள், நின்றாள்.

உட்கார் என்றார்கள், உட்கார்ந்தாள்.

அறிமுகம் செய்வித்தார்கள், புன்னகை புரிந்தாள்.

பரிசு தந்தார்கள். வாங்கிக் கொண்டாள்.

ஏவினதை எல்லாம் செய்து கொண்டே போனவள் கடைசியாக ஏவுவதற்கு யாரும் இல்லாமல் அவன் முன்னிலையில் அவள் தனியே நிற்க வேண்டிய நேரமும் வந்தது. நின்றாள்.



## 4

"உள்ளே போனதும் மாப்பிள்ளையின் காலில் விழுந்து வணங்கவேண்டும். பிறகு பால் பழம் எடுத்துக் கொடுத்து உபசரிக்க வேண்டும்..."

கற்சிலைபோல இறுகி நிற்கும் அவன் அருகே செல்வது எப்படி, காலில் விழுவது எப்படி, பால் பழங்களைத் தருவதுதான் எப்படி?

மலைப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் மீரா.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி அகன்ற தோளும் உயரமுமாக ஒரு கிரேக்கச் சிலைபோல் நின்றிருந்தான் கிரிதரன்.

நின்ற தோரணையிலேயே அவளை நெருங்கவிடாமல் ஓர் எல்லை கட்டி வைத்திருப்பது போல மீரா உணர்ந்தாள்.

திருமணம் ஆகிவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்பதெல்லாம் பொய்யாகத்தான் இருக்குமோ?

அல்லது மனம் பலவீனமானவர்கள் அப்படி எல்லாம் மாறுவார்களோ?

இவன் நிற்பதைப் பார்த்தால் உடம்பைப் போலவே உள்ளமும் இரும்பென்று தெரிகிறதே.

அத்தை மகனை மணக்க நேரிட்டால் வாழ்வு பாழாகிவிடும் என்று எண்ணினாளே.

அவனாவது கொஞ்சத்திற்குக் கொஞ்சம் தாய் மாமனான அப்பாவுக்குப் பயந்து நடந்திருக்கக் கூடும்.

ஆனால் இவன்?

'என் வாழ்க்கையைக் கெடுத்து விட்டாயே!' என்று தன் இரும்பு உடலின் பலத்தை எல்லாம் கூட்டி வைத்து அறைவானா?

உதைப்பானோ?

அல்லது 'கண்முன்னே நில்லாதே!' என்று பிறர் பார்க்கக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவானோ?

எவ்வளவு அவமானமாய் இருக்கும்!

பலப்பல யோசிக்க யோசிக்க இதயம் படபடப்பதையும் கைவிரல்கள் நடுங்குவதையும் மீரா உணர்ந்தாள்.

ஒருவேளை, இவன் தன்னைக் கண்டே மிரளட்டும் என்றுதான் இப்படிப் பேசாமல் நிற்கிறானோ?

சே, சே பதறக் கூடாது.

இது அமைதியோடு மூளையில் முழு அளவையும் பயன்படுத்தியாக வேண்டிய கட்டம்.

இந்த நெஞ்சுப் படப்படப்பை எப்படியாவது மட்டுப் படுத்தி... சட்டென, யோகா டீச்சர் கற்றுக் கொடுத்தது நினைவு வந்தது அவளுக்கு.

பெரிய பெரிய மூச்சுகளை நிதானமாக எடுத்து விட்டுத் தன் இதயத் துடிப்பைச் சமனப்படுத்தலானாள்.

''கடவுளே, சமாளிப்பதற்குச் சக்தியையும் புத்தியையும் கொடு.''

அவளது முயற்சி புரிந்து, அதை இடைவெட்டுவது போல அவன் குரல் கேட்டது. ''நீ துணிச்சல்காரிதான் இல்லையா?''



'திமிர்' என்று சொல்லாமல் நாகரிகமாகத் துணிச்சல் என்கிறான்.

கூடவே அவன் பேச்சின் காரணமும் புரிந்தது அவளுக்கு.

தன்னுடைய நிலைமையையும் விளக்கிச் சொல்லி விடலாம் என்று எண்ணி, ''நான்...'' என்று தொடங்கியவள் உடனே நிறுத்தினாள்.

இவனிடம் என்னவென்று விளக்குவது?

''உங்களை இழந்துவிட எனக்கு விருப்பம் இல்லை! அதுதான் அடிப்படைக் காரணம்,'' என்று சொன்னால் அது எரிநெருப்பில் விட்ட எண்ணெயாகி விடாதா?

தன் பதிலுக்காக அவன் காத்திருப்பதை உணர்ந்ததும், ''அந்த டெலிபோன்கால் மெய்யானதாக இருக்கும் என்று நான் நம்பவில்லை!'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் லேசாகச் சிரித்தான்.

சட்டென விழிகள் கூர்மைபெற, ''மெய்யாகவா?'' என்று கேட்டான்.

அந்தப் பார்வை அவளை ஊடுருவியது.

இவனிடம் பொய் சொல்வது கடினம்.

முகம் சற்றுச் சிவக்க, ''ரொ... ரொம்பவும் சந்தேகமாகவே இருந்தது...'' என்று தடுமாறினாள் மீரா.

''ஏன்?''

''யாரேனும் விஷமத்தனமாகக் கல்யாணத்தை நிறுத்த ஒரு முயற்சி செ... செய்திருக்கலாம் என்று...''

''ஸில்லி, அப்படி யார் செய்யக்கூடும்?'' என்றான் அவன் நம்பாத பாவனையில்.

நம் வீட்டு உறவினர்களை அவனிடம் காட்டிக் கொடுப்பதா என்று சினம் தோன்றியபோது, வேறு வழியின்றி, ''என் அத்தை வீட்டில்... அத்தை மகனுக்கு ஓர் ஆசை. அந்த எண்ணத்தில் செய்திருக்கலாம்... என்று...'' தடுமாறினாள் மீரா.

''அத்தைமகனின் ஆசையையே நிறைவேற்றியிருக்கலாம்!'' என்றான் அவன் அலட்சியமாக.

அவள் உடல் குலுங்குவதைச் சலனமற்றுப் பார்த்து விட்டு, ''அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள நீ ஒரு முயற்சியும் எடுக்கவில்லையே!'' என்று குற்றம் சாட்டினான்.

''என் அண்ணனை அனுப்பினேன் — வந்து உங்கள் வீ... வந்து நீங்கள் தங்கியிருந்த இடத்துக்கு...''

கண்ணீர் வெகு தூரத்தில் இல்லை என்ற உணர்ச்சி மீராவுக்குத் தோன்றியது.

ஆனால் பெரிய மகாராஜா ஒரு சாதாரணக் குற்றவாளியை விசாரிப்பது போல நடந்து கொண்ட அவன் முன்னிலையில் அழுவதற்கு வெட்கிப் பல்லைக் கடித்துச் சமாளித்தாள்.

''உன் அண்ணனா? அவன் வந்து என்னைச் சந்திக்கவே இல்லையே.''

''அவன் அங்கே வந்தபோது நீங்கள் இல்லையாம்.''

''இவ்வளவு முக்கியமான விஷயத்தை மீண்டும் வந்து அறிந்து கொள்ள வேண்டும் என்பது கூட அவனுக்குத் தெரியாதா? அவன் என்ன பச்சைக் குழந்தையா? அல்லது முட்டாளா?''



''இரண்டும் இல்லை!'' என்றாள் மீரா, ரோஷத்துடன். ''அண்ணனிடம் விஷயத்தை நான் சொல்லவில்லை,'' என்றாள் தொடர்ந்து.

''பின்னே? ஓகோ! பந்தி விசாரணை செய்துவிட்டு வரச் சொன்னாயாக்கும். வெகு அவசியம்தான்?'' என்றான் ஏளனமாக.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''ஒரு வேளை விஷயம் பொய்யானதாக இருந்தால் அநாவசியமாக அவனைக் கலங்க அடிப்பானேன் என்றுதான் சொல்லவில்லை. நீங்கள்... நீங்களெல்லாம் என்ன மாதிரி மூடில் இருக்கிறீர்கள் என்று முதலில் பார்த்து விட்டு வரட்டும் என்று நினைத்தேன்.''

''அங்கே நான் இல்லையென்று தெரிந்த பின் என்ன செய்தாய்?''

அவன் விடுவதாக இல்லை.

அதற்கு மேல் என்ன சொல்வது என்று அவளுக்கும் புரியவில்லை.

''உன் காதலி நல்லவள் இல்லை. அதனால் அவளிடமிருந்து உன்னைக் காப்பாற்ற நினைத்தேன் என்றால் ஒப்புவானா? அந்தப் பெண்ணைப்பற்றிக் குறைவாக மதிப்பிட்டதற்காகவே மீராவிடம் சினம் கொள்வான்.

''என்னைப்பற்றி உனக்கென்னடி அக்கறை?'' எனக் கேட்க மாட்டானா?

''அத்தானிடம் மாட்டப் பயம் என்றால் அதற்கு நான்தானா அகப்பட்டேன்!'' என்பான் அல்லவா?

உன்னை இழக்க மனம் இல்லை என்ற உண்மையை இவனிடம் ஒப்புவது எப்படி?

முந்தைய நாள் இரவில் கோவையாகத் தோன்றிய சமாதானங்கள் யாவும் இப்போது வலுவிழந்து ஒட்டையாகத் தெரிந்தன.

''பிறகென்ன செய்தாய்?'' என்றான் அவன் சற்று அழுத்தமான குரலில்.

''....''

''ஒன்றுமே செய்யவில்லை அல்லவா?''

குரலை உயர்த்தாமலே கோபத்தைக் காட்ட அவனுக்குத் தெரிந்திருந்ததை மீரா புரிந்து கொண்டாள்.

''எ... என்ன செய்வது என்று...''

''அதைத்தான் டெலிபோனிலேயே சொன்னேனே, என்மேல் பழி சுமத்திவிடு என்றேனே.''

அவளுள் சட்டெனச் சினம் மூண்டது. இவன் என்ன பெரிய நீதிபதிபோல் தன்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிப்பது?

''என்னிடம் சொல்வதற்குப் பதிலாக அதை நீங்களே செய்திருக்கலாமே!'' என்றாள் வெடுக்கென.

அவன் இகழ்ச்சியாக அவளை ஒருமுறை பார்த்து விட்டுச் சொன்னான். ''செய்திருக்கலாம்தான். செய்தே இருக்க வேண்டும் என்பதும் இப்போது புரிகிறது. ஆனால் ஏன் செய்யவில்லை தெரியுமா? ஓர் ஆணின் மீது இந்த மாதிரி பழிகள் கூறப்பட்டால் அது அவனை அவ்வளவாகப்



பாதிப்பது இல்லை. மேலும் எனக்காக நிஷா தயாராக இருப்பாள். ஆனால் உன் கதை அதுவல்லவே. ஒரு கறுப்புப் புள்ளியோடு உன்னை மணக்க யாரும் துணிய மாட்டார்கள். வீணாக ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழாக்குவானேன் என்று நினைத்தேன். அது பிசகு என்பது பிறகுதான் புரிந்தது.''

அவளுக்காக இரங்கினானா? அது மட்டும்தானா? ஏதோ நிழலாடியது. நிமிர்ந்து அவனைக் கூர்ந்து நோக்கி விட்டு, ''அதற்காக மட்டும்தானா? அல்லது இதை உங்கள் வீட்டில் நம்பமாட்டார்கள் என்பதும்கூட ஒரு காரணமா?'' என்று வினவினாள்.

''நம்பாமல் இருக்கக் கூடிய சாத்தியக் கூறும் ஒரு காரணம்தான்,'' என்றான் அவன் சலனமற்று. ''ஏனெனில் நிஷாவைப் பற்றி அப்பாவுக்குத் தெரியும்,'' என்றான் தொடர்ந்து.

அதிர்ந்து போய், ''பின்னே உங்களுக்குத் திருமணத்தில் முழுச் சம்மதம் என்றாரே!'' என்றாள் மீரா.

''நிஷாவை அவருக்குப் பிடிக்கவில்லை,'' என்றான், அவன். சுருக்கமாகத் தொடர்ந்து, ''ஆனால் நாம் பேசிக் கொண்டிருக்கும் விஷயம் அதுவல்ல...'' என்றான்.

அவள் முகம் கேள்விக் குறியாகவும், அவன் முகம் கடுகடுத்தான்.

''நீ ஏன் விரல்கூட அசைக்கவில்லை?'' எனறான் கோபமாக.

மீண்டும் பேச்சிழந்து நின்றாள் அவள்.

''எப்படியாவது கல்யாணம் என்று ஒன்று ஆகிவிட்டால் போதும் என்ற வெறியா?''

புழுவாகி விட்டாற் போல உணர்ந்து, முகம் சிவந்து, "அப்படியில்லை," என்று ஆத்திரத்துடன் மறுத்தாள் மீரா.

"பின்னே, காரணத்தைச் சொல்லுவதுதானே."

ஒரு முடிவுக்கு வந்தவளாக மீரா சொன்னாள். "என்னுடைய நிலைமையில் இருந்து சற்று சிந்தித்துப் பாருங்கள்! நாளை திருமணம் என்ற நிலையில் ஒரு டெலிபோன் கால் வருகிறது — திருமணத்தை நிறுத்த வேண்டும் என்று. அது உங்கள் குரல்தானா என்று எனக்குத் தெரியாது. உங்கள் தந்தையோ உங்களுக்குத் திருமணத்தில் முழுச் சம்மதம் என்று அடித்துச் சொல்லியிருக்கிறார். கூடவே... கூடவே என் கிராமத்து அத்தை மகன் — ரவுடி — கல்யாணம் நின்று விட்டால் மாமா என் காலடியில்தானே விழுந்தாக..." தொண்டையில் பந்து போல விழுந்ததை விழுங்கிக் கொண்டு மீரா மீண்டும் தொடர்ந்தாள்.

"... விழுந்தாக வேண்டும் என்று மிரட்டிக் கொண்டு இருப்பதால், இவனுடைய சூழ்ச்சியாக இருக்குமோ என்ற சந்தேகம் வேறு. டெலிபோன் பேச்சு உண்மை என்றால் அதன் பிரதிபலிப்பு உங்கள் வீட்டில் இருக்கும் என்பதால்தான் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று பார்த்து வரச் சொன்னேன்."

"அது மட்டும் போதுமா?"

"இல்லைதான்... ஆனால் இந்தத் திருமணம் நின்றால் அத்தானை மணக்க நேரும் என்று பயமாக இருந்தது!" என்று நடுங்கும் உதட்டைப் பற்களால் அழுத்திக் கண்ணீரைத் தடுத்து நிறுத்தினாள் அவள்.

அவளது குனிந்த தலையில் பார்வையைப் பதித்து, "என்னை மணப்பதில் பயம் இல்லை என்றால் அது



முகஸ்துதியா அன்றி அலட்சியமா? என்னை மணப்பதால் உனக்குக் கஷ்டம்தான் என்றேனில்லையா? அதுகூடக் கவலை தரவில்லையா?" என்று விசாரித்தான்.

"கவலைதான். ஆனால் அழகேச அத்தானை மணப்பதற்கு எதுவும் மேல் என்று நினைத்தேன்..."

"உன் அத்தை மகன் பயம்தான் நம் மூவர் வாழ்வை அழித்துவிட்டிருக்கிறது என்கிறாயாக்கும்."

மீண்டும் அவனது தோரணை எரிச்சலை மூட்ட, "அது மட்டும் இல்லை. இந்தக் கல்யாணத்துக்காக என் அப்பா எவ்வளவு சிரமப்பட்டுப் பணம் சேகரித்தார் தெரியுமா? அந்தப் பணத்தில் இந்தக் கல்யாண மண்டபத்துக்கு மூவாயிரம் ரூபாய், சமையல்காரர், பூ, மேளம், சாப்பாட்டுச் சாமான்கள், நாட்டியம், அது இதென்று எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? திருமணத்தை நிறுத்தியே விட்டாலும் அதையெல்லாம் திருப்பிக் கொடுப்பார்களா? மேலும் உங்கள் அப்பாவிடம் கொடுத்த பணம்? எங்கள் தரப்பிலிருந்து திருமண்த்தை நிறுத்தினால் அதைத் திருப்பிக் கேட்க முடியுமா? இந்த நஷ்டத்தையெல்லாம் எப்படி ஏற்பது? நீங்கள் ஏற்பீர்களா?" என்று கொட்டித் தீர்த்தாள் மீரா.

இப்போது பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து நின்றான் அவன்.

ஆயினும் விநாடிக்குள் சமாளித்து, "நான் எப்படியும் தந்திருப்பேன். கொஞ்சம் கொஞ்சமாகவேனும்" என்று பதிலுரைத்தான் அவன்.

"எத்தனை ஆண்டுகளில்? மேலும் நீங்கள் கொடுப்பீர்கள் என்றுதான் என்ன நிச்சயம்?"

''அவ்வளவு நம்ப முடியாதவனிடம் வாழ்க்கையை ஒப்படைப்பது மட்டும் எளிதாகிப் போயிற்றோ?'' என்று மடக்கினான் அவன்.

இரவும் பகலுமாகப் பட்ட வேதனையெல்லாம் நினைவுக்கு வர, ''இல்லை, எளிதாக இருக்கவில்லை!'' என்றாள் மீரா சோர்வுடன்.

சற்று நேரம் அங்கே மவுனம் நிலவியது.

பிறகு அவன் சொன்னான், ''இதோ பார், ஓர் அன்பற்ற வாழ்க்கையிலிருந்து மீள உனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தேன். அதை நீ பயன்படுத்திக் கொள்ளவில்லை. அது உன் குற்றம். என்னைப் பொறுத்தவரையில் உன் கழுத்தில் தாலிகட்ட நேர்ந்தது தப்ப முடியாமல் எனக்கு நேர்ந்த ஒரு விபத்து. விபத்தில் உறுப்புகளை இழப்பது போல, நான் நிஷாவை இழக்க நேர்ந்தது. அது முடிந்து போனவிஷயம். மற்றப்படி உன்னை என் மனைவியாக ஏற்பதோ, என்னை உனக்குக் கணவனாக மாற்றுவதோ சாத்தியம் அல்ல. அந்தவிதமான உறவு எதையும் என்னிடம் எதிர்பார்க்க உனக்கும் உரிமையில்லை. கவனி! இனி நமது வாழ்க்கை ஒரு நீண்ட தூர ரயில் பயணம் மட்டுமே. எதிர் எதிரே அமர்ந்து செல்ல 'சீட்' கிடைத்துள்ள வெறும் எதிர்சீட்டுப் பயணிகள் மட்டும்தான். எந்தவிதமான சலுகைக்கும் உரிமைக்கும் இடம் இல்லாத பயணம் போகிறோம். அவ்வளவேதான். இனி எப்போதும் இதை நினைவில் வைத்து நடந்து கொள்,'' என்றான் வெகு தீர்மானமாக.



## 5

மறுப்புக்குரல் எழுப்ப இடம் அளிக்காத, முடிவான குரலில் கிரிதரன் தனது தீர்மானத்தைச் சொல்லி முடித்ததும் முதன் முதலாக மீரா உணர்ந்தது நிம்மதியையே.

இப்போதைக்கு அவன் அவளை வெளியே விரட்டவோ அடித்துத் துன்புறுத்தவோ போவது இல்லை.

நீண்ட தூர ரயில் பயணம் என்று சொன்னதால் இடையில் இந்தத் திருமணத்தை ரத்துசெய்யும் எண்ணமும் அவனுக்கு இல்லை.

ஆகவே, அந்த மாதிரி ரசாபாசங்களும் நடக்கப் போவது இல்லை.

அவளைப் பொறுத்தவரையில், வாழ்க்கை எப்படி ஆனாலும் அது அப்பாவையோ அம்மாவையோ அண்ணன் தங்கையரையோ தாக்கப்போவது இல்லை.

அது ஒரு பெரிய ஆறுதல்.

காலம் எத்தனையோ புண்களை ஆற்றிவிடக் கூடிய வல்லமை வாய்ந்தது என்கிறார்களே.

அந்த நிஷாவின் நினைவு மறந்து இவன் மனமும் மெல்லக் கனிந்துவிடாதா, என்ன.

ஆனால்... அதுவரையில்...

அன்றைய நடப்புகளை மீண்டும் மனதுள் கொணர்ந்து பார்த்தாள் மீரா.

அவளது பதைப்பையும் மீறி அவளுக்கு நினைவிருந்த வரையில் அவன் எந்தவிதமான உணர்ச்சியையுமே வெளிக்

காட்டவில்லை. நண்பர்களின் கேலிக்கும் மாமனாரின் உறுத்தல் பார்வைக்கும் அவனுடைய மூத்த சகோதரியின் கொஞ்சுதலான பார்வைக்கும் எதற்குமே அவனிடம் எந்த விதமான பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

''மாப்பிள்ளை என்னடி, கற்சிலையா!'' என்று அவளுடைய சித்தி கேலியாகக் கேட்டதுகூட மீராவுக்கு நினைவு வந்தது.

தொடர்ந்து அவன் இவ்வாறே நடந்தால் அவளுடைய தந்தை சந்தேகப்பட மாட்டாரா?

அவனது சிரிப்பை அவரும் கண்டிருக்கிறாரே!

தியேட்டரில் பார்த்த அவனது மாயச் சிரிப்பு அசந்தர்ப்பமான மனத்திரையில் ஓடி வந்து நெஞ்சைப் பிளக்க வைத்தது.

இரு பெரிய நீர்மணிகள் விழிகளில் திரண்டு நிலத்தில் விழுந்து சிதறின.

''அழுவதானால் குளியலறை இருக்கிறது!'' என்றான், அவன் - சற்றும் இளகாமல். பொங்கிய அழுகையை அரும்பாடுபட்டு அடக்கினாள் மீரா.

''எனக்கு நீ அந்நியள்!'' என்று கூறும் ஒருவன் முன்னிலையில் தன்னடக்கம் இன்றி அழுது விட்டதே அவமானமாக இருந்தது.

ஆனால், பெற்றோரின் முகம் மீண்டும் உந்த, ''ஒரே ஒரு வேண்டுகோள்,'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் பேசாமல் நிற்கவும், அதையே மேலே பேச அனுமதியாகக் கொண்டு, ''வந்து... என் வீட்டினர் முன்னிலையில் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக அன்பாக நடந்து கொள்வீர்களா...? ப்ளீஸ்...'' என்றாள் கெஞ்சுதலாக.



''எப்படி? கொஞ்சிக்குலாவ வேண்டுமா?'' என்றான் சுளீர் என்று.

அவள் உதட்டைப் பல்லால் அழுத்தியபடி நிற்கவும், ''எந்த விதமான சலுகைக்கும் இடம் இல்லாத பயணம் என்று இப்போதுதானே சொன்னேன்,'' என்றான் அழுத்தத்துடன்.

''எனக்காக இல்லை. அப்பா நிலைமையை எண்ணி...''

''அப்பாவின் நிலைமையை எண்ணி... அம்மாவின் நிலைமையை எண்ணி... உன் நிலைமையை எண்ணி... இருக்கட்டும். என் நிலைமையை எண்ணிப் பார்த்தாயா? இரு ஆண்டுகளாக நிஷாவைக் காதலித்து வந்தேன். அவள் வீட்டில் எதிர்ப்பே இல்லை. ஆனால் அப்பாவோ முதலில் இருந்தே இளகவில்லை. மீறிச்சென்று விட்டால் யாரும் என்னை ஏதும் செய்ய முடியாதுதான். ஆனால் வீட்டின் மூத்தபிள்ளையாக இருந்து கொண்டு பொறுப்பை உதறிச் செல்வது சரியில்லை என்றே பொறுத்திருந்தேன். மெல்ல அப்பாவின் மனம் இளகிவிடும் என்று காத்திருந்தேன். கடைசியில் எல்லா ஆசைகளும் இடிந்து தளர்ந்து... சே!''

அவனுடைய கொதிப்பை முதன்முதலாகக் கண்ட மீரா முதலில் வாயடைத்துப் போனாள்.

பிறகு மெல்ல, ''உங்கள் அப்பாவிடமே இதையெல்லாம்...'' என்று தொடங்கினாள்.

''சொல்லாமல் என்ன? எதற்கும் பிளக்கில் கை வைத்து விடுவேன் என்று மிரட்டுகிறவரிடம் எதைப் பேசுவது? கடைசியாகத்தான் உன் மூலம் முயன்று பார்த்தேன். நீயும் கல்லாக நின்றுவிட்டாய்!'' என்று குற்றம் சாட்டினான் அவன்.

''என்... என் நிலைமையைத்தான் சொன்னேனே...''

''என்ன சொன்னாய்? உன் அத்தை மகனை மணக்க நேர்ந்துவிடுமோ என்று அஞ்சியதாகச் சொன்னாய். அவனை மணக்க முடியாது என்று சொன்னால், உன் கையைக் காலைக் கட்டி மணவறையில் கொண்டு வைத்து விடுவார்களா? அந்த அளவுக்கா...'' என்று சீற்றத்துடன் சொல்லிக் கொண்டே போனவன் சட்டென்று நிறுத்தினான்.

ஒரு கணம் அவன் உடம்பெல்லாம் இறுகுவது போலத் தோன்றியது.

மறுகணம் பழைய உணர்ச்சியற்ற குரலில், ''இதையெல்லாம் பேசுவதும் அலசுவதும் முழு முட்டாள்தனம். வெள்ளம் பொங்கி ஊரையெல்லாம் அழித்த பிறகு அணைகட்ட ஆலோசனை செய்வதுபோல், முழுக்க முழுக்கப் பயனற்ற காரியம். அதனால்...'' என்று திரும்பினான்.

''எனக்குத் தரையில் படுத்துப் பழக்கம் இல்லை!'' என்று கூறிக் கட்டிலில் இருந்து ஒரு போர்வையும் தலையணையும் எடுத்து அவள் அருகில் போட்டான்.

''நான் தூங்கப் போகிறேன். நீயும் தூக்கம் வந்தால் தூங்கலாம்,'' என்று கட்டிலில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

மீரா பிரமித்து நின்றாள்.

அவ்வளவு ஆத்திரத்துடன் பேசிக் கொண்டு இருந்தவன் அரை நொடியில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இவ்வளவு சாதாரணமாகப் பேசி முடிப்பது என்றால் அவன் எவ்வளவு திடசித்தமும் கட்டுப்பாடும் உடையவனாக இருக்க வேண்டும்.



இவன் மனம் காலத்தால் கனியக் கூடும் என்று எதிர்பார்ப்பதும்தான் எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

இலவுகாத்த கிளியின் கதைதான்.

இனி எதிர்காலம் என்ன ஆகும்?

மீண்டும் கண்ணைக் கரித்துக் கொண்டு அழுகை வந்தது அவளுக்கு.

ஆனால் குளியலறையில் அழலாம் என்று கூறியவன் முன்னிலையில் அழவும் மனம் கூசிக் கல்லாய் இறுகிப் போனாள்.

அவன் என்ன நினைத்தானோ, அவளை அழைத்துப் பேசவில்லையே தவிர, மற்றவர்களிடம் வித்தியாசமாக எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

நல்லவேளையாக மறுநாளே அவளைக் கணவன் வீட்டில் கொண்டு விடுவதாகவும் ஏற்பாடு இருக்கவே அந்த வேலைகளில் எல்லோரும் ஈடுபட்டு இருந்ததால் இவர்களை யாரும் தீவிரமாகக் கவனிக்கவும் இல்லை.

அவன் வீட்டினர் கவனித்திருக்கலாம். எதையேனும் கண்டும் இருக்கலாம்.

ஆனால் அங்கே மீரா செய்யக்கூடியது எதுவும் இல்லை.

ஏதோ ஒருவிதமாக மீராவை அவள் கணவன் வீட்டில் விட்டுவிட்டு, ''மீண்டும் விரைவிலேயே வரவேண்டும்,'' என்று வேண்டுகோளையும் விடுத்துவிட்டு மீராவின் தந்தை விடை பெற்றுச் சென்றார்.

முற்றிலும் புதிய மனிதர்களின் இடையில் மீரா செய்வது அறியாது மிரட்சியுடன் நின்றாள்.

காலம் காலமாக நமது தமிழகக் குடும்பங்களில் நடப்பதுதானே, மணமான பெண்ணைக் கணவன் வீட்டில் விட்டுவிட்டுப் பிறந்த வீட்டினர் விலகிச் செல்வது இயல்புதானே. இதற்கு ஏன் இப்படி மனம் கலங்க வேண்டும்? அம்மாவைக் கூட இப்படித்தானே ஒரு நாளில் அப்பா வீட்டில் விட்டு விட்டுத் தாத்தா போயிருப்பார் என்றெல்லாம் மனத்திற்குத் தானே சமாதானம் சொல்லிப் பார்த்தாள் மீரா.

ஆனால், அங்கே அப்பா அம்மாவுக்கு ஆதரவாக இருந்திருப்பாரே என்று எதிர்வாதம் தோன்றவும் மீண்டும் சோர்ந்தாள்.

நல்ல வேளையாக அவளுடைய மூத்த நாத்தனார் — சியாமளா என்று பெயர் — அவளுக்கு வெகு விரைவிலேயே திருமணம் நடப்பதாகவே இருந்தது. அதனால்தானோ அல்லது இயல்பாகவோ அவள் அதிகம் பேசுகிறவளாகத் தெரிய வில்லை.

முகத்தில் சிறு புன்னகையுடன் குறிப்பறிந்து வேலைகளைச் செய்தபடி வளைய வந்தாள்.

இப்போதும் அதே முறுவலுடன் மீராவின் அருகில் வந்தாள்.

''எவ்வளவு நேரம் நிற்பீர்கள், அண்ணி? வாருங்கள், உள்ளே வந்து உட்காருங்கள்,'' என்று மாடியில் ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

''இதுதான் பெரிய அண்ணனின் அறை. இனி உங்களுடை யதும் கூட, பிடித்திருக்கிறதா?'' என்று வினவினாள்.

''எனக்கு எதைப் பிடித்து என்ன செய்வது?'' என்று உள்ளூரப் புலம்பிய மனத்தை அடக்கியபடி சுற்றிலும் பார்த்தாள் மீரா.



ஓர் ஆண் மகனின் அறை.

மூலையில் ஒரு சின்ன மேசை, எதிரே நாற்காலியுடன் நின்றது.

சுவரில் மாட்டிய கண்ணாடி, அருகில் ஒரு ஸ்டாண்டில் அடித்தட்டுகளில் புத்தகங்களும் மேலே சீப்பு, ஷேவிங் சாமான்களும் இருந்தன.

மர அலமாரி ஒன்று மூடியிருந்தது.

இந்த அறைக்குள் புதிதாகக் குடியேறியிருந்த கரும் பச்சை நிறத்து பீரோவும், பிங்க் கலரில் பெரிய பூப் போட்ட விரிப்புகளுடன் கூடிய பெரிய கட்டிலும் சற்றும் பொருத்தம் இன்றி விழித்தன.

அந்தப் பொருத்தமின்மை அடிமனத்தில் விளைத்த பயத்தை மறைத்தபடி, 'பெரிய அறையாக இருக்கிறதே!' என்றாள்.

முறுவலித்தபடி, ''ஆமாம், நீங்கள் இருவரும் ஓடிப் பிடித்து விளையாடலாம்!'' என்று கேலியாகத் தொடங்கிய சியாமளா எப்படியோ முடித்தாள்.

''ரொம்ப முன்னாலேயே கட்டிய வீடு, அண்ணி. தாத்தாவின் கைவரிசை. எங்க எல்லாருக்கும் தனித்தனி அறை. பின்னாலேயே தோட்டம். பார்க்க வருகிறீர்களா, அண்ணி?''

எதையோ சொல்ல முயல்வதும் அதைச் சொல்லும் துணிவின்றியோ அன்றித் தயங்கியோ வேறு மாற்றிப் பேசுவதுமாய்ச் சியாமளா திணறியது மீராவுக்கு நன்றாகவே புரிந்தது.

அண்ணியின் கதை அவளுக்கு எவ்வளவு தூரம் தெரியும்? தன்னிடமே மறுத்துப் பேசியதுகூடத் தெரியுமோ? வழக்கமான நாத்தானர்த்தனத்துடன் இவள் அந்தப் புண்ணில் குத்தி மகிழ்வாளோ?

சிறு வெறுப்புடன் சியாமளாவின் முகத்தைத் திரும்பிப் பார்த்த மீராவின் மனம் தன்னைத்தானே குட்டிக் கொண்டது.

இவள் அந்த மாதிரிப் பெண் அல்ல. இவளது சாந்த மயமான முகம் கீழ்த்தரமான எண்ணங்களை என்றைக்குமே அறிந்திருக்க முடியாது.

திக்குத்தெரியாத காடுபோலத் தோற்றமளித்த இந்த வீட்டில் இவள் ஒரு நம்பகமான துணையே.

நெஞ்சைச் சுற்றியிருந்த இறுக்கம் சற்றுத் தளரப், "போகலாம் வாருங்களேன்," என்று புன்னகை செய்தாள் மீரா.

## 6

"என்னை நீ என்றே சொல்லுங்கள், அண்ணி. உங்களைவிட நான் சின்னவள் தானே. உங்களைப்போல் படிக்கவும் இல்லை. என்னைப் போய் நீங்கள் வாருங்கள் போங்கள் என்றால் எப்படியோ இருக்கிறது. பாருங்கள், உயரம்கூட உங்கள் காதளவுதான் வருகிறேன்," என்று மெல்லச் சிரித்தாள்.

"இந்தக் கிணற்றுத் தண்ணீர்தான் குடிப்பதற்கும் நன்றாகவே இருக்கும்..."

கிணற்றின் அகலமான கைப்பிடிச் சுவரின்மீது சாய்ந்து எட்டிப் பார்த்தாள் மீரா.



ஆழத்தின் இருட்டை உள்ளடக்கிக் கிணற்று நீர் மேற் பரப்பில் பளபளத்தது.

இப்படியே உள்ளே பாய்ந்துவிட்டால் எல்லாத் துயரமும் தீர்ந்து போகுமே!

திடுமென இந்த எண்ணம் தோன்றிய வேகத்திலேயே இதன் பயனின்மையும் மீராவுக்குப் புரிந்தது.

முதலாவதாக விழவிடாமல் இந்தச் சியாமளாவே மீராவைப் பிடித்து இழுத்து விடக்கூடும்.

விழுந்தாலும் ஒரு குரல் எழுப்பி விட்டாளானால் உடனே மற்றவர் ஓடிவந்து அவளைக் காப்பாற்றிவிட முடியும்.

அதையும் மீறிச் செத்து விட்டாலும் மீராவின் பெற்றோருக்குத் தாளாத வேதனையோடு அவமானமும் வந்து சேர்ந்து விடும். தங்கைகளின் கதி என்ன ஆகுமோ? கடைசியான தாகவும் முக்கியமானதாகவும் இருந்த இன்னொரு காரணம் அவளுக்கு நீந்தத் தெரியும்!

மீட்சி இந்த வழியில் வருவதற்கு இல்லை என்பதை உணர்ந்தபடி மெல்லத் திரும்பினாள் மீரா.

கணவன் வீட்டிற்கு வந்து ஒரே ஒரு நாளில் மீரா நிறையத் தெரிந்து கொண்டாள்.

இந்த வீட்டில் உள்ளவர்களைப் பொறுத்த வரையில் சியாமளா மட்டுமன்றி மைத்துனன் அருணும் மீராவிடம் இதமாகப் பழகினான்.

சியாமளா, அருண் இருவருமே வெளிப்படையாக எதையும் காட்டிவிடவில்லைதான் எனினும் இருவருக்கும் தன்னிடம் ஒரு பரிவு - இரக்கம் இருப்பதை மீரா உணர்ந்து கொண்டாள்.

ஆனால், அந்த இரக்கமும் மீராவுக்கு மிகுந்த வேதனையை அளித்தது. பிறர் பார்த்துப் பரிதாபப்படும் நிலையில் இருக்கிறோமே என்று நொந்தாள்.

இந்தப் பரிவைவிட இளைய நாத்தனார் யசோதாவின் வெளிப்படையான வெறுப்பு மீராவுக்கு மேலானதாகத் தோன்றியது.

யசோதாவின் முறைப்பும் வெறுப்பும் மீராவுக்கு முதலில் வியப்பை அளித்தன, காரணம் புரிந்த பின் வியப்பு மறைந்து போயிற்று.

அந்த நிஷா, யசோதையின் நெருங்கிய தோழியின் சகோதரியாம். நிஷாவின் நிறத்திலும் அழகிலும் உடை யணியும் விதத்திலும் இவளுக்கே ஒரு மயக்கமா, தன் லட்சியப் பெண் அண்ணியாக வரப் போகிறாள் என்று ஆவலோடு இருக்கையில் அந்த எண்ணத்தில் மண்ணை வாரிப் போட்டுவிட்ட மீரா எட்டிக்காயாய்க் கசந்தாள்.

திருமணம் முடிந்தபின் ஒருநாள், கிரிதரன் வேலைக்குச் சென்றபிறகு, மீராவுடைய மாமனார் அவளை அழைத்துப் பேசினார்.

உலகம் அறியாத ஒரு பெண்ணின் மகிழ்ச்சியைக் குலைத்துவிட்டோமே என்ற குறுகுறுப்புச் சிறிதும் இன்றிப் பெரிய மனிதத் தோரணையில் வெகு அமர்த்தலாக அவர் பேசியதைக் கேட்க மீராவுக்குத்தான் பிரமிப்பாக இருந்தது.

பிள்ளையைப் பெற்ற ஒரு தகப்பனாருடைய கடமையை மூத்த மகனது விஷயத்தில் அவர் நிறைவேற்றி விட்டாராம். அடக்கமும் அறிவும் உள்ளவள் என்று மீராவைத் தேர்ந்து எடுத்து அவனுக்கு மணம் முடித்து வைத்ததோடு அவரது



கடமை தீர்ந்ததாம். அவர் தம் கடமைகளைச் சீராகச் செய்து முடித்த மாதிரி, அவளும் இனி ஒரு மனைவியின் பொறுப்பை நல்லபடியாகச் செய்ய வேண்டுமாம்.

நாக்கு நுனியில் துடித்துக் கொண்டிருந்த கேள்வியை மீராவால் கேட்காதிருக்க முடியவில்லை, ஆனால், போதிய துணிச்சலும் இல்லாமல், ''ஆனால்...ஆனால் மாமா, அவருக்கு முழுச் சம்மதம் என்று... என்று நீங்கள்...'' என்று தடுமாறினாள்.

அவர் பதில் தயாராக வைத்திருந்தார்.

வீட்டைவிட்டு வெளியே சென்று கை நிறையச் சம்பாதிக்கும் பிள்ளைகளின் பார்வை அங்கும் இங்குமாய் மேய்வது இயல்புதானாம். அது ஒன்றும் பெரிய தப்பில்லை யாம். கால்கட்டு விழும்வரை தறிகெட்டுச் சுற்றுவது ஆண்பிள்ளைகளுக்கு இயற்கையாக அமைந்த குணந்தானாம். கல்யாணம் என்று ஆனபிறகு, அந்த இயல்பைக் கட்டுப்படுத்தி நல்லபடியாக வாழ்க்கையை அமைத்துக் கொள்வது கட்டினவளின் கெட்டிக்காரத்தனம்தானாம்.

''ஆமாம், மாமா, அவர்...'' என்று மீரா மீண்டும் தொடங்கினாள்.

''ஊகூம், மேலே ஒரு வார்த்தை பேசக்கூடாது,'' என்று காதுகளைப் பொத்திக் கொண்டார் அவர். ''நேற்று வரையில் அவன் என் பிள்ளை. கண்டிக்கலாம். கை நீட்டி அடிக்கவும் செய்யலாம். ஆனால் இனி அவன் உன் புருஷன், புருஷன் - பெண்டாட்டி விவகாரங்களில் - மற்றவர்கள் - அது பெற்றவர்கள் ஆனாலும் - தலையிடுவது கொஞ்சமும் சரியில்லை. உன்னைப் பற்றி அவனோ, அவனைப் பற்றி நீயோ ஒரு வார்த்தை என் காதில் போடப்படாது. போட்டாலும் நான்

அதைக் காது கொடுப்பதாக இல்லை. இப்போது நான் லைப்ரரிவரை போய் வருகிறேன். உன் அத்தை தேடினால் சொல்லிவிடு,'' என்று கிளம்பிவிட்டார் தாமோதரன்.

செய்கைக்கு வகையற்ற ஆத்திரத்தில் நெஞ்சு புகைய வெறுமனே வெறித்தாள் மீரா.

சொன்னதைச் செயலிலும் காட்டினார் மாமனார்.

கிரிதரனுடைய உதாசீனத்தை அவர் உணர்ந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. ஒன்றுமே நடக்காதது போல் ஒதுங்கிக் கொண்டார்.

மாமியாரைப் பொறுத்தவரையில் பாம்பென்றோ பழுதை என்றோ வரையறுக்க முடியாத பாத்திரமாய் மீராவுக்குத் தோன்றினாள்.

தனிப்பட்டு மருமகளிடம் அவள் கடுமையாக நடந்து கொள்ளவில்லைதான். ஆனால் சலுகை காட்டவும் இல்லை.

பசித்தால் சாப்பிடு, அல்லது சும்மாகிட என்பது போல ஓர் இயல்பு.

இந்த இயல்பு, மகனது பற்றற்ற போக்கினால் துணிவு பெற்று, அவ்வப்போது கொட்டவும் துணிந்தது.

எந்த வெறுப்பும் அசட்டையும் கொட்டலும் மீராவைப் பாதித்திராது, கிரிதரனின் துணை இருந்திருந்தால்.

ஆனால் அது அணுவளவும் கிடையாது என்பதை அவன் ஒவ்வொரு விஷயத்திலும் காட்டிக் கொண்டான்.

மீரா அங்கு வந்து இரண்டு நாள்களில் சம்பளதினம் வந்தது.

தம்பி தங்கைகளுக்கு மட்டும் பைவ் ஃஸ்டார் வாங்கி வந்திருந்தான் கிரிதரன்.



''அண்ணிக்கு...'' என்று இழுத்த பெரிய தங்கையிடம், ''அவளுக்கு நான் என்ன வாங்கி வருவது...'' என்று விட்டேற்றியாகச் சொல்லிவிட்டுப் போனான்.

அன்று இரவில் பாத்திரங்களைத் துலக்கிவிட்டுப் படுக்குமாறு மருமகளிடம் சொன்னாள் தேவகி.

மேலும் மூன்று தினங்கள் கழிந்தன.

வழக்கமாகப் பால் வாங்கி வரும் அருண் எங்கோ போயிருந்தான்.

''நான் வாங்கி வருகிறேன்,'' என்று பால் கார்டை எடுத்துக்கொண்டு டெப்போவுக்குப் போனாள் மீரா.

பால் வரத் தாமதமானதோடு, லேசான மழையும் பிடித்துக் கொண்டது.

மழையில் நனைந்தபடி படியேறியபோது, ''அவள் என்ன உப்பா, சர்க்கரையா, சற்று நனைவதற்குள் கரைந்துவிட? காரணம் இல்லாமல் அலட்டிக் கொள்ளாதே, சியாமி!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் கிரிதரன்.

''இரண்டும் இல்லை, எட்டிக்காய்!'' என மனதிற்குள் சொல்லிக்கொண்டே மீராவின் விழிநீர் மழை நீரோடு கலந்து கன்னத்தில் இறங்கியது.

மறுநாள், இஸ்திரி போட்டு வைத்திருந்த மீராவின் சேலையைக் கேளாமலே எடுத்துக் கட்டிக் கொண்டு பள்ளிக்குப் போனாள் யசோதா.

சேலையைக் காணாமல் யாரிடமும் கேட்கவும் துணிவு இல்லாமல் திண்டாடிய மீராவுக்கு மாலையில் திரும்பிய நாத்தனாரைப் பார்த்ததும் ஆத்திரம் வந்தது.

''சொல்லிவிட்டுக் கட்டியிருக்கக் கூடாதா?'' என்று மனம் தாளாமல் கேட்டுவிட்டாள்.

''உங்களிடம் சொல்லி விட்டுத்தான் ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும் என்கிற சட்டம் எதுவும் இல்லை,'' என்று எடுத்தெறிந்து பேசிவிட்டு உள்ளே போனாள் யசோதா.

போகிற போக்கில், ''அண்ணன் வாழ்க்கையை அழித்து விட்டு அதிகாரம் வேறயா?'' என்ற தெளிவான முணுமுணுப்பு வேறு.

தங்கையின் குணம் அறிந்த சியாமளா, சங்கடத்துடன் எங்கோ பார்க்க, மீரா அயர்ந்து போனாள்.

கொண்டவன் துணையிருந்தால் கூரையேறிக் கூவலாம் தான். அது இல்லாதபோது எல்லாருக்கும் இளப்பம்தானே.

கண்ணா, பாப்பா, மீரு, அக்கா என்று அன்பிலேயே பழக்கப்பட்டு விட்டிருந்த மீராவுக்கு இந்தச் சூழ்நிலை மூச்சு முட்டியது.

ஆனால் இதிலிருந்து மீளவும் வழி தெரியாமல் போயிற்று.

எப்போதுமே தான் ஒரு புத்திசாலி என்ற எண்ணம் மீராவுக்கு உண்டுதான்.

ஆனால், நல்ல மார்க்குகள் வாங்கி முதல் வகுப்பில் பாஸ் பண்ணுவதனாலும், கொடுத்த காரியங்களைத் திறம்படச் செய்வதனாலும் யாரும் புத்திசாலியென்று ஆகிவிடுவது இல்லை என்று அவளுக்கு அப்போதுதான் புரிந்தது.

எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும்கூட அவள் மாட்டிக் கொண்டிருந்த அந்தச் சிக்கலை அவிழ்க்க ஒரு வகையும் அவளுக்குத் தோன்றாது.



சின்னப் பிள்ளை தவறு செய்தால் அதட்டி வழிக்குக் கொண்டு வரலாம். அறியாது வழி தப்பிப் போகிறவர்களையும் பெரியவர்களிடம் முறையிட்டுத் திருத்தலாம்.

ஆனால், உலகம் அறிந்த ஒருவன், கட்டிய மனைவியிடம் நாம் என்றுமே அன்னியர்தாம் என்று கூறிவிட்ட பிறகு யாரிடம் முறையிட்டு என்ன பயன்?

மேலும் என்னவென்று முறையிடுவது?

அவன் என்ன குடித்தானா? சூதாடினானா? வேறு சின்ன வீடு சென்றானா? அன்றி அவளைத்தான் அடித்தானா? உதைத்தானா?

எதுவுமே இல்லையே.

மூடிக்கொண்ட மனக்கதவை மற்றவர்களால் எப்படித் திறக்க முடியும்? இரும்பு மனம் என்றாகிலும் இளகித் தானாகத் திறந்தால்தான் உண்டு.

அந்த நம்பிக்கைக்குச் சிறிதளவும் இடமே இல்லாதபடி அவன் நடந்து கொள்ளவும் மீரா மனம் தளர்ந்தாள்.

அங்கே பாசம் காட்டிய சியாமளாவிடம்கூட அவளால் மனம்விட்டுப் பேச முடியவில்லை.

பிறரிடம் இரக்கத்தை விரும்பாத மீராவின் சுயமரியாதை ஒரு தடையென்றால் தன் வீட்டினரின் போக்கை எண்ணிச் சியாமளா கொண்டிருந்த அவமானம் இன்னொன்றாக இருந்து அவளது நாவையும் கட்டிப் போட்டது.

மேலும், ஒரே மாதத்தில் மணமாகிப் போய்விடப் போகிறவள் அவள். அதன்பின்...

'இப்படியே போனால் இந்த வெறுப்புச் சூழலில் மூச்சு முட்டியே செத்துவிடுவேன்!' என்று நினைத்தாள் மீரா.

இந்த வாழ்க்கையை அமைத்துத் தரத் தந்தை பட்ட பாடு!

தந்தையின் நினைவு உடனடியாகச் சமாளிக்கவேண்டிய பிரச்சினையை நினைவுறுத்த அன்று இரவில் கிரிதரனிடம் தானாகப் பேசினாள்.

''எங்கள் வீட்டுக்குப் போய் வரட்டுமா?'' என்று அவனிடம் அனுமதி கேட்டாள்.

கையிலிருந்த புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தாமலேயே, ''உன் வீட்டிற்கு நீ போவதற்கு என்னைக் கேட்பானேன்?'' என்றான் அவன்.

அவள் பதில் சொல்லாமல் நிற்கவும் நிமிர்ந்து, 'இந்த மாதிரி கேள்விகளுக்கோ அனுமதிக்கோ நம் உறவில் இடம் இல்லை மீரா! நீ உன் வீட்டிற்குப் போவதோ வருவதோ அன்றி, இங்கேயே இருப்பதோ எதுவானாலும் உன் விருப்பம் போலச் செய்து கொள்ளலாம். எதிலும் நான் தலையிடுவதாக இல்லை,'' என்று மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்துவிட்டான்.

அந்தப் புத்தகத்தைப் பிடுங்கி விசிறியடிக்க வேண்டும் போலத் தோன்றிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு தன் போர்வையை எடுத்து விரித்தாள் மீரா.

மறுநாள் மாமியாரிடம் மாலையில் திரும்பிவிடுவதாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, அவளது முணுமுணுப்பைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கிளம்பிவிட்டாள் அவள்.



7

பிறந்த வீட்டில் மீராவுக்கு ஏகப்பட்ட வரவேற்பு.

''மாப்பிள்ளை வரவில்லையா?'' என்ற தாயாரின் கேள்விக்கு, அதை எதிர்பார்த்து யோசித்து வைத்திருந்த பதிலை உடனே தந்தாள்.

''அவருக்கு ஒரே வேலையம்மா. கல்யாணத்துக்கு முந்தியிருந்த டூர் ஸ்டேட்மெண்ட் எல்லாம் கொடுத்து கணக்கு ஒப்புவிக்க வேண்டுமாம்.''

''இருந்தாலும் முதன் முதலாக வரும்போது சேர்ந்து வர வேண்டாமா, பாப்பா?''

''அவருக்கு இந்த வெளிச் சம்பிரதாயம் எல்லாம் கொஞ்சம்கூடப் பிடிக்காது அம்மா! எதையும் வெளியே காட்டிக் கொள்ளவும் மாட்டார்.''

''கல்யாணத்தின் போதுகூட அப்படித்தான், இல்லையாக்கா?''

இதே ரீதியில் பேச்சு சற்று நேரம் ஓடியது.

ஒரு கிண்ணத்தில் பால்கோவா கொணர்ந்து வைத்து, ''சாப்பிட்டுப் பார், கண்ணு!'' என்றாள் தாயார்.

ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டு விழுங்கி நெட்டை விட்டுவிட்டு, ''என்னம்மா, பால்கோவா எல்லாம் தடபுடல்?'' என்று வினவினாள் மகள். மேலும் ஒரு ஸ்பூன் பால்கோவா வாயினுள் தஞ்சம் புகுந்தது.

''உனக்குப் பிடிக்குமே. கொண்டு வரலாம் என்று செய்தேன். இன்று மாலையில் அப்பாவும் நானும் உன்னைப் பார்க்க வருவதாக இருந்தோமா...''

மீரா வந்த காரியமும் அதுவேதான்.

எப்படியும் விரைவில் பிறந்த வீட்டினரின் வருகையை எதிர்பார்த்தாள் அவள்.

விரைவில் மட்டும் அல்ல, அடிக்கடியும்கூட.

கண்ணு, பாப்பா, வாலு என்று கலகலப்பாய் அன்பை வெளிக்காட்டிப் பழகிய குடும்பம் அவளுடையது.

இந்தக் குடும்பம் வரும்போது புகுந்த வீட்டு மனிதர்கள் இவர்கள் மனம் நோக நடந்து கொள்வார்களோ என்று அஞ்சினாள்.

அதிலும், 'கொஞ்சிக் குலவவேண்டுமா?' என்று இரக்க மற்றுக் கேட்ட கணவனை எண்ணுகையில் மிகவும் கவலையாக இருந்தது.

மகளின் வாழ்க்கை பற்றி இவர்களும் கூர்ந்து பார்ப்பார்கள் அல்லவா? பெற்றவர்கள் ஆயிற்றே.

தன் வாழ்க்கையை என்ன செய்வது என்று அவள் இன்னமும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. வரமுடியவில்லை என்றும் கூறலாம்.

அதுவரையில் தன் பெற்றவர்களையும் உடன்பிறந்தவர் களையும் அனாவசியமாய் வேதனைக்குட்படுத்த அவளுக்குப் பிரியமில்லை.

எனவே இவர்கள் யாரும் அங்கே வந்து எதையும் தெரிந்து கொண்டு விடாமல் தடுப்பதற்காகவே அவர்களை முந்திக் கொண்டு அவள் இங்கே வந்திருந்தாள்.

ஆனால், ஆவலாகப் பேசிய தாயிடம் பட்டென்று அதைச் சொல்லவும் வாய் வரவில்லை. வாளாவிருந்தாள்.



''பெரிய்ய ஆள் இந்த அக்கா, அம்மா வருகிறேன் என்றால் 'வாங்கம்மா' என்று ஒரு வார்த்தை வாயில் வருகிறதா பாரேன்,'' என்று கேலிச் சிரிப்புடன் இழுத்துப் பேசினாள் சின்னத் தங்கை சுமி.

''காபி டிபன் தர வேண்டும் என்று கணக்குப் பார்க்கிற வளாயிருக்கும்!'' என்று கண்ணை விரித்தாள் மீராவின் அடுத்த தங்கை ராதை.

''நிஜம்தானாடீ?'' என்று வியப்புக் காட்டினான் அண்ணன் மதன்.

ஒரு சிரிப்பையும் ஓர் அலுப்பையும் முகத்தில் பூசிக் கொண்டாள் மீரா. ''ச்சு. அதெல்லாம் இல்லைண்ணா! இந்த வாலுங்கள் சொல்லுகிறதென்று நீயும் கேட்கிறாயே... ஆனால்...''

''ஆனால்... என்ன கண்ணு?'' என்று அதற்குப் பதறி விட்டாள் தாயார். புகுந்த வீட்டில் அன்பற்ற சூழலை அனுபவித்தவள் ஆயிற்றே. ''அங்கே எல்லாரும் பிரியமாய் இல்லையாம்மா?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

''சேச்சே கவலைப்படும்படியாக ஒன்றும் இல்லை, அம்மா. ஆனால் எங்கள் அத்தைக்கு ஒன்றுவிட்ட தங்கை ஓர் அம்மா...''

''உனக்குச் சின்ன மாமியார் முறையாக வேண்டும்.''

''இம். அவர்கள் வந்தவர்கள் சும்மா போகாமல் என் அத்தையிடம், ''உள்ளூரிலேயே அதுவும் மூத்த பெண்ணாய் எடுத்துவிட்டாயே!'' என்று துக்கம்போல விசாரித்தார்கள்.''

''ஏனாம்?'' என்று ஆத்திரத்துடன் பாய்ந்தன நாலு ஜோடிக் கண்கள்.

''உள்ளூரிலேயே பிறந்த வீடு இருந்தால் ஓயாமல் வரப்போக இருப்பீர்களாம். நானும் அதேபோல இங்கே வர, தங்க என்று இருந்து கடைசியாக அவரையும் இழுத்துக் கொண்டு இங்கேயே வந்து விடுவேனாம். பிறந்த வீட்டின் போக்குவரவு அதிகம் இருந்தால் புகுந்த வீட்டில் மனசு ஒட்டாதாம்...''

''உளறல்!''

''நீ அப்படிக் கெட்ட பெண் இல்லையே, கண்ணம்மா.''

''மெய்தான்ம்மா. ஆனால் என்னைப்பற்றி அத்தைக்குத் தெரியாது இல்லையா? அந்தச் சின்ன மாமியார் போன பிறகு ரொம்பவும் 'மூடி'யாக இருந்தார்கள். இன்று இங்கே வருவதாகச் சொன்னதும் தலையில் கைவைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார்கள். 'சீக்கிரம் வந்துவிடுவேன். அவர் வேறு கூட வரவில்லை!' என்று ரொம்பவும் சொன்ன பிறகுதான் கொஞ்சம் தெளிந்தார்கள். இந்த மாதிரி சந்தேகம் வளர்ந்தால் பிறகு நிம்மதியே இராதில்லையாம்மா? அதனால்... கொ... கொஞ்ச நாள் என் அத்தைக்கு என் மேல் நம்பிக்கை வரும் வரையிலும் அங்கே நீங்கள் யாரும் வர வேண்டாம் அம்மா,'' என்றாள் கொஞ்சும் குரலில் மீரா.

யாரும் பேசாமல் அங்கே மவுனம் நிலவியது.

தாயின் முக வாட்டத்தைக் காணச் சகியாமல் அவள் கரத்தைப் பற்றிக் ''கொஞ்சம் நாள் தானம்மா, என்னம்மா?'' என்று இதமான குரலில் மேலும் கொஞ்சினாள்.

சொல்லும்போதே மனம் நொந்தது. ஆனால் சொல்லாமல் தீராதே!



எதையோ நினைத்தாற்போலக் கற்பகத்தின் வாடிய முகம் மீண்டும் மலர்ந்தது. ''அதற்கென்ன மீரும்மா? அப்படி எத்தனை நாள்கள் பாராது இருந்துவிடப் போகிறோம்? இவ்வளவு காலம் கழித்து இங்கே எல்லாம் நன்றாகி விடவில்லையா? அங்கேயும் அதேபோல் நிம்மதி வந்துவிடும். நீ இவர்களோடு பேசிக்கொண்டு இரு. உனக்குப் பிடித்த உருளைக்கிழங்கு குருமாவைச் செய்து விடுகிறேன். பிறகு சாப்பிடலாம்,'' என்று உள்ளே போனாள்.

''சனிக்கிழமை எல்லாருக்கும் லீவு இருக்கவேண்டுமே என்று நினைத்துக்கொண்டே வந்தேன். ஆமாம். அதென்னடி இங்கே நன்றாகி விட்ட மாதிரி என்று அம்மா ஏதோ சொல்லுகிறார்கள்? நன்றாவதற்கு நம் வீட்டில் கெடுதல் ஒன்றும் கிடையாதே!'' என்று விசாரித்தாள் மீரா.

இரு கைகளையும் சொம்பு மாதிரித் தரையில் வைத்துக் கண்ணை உருட்டி, ''அத்தைகளை மறந்துவிட்டாயே!'' என்று அடித் தொண்டையில் பேசினாள் ராதை.

''ஓ... ஆனால் அது தீராத கதையாயிற்றே!''

''தீர்ந்தே போயிற்று!'' என்று குதூகலத்துடன் கதை சொல்லத் தொடங்கினாள் ராதை.

''நீ உன் வீட்டுக்குப் போனவுடனேயே இங்கே அத்தையின் பல்லவி தொடங்கி விட்டது. படுபயங்கரமான பாட்டு. 'அழகேசனுக்கு மீராவைத்தான் தராமல் ஏமாற்றிவிட்டாய். சொந்தம் விட்டுப் போகாமல் இருக்க ராதாவையாவது பண்ணிக்கொடு,'' என்று யுத்த ராகத்தில் தொடங்கினார்கள் பெரியத்தை... அப்பா ஸயன்ஸ் ஆராய்ச்சி என்று சொன்னால் சாக்குச் சொல்வதாக அழத் தொடங்கி விட்டார்கள்.

'சின்னப்பெண், பதினேழு வயதுதானே ஆகிறது!' என்றால் 'அந்த வயதில் மூத்தவனைப் பெற்றுவிட்டேன்,' என்றார்கள். பாவம். பணம் இல்லையெனச் சமாளிக்கப் பார்த்தார் அப்பா, அம்மாவின் நிலங்களைத் தந்தால் போதுமாம். செலவைத் தாமே பார்த்துக் கொள்வார்கள். என்ன தாராள மனசு பார்த்தாயா? எனக்கு ஒரே பயம். அடிமேல் அடி அடிக்க அப்பா கரைந்துவிடக் கூடாதே என்று. பலமுறை அத்தைகள் கரைத்த அப்பாதானே.''

''அந்த அழகேசன் கழுத்தை நெரித்து விடலாமா என்று இருந்தது எனக்கு,'' என்றான் மதன் கோபத்துடன்.

அத்தையின் கோரிக்கை நிறைவேறியிருந்தால் வீட்டினர் முகத்தில் இந்த மகிழ்ச்சி இருக்க முடியாது என்பது தெரிந்தபோதும் சற்றுப் பயத்துடனேயே, ''அப்புறம்?'' என்று கேட்டாள் மீரா.

''எப்படியோ, அப்பா அப்போது உறுதியாக நின்றுவிட்டார். ''உறவில் பெண் கொடுப்பதோ எடுப்பதோ என் வீட்டில் நடக்காது. சந்ததி வீக்காயிடும். அந்தப் பேச்சை விடுங்கள்,' என்று அதட்டிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எங்கோ வெளியே போவது போலத் தோன்றியது. அப்பா கண் மறைந்தால்தான் அத்தைமாரின் கனிவெல்லாம் மறைந்து சுயரூபம் வெளியாகத் தொடங்கிவிடுமே. அம்மாவை அடிக்காத குறை. நாயே, பேயே,'அவனை மாற்றிவிட்டாயே, மருந்து வைத்தாயா, அது இது என்று ஆயிரம் நாம அர்ச்சனைதான். அம்மா வழக்கம்போல மவுனம்தான். அம்மாவைத் திட்டி அலுத்துக் கடைசியில் நம்மிடம் வந்து நின்றார்கள் அத்தைமார். பெயர் வைத்ததில் தொடங்கி பழிதான். அழகாய் அழகு சுந்தரி, அதிரூபம் என்று



வைக்காமல் மீரா, கீதா, ராதா, சோதா என்று வைத்து விட்டார்களாம்!'' என்று ராதை நீட்டிச் சொல்லவும் எல்லாருக்கும் சிரிப்பு வந்தது.

சிரித்து முடிக்கவும் அவள் மீண்டும் தொடர்ந்தாள். 'பெண்ணை வளர்த்திருக்கும் தினுசில் பெயர் நாறிப் போய்விடுமே என்றுதான் வீட்டுக்கு ஒரு பெண்ணையாவது எடுத்துக்கொள்ளலாம் என்று பார்த்தால் நமக்குக் கொடுப்பினை இல்லையாம். வெளிவீட்டார் நம் அத்தைமார் மாதிரி பொறுமையாக இருப்பார்களா? பத்தே நாளில் உன்னை வாழாவெட்டியாய் அடித்துத் துரத்தி விடுவார்களாம்... அட என்னக்கா, முகம் வெளுக்கிறாய்? அந்தப் பொறாமைக் காரர்கள் பேச்செல்லாம் அப்படியே நடந்துவிடுமா என்ன?'' என்றாள் அதட்டலாக.

''நிச்சயம் நடக்காது!'' என்றான் மதன் அழுத்தமாக.

''ஆமாம், நடக்காதுதான்,'' என்றாள் மீரா பயத்துடன்.

''அப்புறம் கேள். நீ அப்படி வந்துவிட்ட பிறகு எங்கள் இருவருக்கும் திருமணமே ஆகாதாம், கன்னி கழியாமல் நாங்கள் வருடக்கணக்கில் நிற்கும்போதுதான் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் புத்தி வருமாம். இரண்டாம் தாரமாகவாவது பண்ணிக்கொள், என்று அத்தைமார் காலில்போய் இவர்கள் இருவரும் விழுவார்கள். ஹூம், திமிரைப் பாரேன்,'' என்றாள் ஆத்திரத்துடன்.

''இவர்கள் வந்தாலே இதே கலகம்தான். இவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லக்கூடாது அம்மாவுக்கு. இந்த மாதிரி இவர்கள் பேசக்கூடும் என்பதை அப்பாவால் நம்பவே முடியாது. அப்பாவைப் பொறுத்தவரையில் அவருடைய

அக்காமார் உத்தமி ரத்தினங்கள். அவர்கள் கண் முன்னால் இவர்களின் பாசாங்கும் அப்படித்தானே!' என்று குமுறினான் மதன்.

''ஏதோ நல்ல காலம். அதெல்லாம் ஒரு முடிவுக்கு வந்ததே! மேலே கேள் அக்கா. சுமார் ஒரு மணி நேரம் இதே ஏச்சும் பேச்சும் தொடர்ந்தது. கடைசியில் நம்மைப் பற்றிச் சாபம். உருப்படமாட்டோம். ஓடு காலிகளாம். என்ன சொன்னாலும் இந்தக் கல்லுளி மங்கி வாய் திறக்கிறாளா பார். ஊமைக் கோட்டான்!'' என்று பெரிய அத்தை முத்தாய்ப்பு வைத்த போது, ''டட்ட டட்ட டாய்ங் டாய்ங்'' என்று ராகம் போட்டாள் ராதை.

''என்ன நடந்தது என்று சொல்லிவிட்டு டட்ட டாய்ங் போடுடி ரம்பம்.''

''உக்கும், போயேன்,'' என்று அவள் அழகு காட்டிச் சிரிக்க, சின்னக் குட்டி சுமி உடைத்தாள்.

''மாலை ரயிலுக்கு ஐந்து டிக்கெட், பிளாக்கில் என்றாலும் என்ன விலை கொடுத்தேனும் வாங்கிவா மதன்! உன் அத்தைமார் குடும்பங்களுக்காக!'' என்று அப்பாவின் குரல் ஒலித்தது வெகு கடுமையாக,'' என்றாள்.

''ஓ!''

''எல்லோருமே இப்படித்தான் வாயைப் பிளந்தோம். அப்போது அத்தைகளின் முகத்தைப் பார்க்க உனக்குக் கொடுத்து வைக்கவில்லையே, மீரா!'' என்று அனுதாபப் பட்டான் மதன்.

''பிறகு?''



''பிறகென்ன? பழைய காலக் கதை என்றால் சுண்ணாம்புக் காளவாய்க்குள் போடச் சொல்லியிருப்பார். இப்போது ஊருக்கு அனுப்பி வைப்பதோடு முடிந்தது. அத்தைகள் குடம் குடமாகக் கண்ணீர் வடித்துப் பார்த்தார்கள். தம்பிமேல் உள்ள பாசத்தின் மிகுதியால் அவன் வீட்டில் சம்பந்தம் செய்ய முடியாத வருத்தத்தில் பேசி விட்டார்களாம். ஆனால் அப்பா குணம்தான் தெரியுமே. சரி, சரி என்று போகிறவர், பிடித்தால் ஒரே பிடிதானே. 'இத்தனை நாள் தன் வேதனைகளை அவள் லேசு பாசாகச் சொல்ல வந்த போதுங்கூட, என் அக்காமார் பேச்சு உன் வாயில் வரக்கூடாது என்று கண்டிப்புப் பண்ணி அவளைக் கொடுமைப்படுத்திவிட்டேன். உங்களிடமும் அல்லல்பட வைத்துவிட்டேன். இவ்வளவு பாசம் காட்டியதற்கு நீங்கள் என் பிள்ளைகளையே சபிக்கிறீர்களா? திருமணமாகி ஒரு வாரம் ஆகவில்லை. அதற்குள் அவள் வாழாவெட்டி ஆகிவிடுவாள் என்கிறீர்களா? போதும் போதும். இனி உங்களுக்கு இங்கே இடம் இல்லை. ஏதோ விசேஷம் என்றால் மூன்றாம் மனிதர்போல வந்து உடனே போய்விடுங்கள். அவ்வளவுதான், அத்றகு 'மேல் நமக்குள் இனி உறவில்லை!' என்று வெட்டிவிட்டு விட்டார்,'' என்று குரலில் களிப்புத்துள்ள முடித்தாள், ராதை.

''அப்பா வெளியே போனார் என்றாயே, எப்போது வந்தாராம்?'' இது மீரா.

''உடனேயே. கண்டிப்பாய்ப் பேசிவிட்டுப் போன வேகத்தில் கைக்குட்டை எடுக்க மறந்து போயிருக்கிறார். வாசல் வழியே வந்து, அத்தை கண்ணில் பட்டுவிட்டால் மீண்டும் தொடங்கி விடுவார்களோ என்று பக்கக் கதவின் வழியே ஓசைப்படாமல் வந்தாராம்.''

''நம் வீட்டு நல்ல நேரம். ஆனால் எல்லாவற்றையும்விட அப்பாவுக்கு ஆத்திரம் மூட்டியது என்ன தெரியுமா, மீரா? அத்தைகளின் இரட்டை வேடத்தைக்கூட அவர் மன்னித்துவிடத் தயார்தான். 'கல்யாணமாகி ஒருவாரம் முடியவில்லை. ஆணியில் மாட்டிய மாலை வாடவில்லை. அதற்குள் என் கண்மணி வாழாவெட்டி ஆவதா? இந்தப் பச்சைப் பிள்ளைகள் கன்னி கழியாமல் நிற்பதா? இப்படிச் சபிக்க உங்கள் மனதில் எவ்வளவு விஷம் இருக்க வேண்டும். உங்கள் பார்வை பட்டால் கூடப் பாவம் போங்கள், போங்கள்!' என்று கத்திவிட்டார்,'' என்றான் மதன்.

''போகிறது போ. இனியேனும் நிம்மதியாக இருக்கலாம்,'' என்று மீரா முடிக்க, பேச்சு வேறுதிசையில் ஓடியது.

ஆயினும் தமையன் பேச்சு மனதில் உறுத்தத் தாயிடம் வந்து, ''ஏன்மா, ஒரு பெண் கணவரோடு வாழமுடியாமல் திரும்பிவந்தால் அவளுடைய தங்கைக்குத் திருமணம் ஆவது கடினமா அம்மா?'' என்று விசாரித்தாள்.

''பின்னே இல்லையாம்மா? நல்லவளாக இருந்திருந்தால் எப்படியேனும் புருஷனோடு அனுசரித்துப் போய் வாழ்ந்திருப்பாளே! அது முடியாதென வருகிறவளின் தங்கையிடமும் ஏதோ குறை இருக்கத்தானே செய்யும் என்றுதான் நினைப்பார்கள். இயற்கைதானே கண்ணா?'' என்றாள் தாயார்.

''அப்படியா?'' என்று யோசனையில் ஆழ்ந்தாள் மகள்.



## 8

மதியம் உணவருந்தத் தந்தை வந்துவிட, வீடு இன்னமும் அமளிப்பட்டது.

''கதையெல்லாம் ஒப்பித்தாயிற்றா?'' என்று கேட்ட போது சற்று அசடு வழிந்தார்.

''இங்கிருந்து உன்னைப்போய்...'' என்று கொஞ்சம் கண் கலங்கினார்.

''அதெல்லாம் கெட்ட கனவு என்று மறந்துவிட வேண்டும்,'' என்று வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினார்.

கலகலப்பான அரட்டையில் நேரம் வேகமாய் ஓடியது.

இருட்டுமுன் வீட்டை அடைய வேண்டும் என்பதால் மூன்று மணிக்கே கிளம்பிவிட்டாள் மீரா.

கூட வந்து விடுவதாகச் சொன்ன தந்தையிடம் ஒரேயடியாக மறுத்துவிட்டாள். அன்னையிடம் சொன்ன காரணங்களையே அடுக்கியபோது அவராலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

''எங்கே பார்த்தாலும் இதுபோல ஒன்றிரண்டு கலகம் செய்து கொண்டேதான் இருக்கின்றன!'' என்று பெருமூச்சுவிட்டார்.

இன்னமும் தன் தமக்கைகளின் வஞ்சனையான குணத்தைப் பற்றிய அதிர்ச்சியிலிருந்து அப்பா மீளவில்லை என்பதை மீரா உணர்ந்தாள்.

''என்ன செய்வது அப்பா? எல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்,'' என்றாள் பொதுப்படையாக.

''நானே நேரில் வந்து உன் மாமியாரிடமும் மாப்பிள்ளை யிடமும் இது பற்றிப் பேசுவேன் பாப்பா! ஆனால் இப்போதுதான் உன் அத்தைகளை இப்படிக் 'கட்'

பண்ணிவிட்டு அதே கையோடு அங்கே வந்து இது விஷயம் பேசுவது என்றால் ஒருமாதிரி இருக்கிறது,'' என்றார் தந்தை வேதனையோடு.

''நல்லவேளை!'' என்று மனதில் நினைத்தபடி, ''இதெல்லாம் வெறும் வார்த்தைகளால் சரியாகி விடுமா, அப்பா? மகளுக்காக வக்காலத்து வாங்குவதாகத்தான் சொல்வார்கள். கொஞ்ச நாள்கள் கவனமாக நடந்துவிட்டால் பிறகு தானாக நம்மீது நம்பிக்கை வந்துவிடும். அதுவரை பொறுத்திருக்க வேண்டும். அவ்வளவுதானே,'' என்று தேறுதல் கூறினாள்.

பேச்சை மாற்ற விரும்பி, ''உங்களிடம் ஒன்று கேட்க நினைத்தேன் அப்பா! அத்தையிடம் அவ்வளவு பாசம் இருந்தும் அழகேச அத்தானை நீங்கள் ஏன் மறுத்துவிட்டீர்கள் அப்பா? சொந்தத்தில் திருமணம் கூடாது என்பதால் மட்டும்தானா?''

தந்தையின் ஆச்சரியமான பார்வையைப் பார்த்த பிறகுதான், அதெல்லாம் அப்பாவோடு வழக்கமாகப் பேசுகிற விஷயம் இல்லை என்பது நினைவு வந்தது.

ஆனால், திருமணமான பெண்ணுக்குத் தனி அந்தஸ்து உண்டல்லவா?

முறுவலோடு மீண்டும் தந்தையிடம் திரும்பினாள்.

ஈஸ்வரனுக்கு எந்தவித வித்தியாசமும் தெரியவில்லை போலும்! அவளுக்குரிய பதிலைத் தயங்காமல் சொன்னார். ''அதுமட்டுமில்லை மீரும்மா, நம்ம டாக்டர் சதாவிடம் கேட்டபோது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து சொந்தத்தில் சம்பந்தம் செய்தால்தான் தப்பு என்று சொல்லிவிட்டான். ஆனால், பொருத்தம் வேண்டாமா?



பொதிமாடு மாதிரி வளர்ந்து விட்டானே தவிர, நிற்பது, நடப்பது, பேசுவது... எதில் உங்களுக்கு இவன் இணையாவான்? 'படிக்கவை' என்று திரும்பத் திரும்ப முட்டிக் கொண்டேன். செய்தார்களா? நீங்கள் பாதி இங்கிலீஷ் பேசுகிறீர்கள். உலக விவகாரம் அலசுகிறீர்கள். அவனிடம் 'அமெரிக்கா' என்றால் அது என்ன 'பலகாரம்?' என்பான். 'டாலர்' என்றால் 'செயினில் சேர்த்துப் போடலாம்!' என்பான். அடிப்படையிலிருந்து மாற்றத்தான் முடியுமா! எல்லாம் யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். இப்போது மாப்பிள்ளையும், நீயும் என்றால் 'ஹிந்து' படித்துவிட்டுச் சேர்ந்து அலசலாம். படிப்பு, நடை, உடை, பேச்சுமுறை எல்லாவற்றிலும் எவ்வளவு பொருத்தம் பார்!''

''ஆ...ஆமாம்பா. அப்பா, நான் கிளம்புகிறேன். நேரமாகி விட்டது,'' என்று எழுந்தாள் மீரா.

''இதைக் கொண்டு போ!'' என்று தூக்கு நிறைய இருந்த பால்கோவாவை அப்படியே கொண்டுவந்து வைத்தாள் கற்பகம்.

''இவர்களுக்குக் கொஞ்சம் வைத்துவிட்டு...'' என்று உடன் பிறந்தோரைக் காட்டினாள்.

''அம்மா திரும்பச் செய்வார்கள். நீ கொண்டு போ!'' என்று அவர்களும் தூக்கில் நிறையக் கொண்டு போனால்தான் நன்றாக இருக்கும் என்று அன்னையுடன் சேர்ந்தே சொன்னார்கள்.

தந்தையும் ஆமோதித்தார்.

அருமையான தங்கைகளுக்கும் அண்ணனுக்கும் இல்லாமல் கொண்டுபோய் அந்த அன்பற்றவர்களுக்குக் கொடுக்க மீராவுக்கு மனமே வரவில்லை.

ஆனால் தாயாரிடம் மேலும் மறுக்கவும் முடியாமல் தூக்குடன் கிளம்பினாள்.

பஸ்ஸில் ஏற்றிவிட உடன் வந்தபோது தந்தை மாப்பிள்ளையைப் பற்றித் துருவலானார்.

''நன்றாயிருக்கிறார், அப்பா! ஆனால் அத்தையின் மனத்திருப்திக்காகக் கொஞ்சம் விட்டேற்றியாக நடந்து காட்டும்படி சொல்லியிருக்கிறேன்... அப்பா! சியாமளாவின் கல்யாணத்துக்கு நீங்கள் மட்டும்தான் வருவீர்கள் என்கிறார்களே, அம்மா!'' என்று பேச்சை வேறு திசைக்குத் திருப்பினாள் மீரா.

''பின்னே! அறுநூறு கிலோ மீட்டர் அந்தப் பக்கமாய் ஊரில் நடத்துகிறீர்களே! எல்லாரும் வந்தாலும் நன்றாயிராது. உன் தங்கைகளைத் தனியாக விட்டுவிட்டு அம்மா நான் இருவரும் இரண்டு மூன்று நாள் வெளியூர் போவதும் சரியில்லை. அதனால்தான் ...மறுத்துவிட்டேன். உன் ஆபீஸ் மானேஜர் - அந்தப் பையன் உதயசங்கர், நீ லீவு முடிந்ததும் ஜாயின் பண்ணுகிறாயா, வேலையைவிட்டுவிடப் போகிறாயா என்று கேட்டான். நீ எழுதுவாய் என்று சொன்னேன். எதுவானாலும் மாப்பிள்ளையைக் கலந்து கொண்டு முடிவு பண்ணு. என்னைக் கேட்டால் சீக்கிரமாய்ப் பேரன் பேத்தியைப் பெற்றுக்கொடு என்பேன்...' என்று சிரித்தார் அவர்.

''ப...பஸ்ப்பா...'' என்று அவசரமாய் ஏறினாள் மீரா. கையசைத்து விடை பெற்றாள்.

இனி?

பழைய பாலைவனம்.



பால்கோவாவை நீட்டியதும், ''நல்ல பாலில் செய்தது தானே!'' என்று பத்துத் தடவை சந்தேகப்பட்டுவிட்டு உருண்டை உருண்டையாக விழுங்கினாள் மாமியார்.

''உன் புருஷன் மாடிக்குப் போகிறான் போல் இருக்கிறது. அவனுக்கும் கொண்டு போய்க்கொடு!''

வரும் வழியெல்லாம் சிந்தித்ததில், தன்மானத்தை விழுங்கிக் கொண்டேனும் ஒரு முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்ற முடிவிற்குத்தான் மீராவும் வந்திருந்தாள்.

எனவே மாமியார் சொன்னபடி செய்தாள்.

''என்ன?'' என்று எட்டிப் பார்த்த கிரிதரன், ''சாப்பாட்டு மேசைமேல் வைப்பதுதானே! வழக்கம் போல நானே எடுத்துக்கொள்வேனே!'' என்று கூறிவிட்டு முகம் கழுவப் போனான்.

''அத்தை கொண்டுவந்து கொடுக்கச் சொன்னார்கள்,'' என்று அவளுடைய எழும்பாத குரல் அவன் காதில் விழுந்ததோ என்னவோ!

ஆனால் முகம் கழுவிவிட்டு வந்து, ''இதுபோல எனக்காக என்று எடுத்து வருவது எல்லாம் தேவையற்ற காரியம். இனிச் செய்யாதே!'' என்று சொல்லிவிட்டுக் கீழே போய்விட்டான்.

உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள் மீரா.

சுயமதிப்பைக் கைவிட்டு அவள் செய்த முதல் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட்டான்.

தன் முகத்தில்தானே கரி பூசினாற் போல வேண்டாம் என்று விலக்குகிறவனிடம் வந்து நின்றாளே!

ஆனால், இந்த விலக்கத்தையும் அவமானத்தையும் அவள் சகித்தே ஆக வேண்டும். சில ஆண்டுகளேனும் சகித்தாக வேண்டும். குறைந்த பட்சமாக ஐந்து ஆண்டுகள்.

ஐந்து ஆண்டுகள்! அடேயப்பா!

ஐந்து ஆண்டுக் காலம் இந்த வீட்டில் இப்படி விலக்கும் கணவனுக்கும் வெறுக்கும் நாத்தனாருக்கும் விரட்டும் மாமியாருக்கும் இடையில் அவளால் வாழ முடியுமா? பைத்தியம் பிடித்துவிடாதா!

அவள் ஒரு ஜீவன் இருப்பதையே அறியாதவன் போல நடந்து கொள்ளும் கணவன் இருக்கும் அறையிலேயே உறங்கி, எழுந்ததிலிருந்து மாமியாரின் ஏவல்களை ஒரு வேலைக்காரியின் நிலையில் நின்று செய்து, கொட்டிப் பிடுங்கும் ஒரு நாத்தனாருக்கும் வணங்கி, 'விடியா இரவே, தொலையாப் பகலே' என்று ஐந்து நீண்ட ஆண்டுகள் இந்தச் சிறையில் கழிக்க முடியுமா?

சில மணிநேர விடுதலையாக அப்பா உதயசங்கரைப் பற்றிச் சொன்னது நினைவு வந்தது.

கல்லூரிக் காலம் முழுவதும் மீராவுடன் பயின்ற தோழி நந்தினியின் கணவன் இந்த உதயசங்கர். ஒரு 'டிஸ்ட்ரிப்யூஷன்' கம்பெனியில் மேனேஜர். இன்டர்வ்யூவில் தோழியின் கணவனை அதிகாரியாகப் பார்த்த மீராவுக்கு ஒரே ஆச்சரியம். தகுதியும் இருக்கவே. அந்த முயற்சியிலேயே அவளுக்கு வேலையும் கிடைத்தது.

மேனேஜரின் குடும்பத்துக்குத் தெரிந்தவள் என்பதால் பொதுவான தொல்லைகள் எதுவும் அவளுக்கு நேர்ந்தது இல்லை - அதாவது பல்லிளிப்புத் தொல்லைகள், வாலாட்டும் தொல்லைகள் - இத்யாதிகள்.



ஓர் எட்டுமணி நேரம் இந்த வீட்டில் இருந்து விடுதலை. ஏ.சி. ஆபீசில் ஒரு மதிப்புடன் வேலை செய்து வரலாம் அல்லவா?

குறைந்த பட்சம் மனதில் தைரியமேனும் குறையாமல் இருக்கும்.

ஐந்து ஆண்டுகள் - ஒன்றிரண்டு கூடுதலாகவும் ஆகலாம். அதுவரை இழுத்துப் பிடிக்க வேண்டுமே!

இருபத்து நான்கு மணிநேர வேலைக்காரியைக் கை கழுவ விடுவார்களா, மாமியார்.

பணம் வருமென்று ஆசைகாட்டி மாமியாரைச் சமாளித்து விடலாம் என்று மீராவுக்குத் தோன்றியது.

பணம் போனால்தான் என்ன? இந்த மனம் நலிந்து போகாமல் பார்த்துக் கொள்வது முக்கியம் அல்லவா?

ஏதோ பேச்சு வாக்கில் சொல்வதுபோல வேலை பற்றிப் பேசினாள். எடுத்த எடுப்பில் எண்ணூறு ரூபாய் சம்பளம் என்றதும் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். எண்ணூறு ரூபாய் என்றால் என்னவோ செய்யலாம் ''இந்த வேலையை விடப்போகிறாயா?'' என்று என்கூட வேலை பார்க்கும் நளினிகூட கேட்டாள். நேற்றுகூட அது பற்றிப் பேச்சு வந்தது. முடிவு எடுக்க வேண்டியது என் அத்தைதான் என்று சொல்லிவிட்டு வந்தேன்,'' என்று ஐஸ் வைத்தாள்.

''எண்ணூறு ரூபாயா சம்பாதிக்கிறாய்!' என்று வாயைப் பிளந்தாள் மாமியார். சற்று யோசித்துவிட்டு, ''வேலை பார்த்தால் நல்லதுதான். நம்ம யசோதாவை வேற கரை சேர்க்கணும். ஆனால் கிரி என்ன சொல்கிறான்?'' என்று விசாரித்தாள்.

''அவரிடம் இன்னமும் சொல்லவில்லை.''

''முதலில் அவனிடம் கேட்க வேண்டும் என்று தெரியாதா? படித்த பெண். இதுகூடத் தெரியாதா? போ, போய்க் கேட்டுக்கொண்டு வா. உனக்கும் வேலைக்குப் போக மிகவும் ஆசை என்று சொல்லு, போ,'' என்று விரட்டினாள்.

எத்தனையோ பட்ட பிறகும் நப்பாசை போகவில்லை. கடுகளவேனும் அக்கறை காட்டமாட்டானா என்று ஆசை விடவில்லை.

''நான் மீண்டும் வேலைக்குப் போகட்டுமா?'' என்று கேட்டுவிட்டு, 'வெட்கம் கெட்டுப் போய்த் திரும்பத் திரும்ப என்னிடம் வந்து நிற்கிறாளே!' என்று அவன் நினைத்து விடக்கூடாதே என்ற எண்ணத்தில், ''அத்தைதான் உங்களிடம் கேட்கச் சொன்னார்கள்,'' என்றாள்.

''வேலைக்குப் போவதும் போகாததும் உன் இஷ்டம். அதில் எனக்கு ஒரு சம்பந்தமும் இல்லையென்று நான் சொன்னதாக அம்மாவிடம் சொல்லிவிடு,'' என்று அவன் தன் வேலையில் முனைந்தான்.

கழுத்தில் தாலியென்று பத்துப் பவுன் சங்கிலியால் அம்மை அப்பனைக் கோத்து மாட்டியவனுக்குச் சம்பந்தம் இல்லையாம்!

எத்தனை சொன்னாலும் புரியாத மக்களுக்கு இப்படித்தான் புரிய வைக்க வேண்டுமோ?

நெஞ்சு ரணமாயிற்று என்றால் என்னவென்று அப்போது புரிந்தது மீராவுக்கு.

மீரா வேலைக்குச் செல்லத் தொடங்கினாள்.

இதன் மூலம் வீட்டு வேலையிலிருந்து கொஞ்சம் ஓய்வு கிடைத்தது.



அத்தையம்மாளாக அந்த ஓய்வைக் கொடுக்காவிட்டாலும், ''அண்ணியும்தான் ஆபீஸ் போகணும். நான் செய்கிறேனே!'' என்று பிடுங்கிச் செய்தாள் சியாமளா.

அலுவலகத்தில் பொதுவாக அவளை ஆவலாகவே வரவேற்றார்கள்.

''புருஷன் கைநிறையச் சம்பாதிக்கிறான். ஆனாலும் பணத்தாசை விடுகிறதா?'' என்ற முணுமுணுப்பும் மீராவின் காதில் விழவே செய்தது.

''பணத்தாசையா? என் தேவை இவர்களுக்கு என்ன தெரியும்?'' என்று எண்ணிக் கொண்டாள்.

பழைய முகம் என்று மறைந்து புதுமுகம் ஒன்று தோன்றியிருந்தது.

அந்தப் புதுமுகம் அவளை விழியாலேயே துகிலுரித்தது விழுங்கியபடி, ''ஹலோ ஐயாம் மோகன்ராம். எம்.டி. தீர்த்தராம் எனக்கு மாமா முறை!'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டது.

## 9

''அப்படியா? வணக்கம்!'' என்று கரம் குவித்துவிட்டு நிமிர்ந்து பாராமல் தன் வேலையில் ஈடுபட்டாள் மீரா.

''ரீஃபில் இருக்கிறதா?'' என்று ஒரு தரம் வந்து கேட்டான் மோகன்ராம்.

''இங்கு ரப்பர் இருக்கிறதா?'' என்று இரண்டாம் முறையாகக் கேட்டபடி மீராவின் மேசைமேல் சாய்ந்து நின்று பேசத் தொடங்கினான் அவன்.

''அட்டெண்டரிடம் கேளுங்கள்,'' என்று மீரா சொல்லிக் கொண்டு இருந்தபோது, கோடவுனிலிருந்து திரும்பி வந்தான் உதயசங்கர்.

வந்ததுமே மீராவைத் தன் அறைக்கு அழைத்தான்.

''மீரா! மிஸ்டர் மோகன்ராம் நம் எம்.டி.யின் உறவினர். அவரை நான் கண்டிப்பதற்கில்லை. ஆனால் நீயும் சிறு பெண் அல்ல. திருமணம் முடிந்துவிட்டவளுங்கூட. இந்த மாதிரி ஆட்களை ஒதுக்குவதும் விலக்குவதும் உனக்கே இயலும் என்று நினைக்கிறேன். எதற்கும் கொஞ்சம் எச்சரிக்கையாகவே நடந்து கொள்...'' என்றவன், லேசாக முறுவல் செய்துவிட்டு, ''நந்தினியின் தோழிக்கு ஒரு சகோதரனாகச் சொன்னேன். அவ்வளவுதான்,'' என்று முடித்தான்.

''நன்றி, அவள் எப்படி இருக்கிறாளாம்? மாஸ்டர் உதயன் எப்போது விஜயம் செய்யப் போகிறாராம்?'' என்று குறும்புடன் விசாரித்தாள் மீரா.

''இன்னமும் ஒரு மாதம் இருக்கிறது... அதற்குள் அழைத்துப் போய்விட்டார்கள்,'' என்றான் அவன் வருத்தமாக.

பிரிவின் தாபம் அவனது ஒவ்வோர் அணுவிலும் வெளிப்படுவதைக் கண்டு சற்றுப் பொறாமைப்பட்டாள் மீரா.

உடனே தன்னையே கடிந்துகொண்டு, ''ஒரு மாதம் - முப்பது நாள்கள்! அடேயப்பா!'' என்று கேலிபேசினாள்.

கேலியைப் புரிந்து கொள்ளாமல் பெருமூச்சுவிட்டு பின் அசடு வழிந்தான் உதயசங்கர்.

மீண்டும் சீட்டில் சென்று உட்காரும்போது உள்ளே கிடந்த தாலியை இழுத்துச் சேலைமேல் விட்டுக் கொண்டாள் மீரா.



''என் கணவர் கராத்தே 'எக்ஸ்பர்ட்டாம்' நளினி! தெரிந்தபின் அவரிடம் எதிர்த்துப் பேசக்கூடப் பயமாயிருக்கிறது.'' சற்று உரக்கவே சொல்லி அந்த மோகன் ராமின் முகம் வெளுப்பதைச் சற்று ஏளனத்துடன் கண்டாள்.

அதை விடவும் பெரிய கவலைகள் இருந்ததாலோ என்னவோ, இந்த மோகன்ராமின் விஷயம் மீராவுக்குப் பிரமாதமானதாகத் தோன்றவில்லை.

ஏதோ ஓர் எட்டு மணிநேரத்தை நிம்மதியாகக் கலக்கமின்றிக் கழிக்கலாம் என்று இருந்தாள். இப்போ இந்தச் சிறுமுள் குத்தி விடாமல் சற்றுக் கவனத்துடன் இருக்க வேண்டியதாகிவிட்டது. அவ்வளவுதான்.

சியாமளாவின் திருமணத்துக்காக எல்லோரும் ஒரு வாரம் முன்னதாகவே கிளம்பி ஊருக்குப் போய்விட்டார்கள்.

கடைசியாகக் கிளம்பிச் சென்ற கிரிதரனுக்கும் மீராவுக்கும் டூ டயரில் டிக்கெட் கிடைத்திருந்தது. அடுத்தடுத்த பர்த். எனவே, எதிர் எதிரே இடமும் கிடைத்திருந்தது.

அவன் கையோடு கொணர்ந்திருந்த புத்தகத்தில் வெகு சாதாரணமாக ஆழ்ந்து போனான்.

''வாழ்க்கைப் பயணத்தில் எதிர் சீட்டுப் பயணிகள்!'' என்று அவன் சொன்னது திரும்பத் திரும்ப நினைவு வர மீராதான் துடித்துப் போனாள்.

இதே எதிர் சீட்டுப் பயணம்தானே.

தூங்கப் போவதாக விரைவிலேயே மேலே ஏறிப்படுத்து ஓசையற்று அழுது தீர்த்தாள்.

திருமணம் முடிந்தவுடனே விடை பெற்ற தந்தை அவளிடம், ''என்னம்மா இது? உன் மாமியாருக்காக மாப்பிள்ளையைச்

சற்று விட்டேற்றியாக நடக்கச் சொல்லியிருப்பதாகச் சொன்னாய். சரிதான், ஆனால் அதற்காக என்னிடமும் உன்னைப்பற்றி அதேபோல் பற்றற்றுப் பேச வேண்டுமா? நீ சொன்னது மட்டும் நினைவு வரவில்லையானால் மிகவும் கலங்கிப் போயிருப்பேன்!'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

உள்ளே புண்ணான போதும், வெளியே புன்னகை செய்து, ''அப்பா! யார் காதிலாவது விழப்போகிறது,'' என்று எச்சரிக்கை செய்தாள்.

தன் வீட்டினரின் மனம் துன்புறக் கூடாது என்று அவர்களது வருகையைத் தடுத்த மீராவுக்குத் தனது அந்தச் செயலே, புகுந்த வீட்டில் தன் நிலைமையை மேலும் கீழிறக்கிவிடும் என்பது தெரியாது போயிற்று.

தெரிந்தாலும்கூட அவள் வேறு விதமாய் நடந்திருக்க மாட்டாள்.

கணவனின் ஆதரவு இல்லை. பிறந்த வீட்டிலும் சீந்துவோர் இல்லை என்று எண்ணி, மருமகளைக் கிள்ளுக் கீரையாக நடத்தினாள் தேவகி அம்மாள்.

காலை ஐந்து மணிக்கு விழித்து வேலைகளைக் கவனித்து விட்டு வேலைக்குப் போகிற பெண், மாலை வந்த பிறகும் இரவுச் சமையல் அது இதென்று வேலை பார்த்தாக வேண்டியது ஆயிற்று.

மீரா கொண்டு வந்த புதுக் கருக்கு அழியாத பல பாத்திரங்கள் பெயர் அழிக்கப்பட்டு விழுப்புரத்துக்கு - சியாமளாவின் புகுந்த வீட்டுக்கு அனுப்ப மூட்டை கட்டப்பட்டன.



பல கடை ஏறி இறங்கிப் பார்த்துப் பார்த்து வாங்கிய தாயின் நினைவு துன்புறுத்த, உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு பேசாதிருந்தாள் மீரா.

சியாமளாவோ அருணோ இருந்திருந்தால் இதைக்கண்டு சற்று எதிர்ப்புத் தெரிவித்திருக்கக் கூடும்.

ஆனால் திருமணம் ஆன கையோடு அவர்கள் வீட்டின் பல வேண்டுதல்களை முடித்துக் கொண்டு பெண்ணும் மாப்பிள்ளையும் விழுப்புரம் செல்வதாயும், பிறகு இங்கிருந்து சீர்வரிசை கொண்டுசென்று மறுவீடு அழைப்பதாயும் ஏற்பாடு. பிறந்த வீட்டு ஆளாய் அருண் அவர்களோடு சுற்றிக்கொண்டு இருந்தான்.

எனவே இங்கே யசோதா ஒத்து ஊத தேவகி அம்மாள் தடுப்பாரின்றித் தன் ராஜ்ஜியத்தை நடத்தினாள்.

தாங்கமாட்டாத நேரங்களில் எல்லாம் கிணற்றடிக்கல்தான் மீராவுக்குத் துணையாக இருந்தது.

மாடிக்குப் போனாலும் அங்கே கணவன் இருந்ததால் தனியே தன் குமுறலைச் சமனப்படுத்திக் கொள்ள இந்தக் கிணற்றடிதான் மீராவுக்கு உதவியாக இருந்தது.

எல்லாம் போக மாமியாரின் பார்வை மீராவின் வெள்ளிக் குத்து விளக்குகளில் வந்து நின்றது.

''வெள்ளி விக்கிற விலையில் இரண்டு விளக்கு என்றால் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் ஆகிவிடும். இங்கே பூசைக்கு ஏற்கெனவே வெள்ளி விளக்குதான். உன்னுடையது சும்மாதானே இருக்கிறது? அதையே சியாமிக்குக் கொடுத்து விடலாம்,'' என்று தேவகி சொன்னபோது மீராவின் தலை சுழன்றது.

ஏதோ எவர்சில்வர் பாத்திரங்கள் கொஞ்ச விலைதானே, போகிறது என்று பொறுத்துப் போனாள்.

ஆனால் ஐந்து ஆயிரம் பெறுமானமுள்ள. விளக்குகளைக் கொடு என்றால் மீராவுக்கு நெஞ்சு எரிந்தது.

அதிலும் எப்படிச் செய்த விளக்குகள் அவை!

வெள்ளிக் கூஜா, செம்பு எல்லாம் ஸ்டைல் இல்லை. அதனால் எனக்குத் தந்த கூஜாவையும் செம்பையும் உருக்கி விளக்கு செய்துடலாம்...

''இந்தக் கூஜாவில்தான், கண்ணு! முதல் நாள் பாலைக் கொண்டுபோகச் சொன்னார்கள். நிறையப் பால் மிச்சம் வைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்களா? முட்ட முட்டக் குடித்ததில் இரண்டு பேருக்கும் மூச்சுத் திணறிப் போயிற்று...'' என்று பழைய நினைவில் சிரித்துவிட்டு, அந்த வெள்ளிப் பாத்திரங்களை நகைக்கடைக்கு அன்னை எடுத்துப் போனது பசுமையாக நினைவிருந்தது.

அந்தமாதிரிச் செய்த விளக்குகளைக் கொடுத்து விடுவதா?

பட்டென்று மறுக்கவும் தைரியம் இல்லாமல், ''அவரிடம் கேட்க வேண்டும்,'' என்று சமாளித்துவிட்டு எடுத்துச் சென்று விட்டாள் மீரா.

இரண்டு தடவை இப்படி நகட்டிவிட்டால் புரிந்து கொண்டு நாகரிகமாக விட்டு விடுவாள் மாமியார் என்று மீரா நினைத்தாள்.

ஆனால் மாமியார் அந்த மாதிரி ஆள் அல்லவே!

மகனிடம் கேட்கப் பயம். ''அவள் சாமான் நமக்கு வேண்டாம்,'' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் மீற முடியாது.



அதனால் காலை. மாலை இரவென்று எல்லா நேரமும் மருமகளை நச்சரித்தாள், ''கேட்டாயா, கேட்டாயா?'' என்று.

இவள் ஒரு திசையில் வேலை செய்துவிட்டு வரும்போது எப்படிக் கேட்க முடியும் என்பதுகூட இல்லாமல் உள்ளே காலடி எடுத்து வைக்கும்போதே அறுப்பைத் தொடங்கிவிடுவாள்.

இரண்டு நாள்கள் நச்சரிப்பை அடுத்து மாமியாரின் சுருதி மாறியது.

அவள் நடக்கும்போதே தரை அதிர்ந்தது.

கையில் பட்ட பாத்திரங்கள் எல்லாம் 'நங்'கென்று வைத்த வேகத்தில் நசுங்கின.

ஓயாது புலம்பல், ''நாங்கள் எல்லாம் கல்யாணம் ஆகிவந்தால் புருஷன் வீட்டுச் சுக துக்கத்தைத் தன்னதாய் நினைத்தோம். வந்த மூன்றாம் நாள் வயலுக்கு உரம் வாங்கப் பணம் இல்லை என்றதும் நகையைக் கழற்றிக் கொடுத்தேன். இப்போதெல்லாம் கொட்டிக் கொள்ள மட்டும்தான் புருஷன் வீடு. தன் சாமானை எல்லாம் பிரித்துப் பிரித்துப் பூட்டி வைத்தாகிறது. வீட்டில் என்ன வேதனைப்பட்டு யார் செத்தால் இவளுக்கென்ன?''

பேச்சு தாங்க மாட்டாமல் கணவரிடம் போய், 'விளக்குகளைக் கேட்கிறார்கள்,' என்றாள் மீரா.

'கேட்காதே!' என்று மாமியாரிடம் ஒரு வார்த்தை சொல்ல மாட்டானா என்ற ஒரு நப்பாசை.

அவனோ, ''உன் பொருள், உன் விருப்பம். இதில் நான் சொல்ல என்ன இருக்கிறது?'' என்று தோளைக் குலுக்கிப் போய்விட்டான்.

வேலை முடிந்து மாலை வந்தால், காபிக்குப் பால் இல்லை. டிபன் காலியாகிப் போயிற்றாம்.

தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பியவள் காது கேட்க, ''என்னமோ அண்ணன் இந்த அம்மாளைக்கூட்டிப் போய்த் தனிக் குடித்தனம் செய்யப் போவதாகப் பகல் கனவு கண்டல்லவா பூட்டி வைத்துப் பூதம் காக்கிறாள்!'' என்று எடுத்துக் கொடுத்தாள் யசோதை.

தேவகி அம்மாள் அர்ச்சனையைத் தொடர்ந்தாள்.

கணவனுக்குத்தான் அவள் வேண்டாதவள். இந்த மாமனார் மனைவியிடம் ஒரு வார்த்தை சொன்னால் என்ன? ஐயாயிரம் ரூபாய்ச் செலவுக்குப் பயமா?

எல்லாமாக மீரா தளர்ந்து போனாள்.

மறைவாய் நின்று கண்ணைத் துடைத்துவிட்டு, பீரோவில் இருந்த விளக்குகளை எடுத்து வந்தாள்.

மாமியாரின் அருகில் வைத்துவிட்டு, ''இதுபற்றிப் பேசச் சரியாக வாய்ப்பு இல்லாமல் தாமதம் ஆகிப் போயிற்று. அவ்வளவுதான்,'' என்று திரும்பி நடந்தாள்.

''அதானே'' என்று திருப்தியுடன் கூறிவிட்டு, ''யசோதாம்மா, உன் அப்பா ஏதோ மிக்சர் வாங்கி வந்தாரே, அதை அண்ணிக்குக் கொடு, கண்ணா!'' என்று குழைந்தாள் தேவகி அம்மாள்.

''பசியில்லை, அத்தை!'' என்று தெளிவற்ற குரலில் கூறிவிட்டுக் கண்ணீரை மறைக்க வேகமாக நடந்தாள் மீரா.

தன்னந்தனியே கிணற்றடிக் கல்லில் அமர்ந்து, கண்ணீர் வடித்துவிட்டு அவள் திரும்பி வந்தபோது, தேவகி அம்மாள்



சொல்லிக்கொண்டு இருந்தாள். ''கிரி மாமனார் ரொம்ப மோசமான மனிதர். அப்படியா அவர் மகளுடைய சாமான்களைத் திருடி விடுவார்கள்? ஒவ்வொன்றிலும் மீரா, மீரா என்று பெயர் அடித்து வைத்திருக்கிறாரே! இதிலேயும் பெயரை அழித்து, சியாமளா என்று எழுத வேணும். அழித்தால் நிறைய வெள்ளி வீணாய்ப் போகும். அதனாலே மீரா பேர் மேலே பூ அடித்துக் கீழே சியாமி பேரை எழுத வேணும்...''

இன்னொருவர் விஷயம் என்றால் மாமியாரின் பேச்சில் இருந்த முரண்பாட்டை எண்ணி மீரா சிரித்திருப்பாள்.

பாலிஷ் செய்து பெயர்மாறி வந்த விளக்குகளை ஏக்கத்துடன் பார்த்தபடி மாடிப்படியில் நின்றிருந்தாள் மீரா.

கிரிதரன் வரவும் ஏக்கத்துடன் ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

ஆனால் அவனோ, ''விளக்குகளை நான் கொடுக்கச் சொல்லவில்லையே!'' என்றான் சாவதானமாக.

சிறு வெறுப்புடன் அவனை வெறித்தாள் மீரா. இவன் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அவளுடைய விளக்குகள் பறிபோய் இருக்க மாட்டா்வே!

''அதோடு நீ அவற்றைக் கொடுத்திருக்க வேண்டியதும் இல்லை. உன் பொருள் - உன் விருப்பம். உனக்குப் பிரியமில்லாததைச் செய்யும்படியாக இங்கே எந்தவிதக் கட்டாயமும் இல்லை,'' என்றான் அவன் மேலும்.

இல்லையாமே?

''இதை யெல்லாம் நீங்களே உங்கள் அம்மாவிடம் சொல்லியிருக்கலாமே!'' என்றாள். மீரா ஆத்திரத்தை அடக்க முடியாமல்.

''உனக்காக நான் அம்மாவிடம் ஏன் பேசவேண்டும்?'' என்று நைந்து கொண்டிருந்த அவளது இதயத்தில் தன் பங்குக்கு ஒரு பொத்தலை ஏற்படுத்திவிட்டுப் போனான் அவன்.

## 10

சியாமளா கணவனுடன் வந்தாள்.

நாணமும் மகிழ்ச்சியுமாக அவளைப் பார்க்கையில் தன் இழப்பு பல மடங்காகித் தெரிந்தது மீராவுக்கு.

தனியே பேச வாய்ப்புக் கிடைத்ததுமே மீராவிடம், ''அண்ணி! விளக்குகள் உங்களுடையவை என்று எனக்குத் தெரியாது அண்ணி! பூ அடித்திருப்பது புதுவிதமாக இருக்கிறது. யார் ஐடியா என்று கேட்டபோதுதான் அம்மா சொன்னார்கள்,'' என்று வருத்தப்பட்டாள் சியாமளா.

''இப்போது தெரிந்துவிட்டதால் திருப்பித் தந்துவிடப் போகிறாயா?'' என்று வக்கிரமாய்க் கேட்கத் தோன்றிய கேள்வியை மனத்திலேயே அடக்கினாள் மீரா.

இவளைக் குத்தி என்ன லாபம்?

''ரொம்பவும் ஸாரி அண்ணி! சீர் சாமான் என்று அங்கே எல்லாரது முன்னாலுமாகக் கடை பரப்பிவிட்டார்களா? உண்மை தெரிந்த பிறகும் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது உங்களை நிமிர்ந்து பார்க்கக்கூட வெட்கமாய் இருக்கிறது. உங்களுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்?''

''அதெல்லாம் இல்லை, சியாமி. இது... இது அம்மாவுக்கு சென்டிமென்டல் மதிப்புள்ள சில சாமான்களை உருக்கிச் செய்தது. அதுதான் கொஞ்சம்... ஆனால் பரவாயில்லை,



உன்னிடம்... உன்னைப் போலே ஒரு நல்ல பெண்ணிடம் இருக்கிறது என்ற திருப்தியே போதும்!'' என்று கூறுமுன் அடக்கமாட்டாமல் ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்துவிட்டது.

''விளக்கு மட்டும் இல்லையே அண்ணி! பாத்திரங்களும் கூட நிறைய உங்களுடையது போலவே தோன்றியது. இந்த வீட்டில் சும்மாவே நீங்கள் படுகிற வேதனை போதாதென்று இதுவேறா அண்ணி! நான் ஊருக்குப் போகுமுன் அண்ணனிடம் கொஞ்சம் பேசப் போகிறேன்,''என்றாள் சியாமி சினத்துடன்.

''வேண்டாம்,'' என்றாள் மீரா சுருக்கமாக.

''ஏன் அண்ணி? இன்னும் அண்ணனிடம் பயந்து கொண்டிருக்க நான் ஒன்றும் சின்னப் பெண் இல்லை. இந்த வீட்டில் அண்ணன் உங்களுக்குச் செய்யும் அநியாயம் எனக்குப் புரியவில்லை என்றா நினைக்கிறீர்கள்? மற்றவர்கள் அறியாமல் இருக்கலாம். ஆனால் அண்ணி கல்யாணம் ஆனபிறகு நான் நிறையத் தெரிந்து கொண்டேன். பிறகுதான் உங்களுடைய இழப்பின் அளவையும் தெரிந்துகொண்டேன். உங்களுக்காக ஒரு முயற்சிகூட எடுக்காமல் போனேன் என்றால், பிறகு என்னால் சிரிக்கவே முடியாமல் போய்விடும், அண்ணி!'' என்று விசித்தாள் சியாமி.

''இதெல்லாம் மனத்தில் தானாக உருவாக வேண்டும், சியாமி! உன் அண்ணனிடம் பேசுவது பாறையில் மோதுவதுபோல, வீணான செயல், அதனால்தான் வேண்டாம் என்றேன்... சரிசரி. இனி வேறு பேசுவோம். எந்தெந்த ஊருக்கெல்லாம் போனீர்கள்? கோவிலோடு நிறுத்திக் கொண்டீர்களா? சினிமா ஏதும் பார்த்தீர்களா?'' என்று பேச்சைத் திசை திருப்பினாள் மீரா.

கிரிதரன் வந்தான் உறுதியான நடையுடன். அவன் பின்னே அவள் மாடிப்படியில் ஏறுவதை மீரா சற்று ஆச்சரியத்துடன் கவனித்தாள்.

பயந்த சுபாவமும் கூச்சமும் நிறைந்த இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியம் எப்படி ஏற்பட்டது?

கொண்டவன் கொடுத்த உரமா?

தொடர்ந்து தன்னைப் பற்றிய எண்ணங்கள் வருவதைத் தடுக்கும் முயற்சியாக வேலையில் மும்முரமாய் முனைந்தாள் மீரா.

இரவு போர்வையை விரித்துவிட்டு விளக்கை அணைக்கச் சென்றபோது, ''சிபாரிசு பிடித்தாயா?'' என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான் அவள் கணவன்.

''இல்லை!'' என்று சொல்லிவிட்டு விளக்கை அணைத்தாள் மீரா. இருளில் தன் போர்வையை நாடி நடந்தபடியே, ''நான் அவ்வளவு முட்டாள் அல்ல, மேலும் ரோஷம் இல்லாதவளும் இல்லை!'' என்று படுத்துக் கொண்டாள்.

''மகிழ்ச்சி!'' என்றான் அவன், கடைசி வார்த்தையைத் தனதாக்கி.

சியாமளா சென்ற பின் வீடு மீண்டும் பழைய கதியில் செல்லலாயிற்று.

முடிந்தவரையில் வேறு எந்த எண்ணங்களுக்கும் இடம் கொடாமல் ஒரு கர்மயோகி போலத் தன் வேலையில் ஈடுபட்டாள் மீரா.

அன்று ஒரு மாத உழைப்பின் பலனை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினாள்.



வாயிலிலேயே காத்திருந்த மாமியார், ''வாம்மா மீரா, இன்று சம்பளம் வந்திருக்குமே, கொண்டு வா, சாமி முன் வைத்து எடுக்கவேண்டும்!'' என்று கூறிக் கை நீட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டாள்.

முழுச் சம்பளத்தையும் அத்தை திருப்பித் தருவாள் என்று மீரா எதிர்பார்க்கவில்லைதான்.

ஆனால், ''இந்த மாசத்திலேருந்து புதுச் சீட்டு ஆரம்பித்துவிட்டேன். யசோதாவுக்குச் சேர்க்கணுமே. மாசம் ஐந்நூறு ரூபாய்ச் சீட்டு. அப்புறம் பாவம், யசோதா! அவள் சினேகிதி புடவை வாங்கியிருக்கிறாளாம். அதே போல வேணும் என்று ரொம்ப நாளாக் கேட்டாள். விலை இருநூறுதான். கொடுத்துவிட்டேன். மீதி நூறை உனக்கு பஸ் செலவு எல்லாத்துக்கும் வைத்திருக்கிறேன். தினம் ஒரு ரூபாயாக வாங்கிக்கொள்,'' என்று மாமியார் கணக்கு முடித்தபோது பிரமித்துத்தான் போனாள்.

முதலில் அதிர்ச்சியாக இருந்தபோது மீரா அதை அதிகம் பொருட்படுத்தவில்லை.

ஓர் எட்டு மணி நேர விடுதலைக்காகத்தானே அவள் வேலைக்குச் செல்லத் தொடங்கியதே.

மிஞ்சிமிஞ்சிப் போனால் பணம்தானே, போகட்டும் என்று நினைத்தாள்.

ஆனால், கொஞ்சம் உறுத்தலாகத்தான் இருந்தது.

ஒருவேளை; 'சேலைக்குப் பணம் தந்ததற்கு நன்றி அண்ணி!' என்று யசோதா ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உறுத்தியிராதோ!

பிறப்புரிமை போல அந்தப் பணத்தை அவள் எடுத்துக் கொண்டவிதம் அவளைக் குமுற வைத்தது.

வழக்கம் போலவே மனத்தில் கொந்தளிப்பு அடங்கும் வரை கிணற்றடிக்கல்லைத் தஞ்சம் அடைந்தாள்.

மேலும் இரு மாதங்கள் இதே இயந்திரத் தன்மையுடன் சென்று முடிந்தன.

அவ்வப்போது (அதுவும் மாதம் ஒருமுறை அளவில்தான்) தான் மட்டும் சென்று பெற்றோரையும் உடன் பிறந்தவர் களையும் மீரா பார்த்து வந்தாளே தவிர அவர்களை இங்கே வருமாறு அழைக்கவே இல்லை.

தன்னுடைய உடல் மெலிவை மறைக்கக் கட்டமும் வட்டமும் போட்ட சேலைகளைக் கட்டிப்போனாள்.

அப்படியும் கண்டுபிடித்துக் கேட்டவர்களிடம், 'சளி பிடித்தது. காய்ச்சல் வந்தது!' என்று சமாளித்தாள்.

"ஏதேனும் விசேஷம் உண்டா, பாப்பா?" என்று விசாரித்த தாயிடம், வேதனையை மறைத்து, "கொஞ்ச வருடம் வேண்டாம் என்கிறார்!" என்று கஷ்டப்பட்டு வெட்கப்புன்னகை செய்தாள்.

எதை எதையோ சொல்லி எப்படியோ சமாளித்துவிட்டு வீட்டுக் கிணற்றடிக் கல்லில் சாய்ந்து கண்ணீர் வடித்தாள்.

இந்த மாதிரிக் காலம் செல்கையில் ஒருநாள் ஒரு கிலோ ஸ்வீட்டை வாங்கிக்கொண்டு தன் தங்கையின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் மதன்.

சமையலறைக்குள் வந்து, "முதல் தடவையாக, உன் வீட்டு மனிதன் என்று வந்திருக்கிறான் ஒரே ஒரு ஸ்வீட் பாக்கெட்டோடு. போய்ப் பார் உன் அண்ணன் வந்திருக்கும் லட்சணத்தை!" என்று தேவகி சொன்ன போது, மீராவால் நம்பமுடியவில்லை.



ஆச்சரியத்துடன் முன்னறைக்கு வந்து பார்த்தபோது மெய்யாக அவள் அண்ணன்தான். வியர்வையைத் துடைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஃபேன் ஸ்விட்சைப் போட்டுவிட்டுத் திரும்பியவள் சட்டென்று ஓர் அச்சம் தோன்ற, "ஒருவருக்கும் ஒன்றும் இல்லையே அண்ணா?" என்றாள் பயந்த குரலில்.

"என்னது சேச்சே, ஒன்றுமில்லை மீரா! ஏன் அப்படிக் கேட்டுவிட்டாய்? எல்லாரும் நல்ல சுகம்தான்!" என்று சிரித்தான் மதன். நான் வேறு விஷயமாக வந்தேன்," என்று லேசாக முகம் சிவந்தான்.

"என்ன அண்ணா?" என்றாள் பயந்த குரலில்.

"அதிசயமாய் வந்திருக்கும் பிள்ளைக்கு ஒரு காபி கொடுக்கக்கூடத் தெரியாதா? இந்தாடாப்பா குடி," என்று காபி தம்ளரை வந்தவனிடம் கொடுத்தாள் தேவகி.

'ஆமாம், என்ன விஷயம் தம்பி! மீராவை நாலுநாள் கூட்டிப் போலாம்னு வந்தாயா? அது ரொம்ப ரொம்பக் கஷ்டம்பா. நாலு நாளா எனக்கு ஒரே காய்ச்சல், இன்றைக்குத்தான் தலையைத் தூக்கினேன், அதனாலே மீராவை இப்ப அனுப்ப வசதிப்படாது."

"அய்யோ! நான் அதற்காக வரவில்லைங்க."

"பின்னே! அட சொல்லுப்பா. இவ்வளவு தூரம் சும்மாவா வருவே? காரியம் இருக்குமில்லை? வேற யார் கிட்ட சொல்லப்போகிறே! நானும் உன் அம்மா மாதிரிதானே? சொல்லு..."

மீராவின் அவசரமான கண் ஜாடைகளைப் புரிந்து கொள்ளத் தெரியாத அந்த வெகுளி, மெய்யாகவே தன் அன்னை போலவே தேவகியையும் எண்ணிச் சொல்லியே விட்டான்.

''வந்து... எனக்கு ஒரு வேலை கிடைக்கும்போல இருக்கிறதம்மா. நீயும் கேட்டுக்கொள் மீரா. இங்கே ஒரு பெரிய கம்பெனி. இந்தியா முழுவதும் பெரிய நகரத்தில் எல்லாம் கிளைகள் இருப்பதோடு சிங்கப்பூர், பினாங்கிலும் கூடதொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. இன்டர்வ்யூவுக்குப் போனேன். எக்ஸாமில் நல்ல கிரேடு வாங்கிப் பாஸ் பண்ணியிருப்பதோடு பேட்டியில் நன்றாகச் சொன்னதால் எல்லாருக்கும் என்னைப் பிடித்துவிட்டது சம்பளம் ஆயிரத்து நானூறு ரூபாய். போக்குவரத்துக்கு எல்லாம் தனியாகக் கொடுக்கிறார்கள்... ஆனால்...''

''ஆனால் என்னண்ணா?'' என்று அண்ணனின் பிரச்சினையில் தானும் ஆழ்ந்து போய்க் கேட்டாள் மீரா.

''மீரா! நான் ஒரு எம்.காம். என் வேலை பணத்துடன் சம்பந்தப்பட்டது. அதனால் ஒரு பதினைந்து ஆயிரம் ரூபாய் டெப்பாசிட் கட்டச் சொல்கிறார்கள். அங்கே புரளும் பணத்துக்கு இது வெறும் பெயரளவு டெப்பாசிட்தான். பணம்கூட பாங்கில் டெப்பாசிட்டாக என் பெயரில்தான் இருக்கும். நான் ஏதாவது தப்பு செய்துவிட்டால் மட்டுமே கம்பெனிக்குப் போகும். அந்தப் பணத்தைக் கட்டிவிட்டால் உடனே வேலை கிடைத்துவிடும்...ஆனால்...''

''அப்பாவிடம் பணம் இராது.''

''ஆமாம், மீரு. கடன் வாங்கக்கூட இடம் இல்லை என்கிறார்.''

மாமியார் இருப்பதையும் மறந்து, ''எல்லாவற்றையும்தான் அரித்து எடுத்து எனக்குக் கொட்டியாயிற்றே!'' என்றாள் மீரா.

''ஆமாம், அதற்கு இங்கே ஏண்டாப்பா வந்தாய்?'' என்று காரியத்தில் கண் வைத்து விசாரித்தாள் தேவகி அம்மாள்.



முகம் இரத்தமெனச் சிவக்க, ''இங்கே... இங்கே அப்பா கேட்கக் கூடாது என்றுதான் சொன்னார். இப்போதுகூட அப்பாவுக்குத் தெரியாமல்தான் வந்தேன். அத்தானைப் பார்க்கப் பிஸியாக இருக்கிறாராம். நீயும் இரண்டு நாளாக அலுவலகம் வரவில்லையாம். அதனால்தான் இங்கேயே வந்தேன்,'' என்று திக்கித் திணறினான் அவன்.

''இன்னும் நீ வந்த காரியம் சொல்லவில்லையே?''

''அதுதான். உங்களிடம் பணம் இருக்குமில்லையா? ஏதாவது... வந்து கடனாகத்தான். கடன் தந்தால் மாதம் ஆயிரம் ஆயிரமாய் அடைத்து விடுகிறேன். முழுவதையும் கொடுத்துவிடுவேன். ஆனால் முதலில் செகந்திராபாத்தில்தான் போஸ்டிங். அதனால் ஆயிரம் ஆயிரமாகச் சீக்கிரம் திருப்பித் தந்து விடுவேன் அம்மா... இல்லை அத்தை,'' என்று ஒருவாறு சொல்லி முடித்தான் மதன்.

அண்ணனின் தவிப்பில் மீராவுக்கு நெஞ்சில் இரத்தம் கசிந்தது.

கூடவே இருந்திருந்து இந்த நக்கல் மாமியாரிடம் போய்ச் சொல்லிவிட்டானே! இது எத்தனை நாள் பேச்சுக்கு அவலாகப் போகிறதோ?

மீரா எதிர்பார்த்தது போலவே அவனிடம் ஒரு கேலிப் பார்வையை வீசிவிட்டு, 'இங்கேயும்தான் ஒரு கல்யாணம் நடந்திருக்கிறது,'' என்றாள் தேவகி.

''ஓ!'' என்றான் மதன் ஏமாற்றத்துடன், ''நான்... நான் மீரா கொண்டு வந்த பணம் இருக்கும் என்று நினைத்து விட்டேன்,'' என்றான் சற்றும் யோசியாமல்.

அண்ணனின் ஒவ்வொரு வார்த்தையையும் பின் உபயோகத்துக்காக மாமியார் குறிப்பெடுப்பதைக் கவனித்த

மீரா, ''கல்யாணத்திலேயே தாலி சேலை என்று இங்கேயும் நிறையச் செலவு. இல்லையாண்ணா?'' என்று சொல்லிவிட்டு, 'இனிப் பேசாதே' என்பது போல உறுத்து விழித்தாள்.

அவன் அவளைப் பார்க்கவே இல்லை.

''அதுதான் உன்னிடம் கேட்கக் கூடாது என்று அப்பா சொன்னார் போல் இருக்கிறது. மாப்பிள்ளையிடம் கேட்கலாம் என்று ஆபீஸ் பக்கம் போனேன். 'பிஸி' என்று சொல்லி அனுப்பிவிட்டார். உன்னைப் பார்க்கப் போனால் இரண்டு நாளாக லீவு என்று சொன்னார்கள். அதுதான் வீட்டுக்கே வந்தேன். சரி... போகிறது. உலகத்தில் வேலைகளுக்கா பஞ்சம்...? இது ரொம்ப நல்ல வேலையாக இருக்கிறதே என்று பார்த்தேன்... ஆனால்... சரி, பரவாயில்லை, போகிறது... நான்... நான் வரட்டுமா?'' என்று கண்களில் நீர்த்திரையுடன் சிரிக்க முயன்றான் அவன்.

ஏமாற்றத்தில் அவன் நெஞ்சு சுக்கு நூறாக நொறுங்கிக் கொண்டிருப்பதை மீரா உணர்ந்தாள்.

அவனை வழியனுப்ப வாயில் வந்தாள்.

''எப்படியாவது முயற்சி செய்து பார்க்கலாம், அண்ணா! நம்பிக்கையை இழந்துவிடாதே!'' என்றாள் ஆறுதலாக.

சட்டென விழிகளில் ஒளி மின்ன, ''மாப்பிள்ளையிடம் சொல்லி அவர் மூலம் ஏதாவது ஏற்பாடு செய்கிறாயா, மீரா? வட்டிக்கு என்றாலும் பரவாயில்லை. மாதம் ஆயிரமாய்த் திருப்பலாம் பார். அவரிடம் சொல்கிறாயா?' என்றான் அவன் ஆவலோடு.

அன்பே உருவான மாப்பிள்ளை, கேட்டுக் கொண்டால் செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்!



வேதனையோடு முறுவல் செய்துவிட்டு, ''கடைசி நாள் என்றைக்கு?'' என்று விசாரித்தாள் தங்கை.

''பதினைந்து நாள்கள் தந்தார்கள். அங்கே அலைந்து திரிந்து பார்த்ததில் ஐந்து நாள்கள் வீணாகிவிட்டன. இன்னமும் பத்தே நாள்கள்...'' என்று பெருமூச்சுவிட்டான் மதன்.

பத்தே நாள்களில் பதினைந்து ஆயிரம் ரூபாய்!

புகுந்த வீட்டில் கணவனிடமும் மாமியாரிடமும் பணம் இருப்பது மீராவுக்குத் தெரியும். ஆனால் இருவருமே உதவ மாட்டார்கள்.

ஆவலோடு தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அண்ணனின் முகம் சோர்வதை மீரா கண்டாள்.

''ஏதோ முயற்சி செய்து பார்... அவ்வளவுதான். வரட்டுமா?'' என்று மெல்ல நடக்கலானான் அவன்.

சோர்ந்து தளர்ந்த நடையுடன் அவன் செல்லுவதைப் பார்த்த மீராவுக்கு நெஞ்சு குமுறியது.

அவனுடைய இந்த ஏமாற்றத்தின் மூல காரணம் அவளே அல்லவா!

அரைத் தொகையில் சீட்டை எடுத்து, வட்டிக்கு மேல் வட்டியாகக் கடன் வாங்கி எல்லாவற்றையும் அவளுக்கு அல்லவா கொட்டினார்கள்.

பொல்லாத திருமணம் செய்து வைத்தார்கள்.

பெருமூச்சுடன் அவள் திரும்பி உள்ளே செல்லவும் எகத்தாளமாய் இடுப்பில் கைவைத்துக் காத்து நின்றாள் மாமியார்.

''அடியடியடி, என்ன சாமர்த்தியமடி! உன் தகப்பனார் இவ்வளவு கெட்டிக்காரர் என்று நான் எண்ணியிருக்க

வில்லையே! அவருக்குத் தெரியாமல் இவன் வந்து கேட்டானாமா? இந்த வயசிலே காது குத்த வருகிறானே என்ன திருட்டுத்தனம்!

''பெண் கொடுத்த வீட்டில் கடன் கேட்பார்களா? அதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு உயிரை விடுவதற்கென்ன?

''நியாயம் தெரிந்தவர் என்றால், மாதம் எண்ணூறு ரூபாய் வீதம் ஒரு வருஷம் சம்பாதித்துப் போட்டாயே. அந்தப் பணத்தை வட்டியோடு உனக்கு இங்கே கொணர்ந்து தந்திருக்க வேண்டும்... அதைவிட்டு...

''ஏன், இப்போதுதான் என்ன? மகள் இருக்கிறாளா? செத்தாளா என்றுகூடப் பாராத அந்த மனிதன்கிட்ட போய் இந்தப் பணத்தைக் கேட்டு வாங்கித்தான் வாயேன். கொஞ்சமேனும் புத்தியாவது வரும்...''

இந்தப் பேராசைக்கு எல்லையே இல்லையா?

வெறுப்பும் வேதனையுமாகக் கிணற்றடியை நாடிப் போனாள் மீரா.

## 11

எளிதில் இந்த விஷயத்தை ஓயவிட்டு விடவில்லை தேவகி அம்மாள்.

கணவர், பிள்ளைகள், பெண் என்று மாலையில் ஒவ்வொருவராக வரவரத் திருப்பித் திருப்பி, பல்வேறு அபிநயங்களுடன் சொல்லிச் சொல்லிக் காட்டினாள். பிறகும் விடவில்லை.

கடைசியாக, ''வேறு பேசுங்களேன், அம்மா,'' என்று கிரிதரன் சலித்துக்கொண்ட பிறகுதான் அவள் பேச்சு ஓய்ந்தது.



வேதனையைக் காட்டாதபடி ஒதுங்கி நின்ற மீராவிடம் வந்து, ''சாரி, அண்ணி!'' என்று சொல்லிவிட்டுப் போனான் அருண்.

மீராவும் தமையனுக்காக எவ்வளவோ முயன்றுதான் பார்த்தாள்... வீட்டில் அல்ல.

தன் தோழிகள், தெரிந்தவர்கள் என்று.

ஆபீசில்கூட லோன் கேட்டுப் பார்த்தாள். திருப்பிக் கட்டும் பொறுப்பைத்தான் மதனிடம் விட்டுவிடலாமே என்று.

ஆனால், கம்பெனியை விரிவுபடுத்துவதால் செலவு அதிகம் என்றும் யாருக்கும் 'லோன்' என்று எதுவும் அளிக்க வேண்டாம் என்றும் உத்தரவு வந்திருப்பதாக உதயசங்கர் சொல்லி விட்டான்.

''என் கையிலிருந்து ஓர் இரண்டாயிரம் தரமுடியும், மீரா. மற்றது வேறே வழியில் முயற்சி செய்... எப்படியாவது ஏற்பாடு செய்து விடுங்கள். ஏனெனில், அந்தக் கம்பெனி மிகவும் நல்ல கம்பெனி. நல்ல எதிர்காலம் உன் அண்ணனுக்குக் கிடைக்கக்கூடும். பை தி பை நாளைக்கு நந்தினி பையனுடன் வருகிறாள்,'' என்றான் குதூகலத்துடன்.

மதனிடமிருந்து சிரமப்பட்டு எண்ணங்களைப் பிரித்து, முறுவல் செய்து வாழ்த்துக்கள் என்றாள் மீரா.

''இன்னொன்றுகூட, மீரா. நந்தினிக்கு ஒரு சேலை வாங்கிப் பரிசாகக் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். எனக்குத்தான் இந்த கலர் ஃபாஷன் எல்லாம் தெரியாதே! அதனால் நீதான் செலக்ட் பண்ணித் தரவேண்டும். இன்று மாலை வரமுடியுமா? ப்ளீஸ்...'' என்று கேட்டான் மேனேஜர்.

''வருகிறேன்,'' என்று தலையாட்டினாள் மீரா.

வேலையே ஓடாமல் மீண்டும் அண்ணனிடம் வந்து நின்றது மனம்.

நல்ல கம்பெனி... நல்ல எதிர்காலம்... எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடுமா?

பீரோவில் தூங்கும் நகைகள் கண்ணில் மின்னல் இட்டன.

சிலவற்றை விற்றுக் கொடுத்தால் என்ன என்ற எண்ணமும் கூட ஒரு தரம் உண்டாயிற்று.

ஆனால், தெரிந்த பிறகு என்ன ஆகும் என்று சிந்தித்ததுமே அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

கடவுள் அருள் இருந்தால் இந்த வேலைபோல வேறு ஒன்றுகூடக் கிடைக்கக்கூடும்.

அல்லாமல், அவள் தவிர்க்க நினைப்பது நடந்துவிட்டால் அப்புறம் விடிவே இராது போய்விடுமே.

கணவனிடம் கேட்டுப் பார்க்கலாமா என்றுகூட ஒரு கணம் நினைத்தாள் மீரா.

ஆனால், 'உனக்காக நான் ஏன் செய்ய வேண்டும்?' என்றோ, 'அன்னியர்களுக்குப் பண விஷயத்தில் உதவுவதில்லை!' என்றோ அவன் இன்னொரு குத்துக் குத்தக் கூடுமே தவிர, வேறு பலன் இராது என்று அந்த எண்ணத்தையும் கைவிட்டாள்.

இப்படி அவள் மனம் உளைந்து கொண்டு இருந்த போது அவள் தந்தையே அவளிடம் வந்து நின்றார்.

''கண்ணம்மா...'' என்ற கனிவுக் குரலைக் கேட்ட பிறகுதான் அவரை உணர்ந்து எழுந்தாள் மீரா.

''வாங்கப்பா... என்னப்பா... உட்காருங்கப்பா... காபி வாங்கிவரச் சொல்லட்டுமா?'' என்று பரபரத்தாள் மகள்.



லேசாகச் சிரித்துவிட்டு இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவ்ளிடம் கொடுத்தார் ஈஸ்வரன்.

''என்னப்பா... என்னப்பா...'' என்று மலங்க விழித்த மகளிடம், ''திருமணம் ஆகிவிட்டால் பிறந்த நாள்கூட மாறிவிடுமா பாப்பா?'' என்று கேலி பேசிச் சிரித்தார். ''நாளை உன் பிறந்த நாள் இல்லையா? ஒரு சேலை வாங்கிக் கொள்,'' என்றார் அன்பாக.

கண்களில் நீர் ததும்ப, ''இப்போது எதற்கப்பா இந்தச் செலவெல்லாம்?'' என்று குரல் தழுதழுத்தாள் மீரா.

''இப்போது என்ன... ஓ, மதன் விஷயம்? இந்த இரு நூறு பதினைந்தாயிரம் ஆகிவிடுமா, கண்ணு? போகிறது போ. இந்த வழி மூடினால் கடவுள் இன்னொரு வழியைத் திறந்துவிடுவார். அதையெல்லாம் நினைத்து மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே, அம்மா. போய் வரவா? நாளைக்குக் கட்டாயம் புதுச்சேலை கட்டியிருக்க வேண்டும்,'' என்று கிளம்பினார்.

இந்த அன்பெங்கே, ஆளுக்கொரு மூலையாய் ஒதுங்கும் அந்த வீடு எங்கே?

மாலையில் உதயசங்கருடன் நந்தினிக்குச் சேலை வாங்கச் சென்றபோது அதே போலவே தனக்கும் ஒன்று வாங்கிக் கொண்டாள்.

அப்படியே உதயசங்கரின் வீட்டுக்குச் சென்று, அவன் தாயார் தன் பேரனுக்காகத் தயாரித்து வைத்திருந்தவற்றை எல்லாம் பார்த்து ரசித்துவிட்டு, அவர்கள் கொடுத்த டீயையும் கேக்குகளையும் உண்டுவிட்டுக் கிளம்பி மீரா தன் வீட்டை அடைந்தபோது மிகவும் தாமதம் ஆகி இருட்டத் தொடங்கி இருந்தது.

அன்றைய தினம் தன் வாழ்வின் போக்கே மாறப்போவதை அறியாதபடி அவள் விரைந்து நடந்து வீட்டை அடைந்தாள்.

யாரோ தன்னை உறுத்துப் பார்ப்பது போலத் தோன்றவும் நின்று பக்கவாட்டில் பார்த்தாள்.

சட்டென உதட்டைச் சுழித்துக் காட்டிவிட்டு வேகமாக உள்ளே ஓடினாள் யசோதா.

வராண்டாவைத் தாண்டுகையில், ''ஹூம். வந்துவிட்டாள் மகாராணி!'' என்று மாமியார் தன் தோளில் முகத்தை இடித்துக் கொண்டாள்.

என்றைக்குத்தான் இனியையாக எதிர்கொண்டார்கள் என்று எண்ணியபடி, உள்ளே அடியெடுத்து வைத்தாள் மீரா.

''இவள் மனசில் என்னதான் நினைப்பு என்று கேட்டுவிடடா!'' மாமியாரின் குரல் முழங்கியது.

சற்றுத் திகைத்து அவள் நிற்கவும், அவள் அருகே வந்து, ''அது என்ன பாக்கெட்?'' என்று வினவினான் கிரிதரன்.

''சேலை!'' என்றாள் ஒருவித உணர்ச்சியும் இல்லாமல்.

''என்ன கலர்?''

லேசான வியப்புடன், ''இளநீல நிறம். பெரிய பிங்க் பூப்போட்டது,'' என்றாள் மீரா.

''ஏது?''

''என் அப்பா வந்து பணம்...ஆ?''

செவிப்பறை கிழிந்து போனது போலக் காது 'ஙொய்' என்றது மீராவுக்கு.

அறையின் வேகத்தில் தடுமாறியவளைப் பற்றி நிறுத்தி ''கழுதை, அடுத்தவனிடம் சேலை பெற உனக்கு மான ஈனமில்லை?'' என்று உறுமினான் கிரிதரன்.

''அப்பாதானே... வழக்கம்போ... அம்மா!''



''மீண்டும் பொய்யா?'' என்று கர்ச்சனையுடன் அடுத்த அறை விழுந்தது.

''நல்லா போடுடா! இதுவரை எட்டியும் பாராத அப்பன் இன்று சேலை வாங்கப் பணம் தந்தானாமா? யார் நம்புவது?''

''எங்களை மட்டும் நில்லாதே பாராதே என்று அடக்குவீர்களே. எவனோ ஒருத்தன்கிட்ட ஒரு சேலையையே வாங்கி வந்திருக்கிறாளே இவள்!''

''தருகிறவன் சும்மாவா தருவான்? ஒழுக்கம் கெட்ட கழுதையெல்லாம் வந்து அடைய இது என்ன தேவடியாள் வீடா?''

தாயும் மகளும் மாறிமாறி ஓதினர்.

எவனோ ஒருவனா?

''இல்லை... அப்பாதான்.'' மீரா திக்கினாள்.

''மீண்டும் பொய்யா?'' என்று கிரி கையை ஓங்கவும், மாடியிலிருந்து இறங்கி வந்திருந்த அருண், ''அண்ணா, இது காட்டுமிராண்டித்தனம்!'' என்று பாய்ந்து வந்து அண்ணன் கையைப் பற்றித் தடுத்தான்.

ஒருகணம் நிதானித்தவன், ''சீ!'' மனைவியை உதறிவிட்டு, வேகமாக வெளியே சென்றுவிட்டான்.

''அவன் பெண்டாட்டி, அவன் அடிக்கிறான்! உனக்கென்னடா உருகுகிறது?'' என்று மாமியும் நாத்தியுமாக மைத்துனனைப் பிலுபிலுவென்று பிடிக்க, மெல்ல எழுந்து நடந்தாள் மீரா.

கையும் காலும் தன்னிச்சையாக இழுத்துவரக் கிணற்றடிக் கல்மேல் அமர்ந்து கன்னங்களைத் தொட்டுப் பார்த்தாள் மீரா.

மிகவும் வலித்தது.

அதைவிட அதிகமாக மனம் வலித்தது.

வெகு நாட்களாகக் கட்டுப்பாட்டுடன் அடக்கி வைத்திருந்த கண்ணீர் ஆறாகிப் பெருகி ஓட, விம்மி விம்மி அழலானாள்.

அவளுடைய கண்களோடு போட்டி இடுவதுபோல வானமும் இருண்டு இடி இடித்து மழை பொழிந்தது.

குளிர் காற்றையும் மழையையும் உணர மாட்டாமல் அழுது கொண்டே இருந்தாள் மீரா.

வெகு நேரம் கழித்து எங்கோ தொலைவில் போல, ''அண்ணி, அண்ணி!'' என்று ஒரு பதற்றத்துடன். அருணின் குரல் கேட்டது.

பதில் குரல் கொடுக்கும் உணர்வற்று மீரா அமர்ந்திருக்க கிணற்றடி மின்சார பல்ப் ஒளி பெற்றது.

அவசரமாக வந்து, அவளைப் பார்த்துவிட்டு, ''நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள், அண்ணி?'' என்றான். ஓர் ஆறுதலுடன் பெருமூச்சுவிட்டான் அருண்.

''உள்ளே வாருங்கள், அண்ணி.''

''... ... ...''

''அண்ணி, மழையில் நனைந்துபோய் விட்டீர்களே! எழுந்து உள்ளே வாருங்கள், அண்ணி,'' என்றான் அவன்.

பழைய நினைவு வர, ''நான் என்ன உப்பா சர்க்கரையா மழையில் நனைந்தால் கரைந்து போய்விட?'' என்று முணுமுணுத்தாள் மீரா.

கூடவே வெடித்துக் கொண்டு அழுகை வர மீண்டும் விசித்தாள்.



அவளைத் தேற்றும் வகை புரியாமல், இரக்கத்துடன் ''அண்ணி'' என்று அழைத்து நிறுத்தினான் அருண்.

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் மீரா.

''யாரடா நீ சிறுவன்?'' என்பதுபோல அந்தப் பார்வை அவனுள் திகிலை மூட்டிற்று. ''அண்ணி'' என்றான் மீண்டும்.

''அண்ணியா? நான் எப்படியப்பா உனக்கு அண்ணி யாவேன்? உன் அண்ணன் எனக்குத்தாலி கட்டியதாலா?'' என்று நிதானமாகக் கேட்டாள் மீரா.

''அண்ணி!'' என அதிர்ந்தான் அவன்.

அவன் குரல் காதில் விழாததுபோல மீரா பேசிக்கொண்டே போனாள்.

''தாலி கட்டிய ஒன்றுக்காக மட்டும் அடிக்கவும் உரிமையா? அதோடு சேர்ந்த கடமை எதையுமே செய்து அறியாதவர் கைநீட்டி என்னை அடிப்பதா? என் அப்பா இன்றுவரை என்னை அடித்தது கிடையாது... ஏன், கடிந்து பேசியதுகூட இல்லை. அய்யோ! என்ன மாதிரி வளர்ந்தவளை என்ன மாதிரி வீட்டில் கொண்டு தள்ளிவிட்டார்கள்! பாதகம்... எவ்வளவு பெரிய பாதகம்...''

''அதெல்லாம் முடிந்த கதை, அண்ணி. அதையெல்லாம் நினையாதீர்கள்,'' என்றான் அருண் இரக்கத்துடன்.

விலுக்கென்று நிமிர்ந்தாள் மீரா. ''நினைக்கக் கூடாதா? நினைப்பேன். கட்டாயம் நினைக்கத்தான் செய்வேன், ஹும். எவ்வளவு ஆசைகளோடு இருந்திருப்பேன். அன்றைக்கு ஒரே வார்த்தையில் எதிர்ச்சீட்டுப் பயணி அவ்வளவுதான் என்றாரே, எதிர்ச் சீட்டுப் பயணிகளிடம் எல்லாம் இப்படித்தான் சீர்கொட்டிக் கொள்வார்களா! உழைத்துவரும் சம்பளத்தைக்கூட

வாங்கிக் கொள்வார்களா! கேட்பதானால் என்னால் மட்டும் கேட்க முடியாதா... ஒன்று செய்வாயா மைத்துனா? உனக்குத் திருமணம் என்று ஆகிப் பெண் பிறந்தால் உடனேயே கழுத்தை நெரித்துக் கொன்று போட்டுவிடு. இந்த மாதிரி அவமானம், அல்லல் எதற்கு? பாவம்...'' அடக்கி அடைத்து வைத்ததெல்லாம் பொங்கி வர, நிறுத்த மாட்டாமல் கொட்டினாள் மீரா.

''வேண்டாம் அண்ணி, உள்ளே வாருங்கள்.''

''அண்ணி அண்ணி என்கிறாயே, உன் அண்ணனின் எதிர்ச்சீட்டுப் பயணிகள் எல்லாம் உனக்கு அண்ணியா? ஹா ஹா ஹா!'' என்று சிரித்தாள் மீரா.

சட்டென நிறுத்தி, ''எதிர்ச் சீட்டுக்காரிகள் தப்புப் பண்ணினால்கூட இப்படித்தான் அடித்துவிடுவாரா?'' என்று கேட்டாள்.

''போதும் அண்ணி, உள்ளே வாருங்கள்,'' என்று குரல் கரகரக்க அழைத்தான் அருண்.

''ஏனப்பா உள்ளே வரச் சொல்லி வருந்தி வருந்தி அழைக்கிறாய்? ஓகோ! கிணற்றில் விழுந்து செத்து விடுவேன் என்றா? அச்சச்சோ! பிறகு இந்தத் தண்ணீரை எப்படிக் குடிப்பீர்கள், பாவம்.''

''அண்ணி!'' என்று பதறினான் அவன்.

''பயப்படாதேப்பா! அப்படி யெல்லாம் செய்துவிட மாட்டேன். வீணாகக் கெட்ட பெயர் ஆகிவிடுமே எனக்கு. இன்னும் இரு தங்கைகள் இருக்கிறார்களே, அவர்களின் திருமணம் முடியுமட்டும் அந்த மாதிரி அசட்டுத்தனம் எல்லாம் செய்துவிடமாட்டேன். இத்தனைக்கும் பொறுத்து இங்கே ஏன் இருக்கிறேன் என்றா நினைத்தாய்? என் அசட்டு



அப்பா பெற்றுப்போட்டு வைத்திருக்கிறாரே இன்னும் இரண்டு பெண்கள், அவர்களுக்காகத்தான். என் தலைவிதியால் அவர்கள் இருவரும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்றுதான்... ஐயோ! என்ன வார்த்தை சொல்லிவிட்டார்கள்...'' என்று விசும்பினாள்.

''சே...சே...'' என்று நிமிர்ந்து, ''கல்யாணம் என்று எனக்கும் எவ்வளவு ஆசைகள், கற்பனைகள் இருந்திருக்கும்! ஒரே வார்த்தையில் எதிர்ச்சீட்டுப் பயணிகள் என்று அத்தனையும் அடித்துப் போட்டு விட்டாரே! உணர்வுகள் சாகும் வயதா எனக்கு? வயதின் தாக்கத்தில் மெய்யாகவே வேறு ஒருவனை நான் நாடியிருந்தால்கூட குறைகூற இவருக்கு என்ன உரிமை இருக்கிறது?'' சீற்றத்துடன் பேசினாள் மீரா.

குறுக்கிட்டு, ''வேண்டாம், அண்ணி. மேலே ஒன்றும் பேச வேண்டாம்... அண்ணன்...'' என்று ஏதோ சொல்ல முயன்றான் அருண்.

அவன் பேச்சு காதிலேயே விழாதது போல, ''எதிர்ச்சீட்டுப் பயணியாம். எதிர்ச்சீட்டுக்காரி தப்பு செய்தால் இப்படிப் பேசி அடித்து விடுவாரோ? இவர் மட்டும் அந்த நிஷாவை அங்கங்கே பார்த்துக் குலாவலாமாக்கும். நான் மட்டும் சுத்த சன்னியாசினியாக இருக்க வேண்டுமாக்கும்! நியாய தேவதைதான்!'' என்று ஆத்திரத்துடன் திரும்பினாள்.

அங்கே அவன் - அவள் கணவன் நின்று கொண்டு இருந்தான்.

எப்போது வந்திருப்பான்? மீரா யோசித்தாள்.

'எப்போது வந்தால் என்ன வந்தது?' என்று அலட்சிய பாவனையோடு எழுந்தாள்.

''ஸாரி!'' என்றான் ஒற்றைச் சொல்லாக.

கையை உயர்த்தி வீங்கிய கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள் மீரா. வெட்டுப் பார்வையுடன் நிமிர்ந்து, ''மனதைவிட உடம்பு கீழானது என்கிறார்கள். கீழான உடம்பில் உள்ள வீக்கம்கூட இந்த 'சாரி'யில் சரியாகப் போகலையே! மனது மட்டும் சரியாகிவிடுமா?'' என்று கேட்டுவிட்டு வீட்டுப்பக்கமாக நடந்தாள்.

உடம்பு தடுமாறிற்று.

தாங்குவதற்காக அவன் அவளது கையைப்பற்றியபோது சட்டெனை உதறிவிட்டுப் போனாள் அவள்.

## 12

மழையில் நனைந்ததாலோ, அழுததாலோ, அன்றி அதிர்ச்சியாலோ மீராவுக்கு இரவெல்லாம் நல்ல காய்ச்சல்.

கிரிதரன் அவளைத் தூக்கிக் கட்டிலில் கிடத்தியதோ, கம்பளியால் மூடிவிட்டதோ எதுவுமே தெரியாத நிலை.

காலையில் எழுந்தபோது கட்டிலில் கிடப்பதை உணர்ந்து சுற்றிலும் பார்த்தாள். அவனைக் காணவில்லை.

உச்சுக் கொட்டிவிட்டு மெல்ல இருந்தாள்.

தாளமுடியாத தலைவலியுடன் உடம்பு எங்கோ பறந்தது.

எப்படியோ மெல்லச் சென்று, பல் துலக்கிவிட்டு வந்தவள் அதற்கு மேல் முடியாமல் அப்படியே படுத்துவிட்டாள்.

அப்பா வாங்கிக் கொடுத்த இந்த மெத்தையில் அவள் இன்றுதான் படுக்கிறாள்.



காய்ச்சல் வந்த யோகம்! ஹூம்...

அவன்தான்.

கூடவே ஒரு... டாக்டர்!

''ஒன்றும் பயப்படும்படி இல்லை. லேசான ஜுரம்தான்,'' என்று மருந்தைக் கொடுத்துவிட்டுப் போனார்.

''காபி குடிக்கிறாயா?'' என்று கேட்ட அவனுக்கு அவள் பதில் சொல்லவும் இல்லை; நிமிர்ந்து அவனைப் பார்க்கவும் இல்லை.

ஆனால், சற்றுப் பொறுத்து அருண் காப்பியுடன் வந்தபோது மறுக்காமல் குடித்தாள்.

மருந்தையும் கொடுத்துவிட்டு அவன் கிளம்பிய போது சோர்ந்த குரலில், ''அருண்!'' என்று மெல்ல அழைத்தாள் மீரா.

''என்ன அண்ணி.''

''கல்லூரி இருக்கிறதா?''

''ஆமாம், அண்ணி!''

''இன்று ஒரு நாள் லீவு போட்டுவிட்டு வீட்டில் இருக்க முடியுமா? எனக்கு... எனக்கு...'' எனுமுன் விழிகளில் நீர் கோத்தது.

''ஷ், என்ன அண்ணி இது. நீங்கள் வீட்டில் இரு என்றால் இருந்துவிட்டுப் போகிறேன். அழுவது எல்லாம் கூடாது. சரிதானா?'' என்றான் அவன் ஆறுதலாக.

சற்றே அமைதியுற்றுக் கண்களை மூடிக் கொண்டாள் மீரா.

காலிப் பாத்திரத்துடன் இறங்கி வந்த அருண் திகைத்து நின்றான்.

''இன்று மீராவின் பிறந்த நாள். அதனால் வடபழனியில் அர்ச்சனை செய்து பிரசாதத்தைக் கொண்டு வந்து அலுவலகத்துக்குக் கிளம்புமுன் கொடுத்துவிட வேண்டும் என்று அவசரமாக வந்தேன். அவள் அம்மா பால்கோவா கூடச் செய்து அனுப்பினாள். மீருவுக்குப் பால்கோவா என்றால் பிரியம் அதிகம்!'' என்று தன் மருமகனிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். ''பாப்பா எங்கே?'' என்றார் ஆவலுடன்.

''அவளுக்கு மழையில் நனைந்ததில் காய்ச்சல். மாடியில் படுத்திருக்கிறாள், வாருங்கள்,'' என்று அழைத்துச் சென்றான் அவன்.

''சுகமா, மாமா?'' என்று நலம் விசாரித்துவிட்டு ஒதுங்கினான் அருண்.

''ஆமாம்பா, காலேஜில எல்லாம் எப்படி?'' என்று அவனிடம் ஒரு பேச்சுப் பேசிவிட்டு மருமகனைப் பின் தொடர்ந்தார்.

''மழையில் நனைந்தாயாமே கண்ணா? மாப்பிள்ளை சொன்னார். சேலைவாங்கப் போனபோது நனைந்தாயா? நீ என்ன சின்னப் பிள்ளையாம்மா?'' என்று மகளின் நெற்றியைத் தொட்டுப் பார்க்கக் கையை நீட்டியவர், ''பாப்பா!'' என்று அதிர்ச்சியுற்றுக் கூவினார்.

மீராவின் ரோஜாப்பூக் கன்னத்தில் கிரிதரனின் விரல் தடங்கள் கன்றல் சிவப்புடன் தெளிவாகத் தெரிந்தன.

''என் கண்ணம்மா! இங்கே இப்படியெல்லாமா நடக்கிறது? இதை மறைக்கத்தான் அந்த மாதிரிக் கதையெல்லாம் சொல்லி எங்களை இங்கே வரவிடாமல் தடுத்தாயா?'' என்று பொருமியவர், மருமகனிடம் திரும்பி, ''என் மகளைக் கண் கலங்காமல் காப்பாற்றுவீர்கள் என்று நினைத்துக் கொடுத்தேன்.



மாப்பிள்ளை! அவளைக் கண்ணீர் விடச் செய்வீர்கள் என்று நான் கனவிலும் கருதவில்லையே!'' என்று ஆத்திரமாகப் பேசினார்.

மேலும் என்ன பேசியிருப்பாரோ?

''அப்பா!'' என்ற மகளின் பலவீனமான குரல் அவரைத் தேக்கியது.

''என்ன, பாப்பா?'' என்று அவசரமாகத் திரும்பியவர், ''வருகிறாயா கண்ணா, நம் வீட்டுக்குப் போய் விடலாம்,'' என்று அழைத்தார்.

சற்றுநேரம் யோசித்துவிட்டு, ''வருகிறேன், அப்பா. ஆனால் இப்போதல்ல, பிறகு... ரொம்பப் பிறகு...'' என்று அயர்வுடன் கண்களை மூடினாள்.

புரியாமல், ''பின்னே, அம்மாவையாவது இங்கே அழைத்து வரட்டுமா?'' என்று உருகினார் தந்தை.

ஜுர வேகத்தில் கண்ணைத் திறவாமலே, ''இதெல்லாம் பார்த்தால் அம்மா அழுவார்கள். அப்பா. அதனால் வேண்டாம்...'' என்றாள் பலவீனமாய். பேச முடியாமல் கண்ணீர் உகுத்தார் தந்தை.

மீண்டும், ''அப்பா'' என்று அழைத்து, ''ராதாவுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்துவிடுங்களேன்'' என்றாள் ஏக்கமாக.

''பரவாயில்லையப்பா... அப்புறம் சுமிக்குக்கூடச் சீக்கிரமாய்... பிறகுதான்... பிறகுதான் நான்... வருவேன்'' என்று மருந்தின் வேகத்தில் உறக்கத்தில் ஆழ்ந்தாள் மீரா.

வேதனையும் குழப்பமுமாகத் திரும்பிய ஈஸ்வரனிடம், ''இந்த மாதிரித் தவறு இனி நேராது. இது சத்தியம். கவலைப்படாதீர்கள்,'' என்று சொல்லி அனுப்பி வைத்தான் கிரிதரன்.

டாக்டர் கொடுத்த மருந்தின் பயனாக மீராவின் காய்ச்சல் இரண்டே நாள்களில் குணமாகிப் போயிற்று.

ஆனால், தலைவலி போன பிறகும் அந்தப்புருவச் சுளிப்பு போகவில்லை.

எந்நேரமும் ஒரு யோசனையாகவே இருந்தாள்.

அன்றிரவு படுக்கச் செல்லுமுன் அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான் கிரிதரன்.

கண் திறந்து பார்த்துவிட்டு, அவன் கையை ஒதுக்கிய மீரா, "அன்னியர்கள் என்னைத் தொட நான் அனுமதிப்பது இல்லை!" என்றாள்.

குணமான மறுநாளே, யார் தடுத்தும் கேளாமல் மீரா அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டாள்.

காரணம், இரண்டு நாள்கள் கழிந்த பிறகுதான் எல்லாருக்கும் தெரிந்தது.

அதுவும், கூடை நிறையப்பழமும் அல்வா பாக்கெட்டுமாக மதன் நன்றி தெரிவிக்க வந்த பிறகுதான். அதற்காக மீரா வரும் நேரம் பார்த்து வந்து காத்திருந்தான்.

அவள் வந்ததும், இவ்வளவு நல்ல குணமுள்ள உறவினர் தன் தங்கைக்கு அமைந்ததற்கு மகிழ்ந்து பேசிவிட்டுப் போனபிறகு, தேவகி அம்மாள் எரிமலையாக வெடித்தாள்.

"உன் அண்ணனுக்கு எப்படிடீ பணம் கொடுத்தாய்?" என்று முழங்கினாள் அதே அம்மாள்.

அண்ணன் கொண்டுவந்த ஆப்பிளைக் கடித்த வண்ணம் அலட்சியமாக, "என் நகைகளை விற்றுக் கொடுத்தேன்!" என்றாள் மீரா.



"ஆங்!" என்று ஒரு கணம் அசந்து போனாள் மாமியார், பிறகு, "அந்த நகைகளை நீ எப்படியடீ விற்கலாம்?" என்று ஆங்காரமாய்க் கத்தினாள்.

"என் நகை. நான் விற்றேன்!" அழுத்தம் திருத்தமாகப் பேசினாள் மருமகள்.

"உன் நகை என்றால் எப்படி? எல்லாம் இந்த வீட்டில் நீ வாழ்வதற்காகக் கொடுத்ததுடீ நீ அதை விற்க உனக்கு அதிகாரம் ஏதடி?" என்று அலறினாள் தேவகி அம்மாள்.

"வாழ்வா? சாப்பாடு தந்து, உறங்க — தங்க இடம் கொடுத்து, குளிக்க பாத்ரூம், உட்கார சோபா என்று இதெல்லாம் தருவதற்காகவா? அதற்குத்தான் வேலை செய்து பணம் தருகிறேனே. இதெல்லாம் என் நகை, என் இஷ்டம் போலச் செய்யத்தான் செய்வேன்!" என்று அடித்துப் பேசினாள் மீரா.

"அதற்கு இந்த வீட்டில் இராதே, உன் அப்பன் வீட்டுக்குப் போய்விடு. போடீ."

"போய் விடுகிறேன். ஆனால் அதற்கு முன்னால் என் அப்பன் கொடுத்த நாற்பதாயிரம் ரூபாயையும் சீர்வரிசை என்று கொடுத்த சாமான்களையும் திருப்பித் தாருங்கள். தந்த மறுவிநாடியே போய்விடுகிறேன்," என்று ஏளனமாக உதட்டை மடித்தாள் மீரா.

இதற்குப் பதில் கூற முடியாமல், "திமிரைப் பார் திமிரை! கேட்டுக் கொண்டு சும்மா இருக்கிறாயேடா, அன்றுபோல நாலு போட்டால்தான் கழுதை அடங்கும்!" என்றாள் மாமியார்.

'ஷ் போதும் அம்மா,' என்று சலித்தாற் போல மகன் பேசவும், "டேய், என்னையாடா அடக்குகிறாய்? சொக்குப் பொடி போட்டு விட்டாளா? பெற்றவளை அடக்கும்படி ஆகிவிட்டதா?" என்று பொருமியபடி எழுந்து உள்ளே போனாள் தேவகி அம்மாள்.

மீரா திரும்பி நின்று கிரிதரனை அலட்சியமாகப் பார்த்தாள். ''வாழுவதற்காகவாமே! சாப்பிடுவதும் தூங்குவதுமா வாழ்க்கை?'' என்று கேட்டுவிட்டு மாடிக்குப் போனாள்.

முகம் கழுவிவிட்டு வந்து கட்டிலில் சாய்ந்தாள்.

ஆம், கட்டில்தான்.

''என் தந்தை எனக்காகக் கொடுத்தது. என் உபயோகத்துக்குப் பிறகுதான் மற்றது.'' என்று சொல்லாமல் சொல்வதுபோல, அறைக்குள் போனாள். உட்காருவது கூடக் கட்டிலில்தான் உட்கார்ந்தாள்.

இரவும் அதில்தான் தூங்கினாள்.

ஆனால் மீராவின் காய்ச்சலின் போது கிரிதரன் தன் பழைய கட்டிலையும் அதற்குள் கொணர்ந்து போட்டுக் கொள்ளவே இதனால் வேறு பிரச்சினை நேரவில்லை.

இனி என்ன செய்வது என்று அவள் யோசித்துக் கொண்டு இருக்கும்போது, ''மீராம்மா!'' என்று அழைத்து விட்டு அவள் மாமனார் அறையினுள் வந்தார்.

எழுந்து உட்கார்ந்து கொண்டாள் மீரா.

''காபி குடித்தாயா?'' என்றார் அவர் அன்பொழுக.

மீரா பதில் பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

இந்த வீட்டில் அவள் பட்ட வேதனைகளை அங்கிருந்த அசைவற்ற பொருள்களில் தாமும் ஒரு பொருளாக இருந்து பார்த்துக் கொண்டு இருந்தவர் எதற்காக வந்தார்?

ஊகிக்க முடிந்தது ஆனால் அவர் வாயால் வரட்டும் என்று காத்திருந்தாள் —



''இன்னும் குடிக்கவில்லை. இல்லை, இல்லையா? அதான் யசோதாவைக் கொண்டு வரச் சொன்னேன். உள்ளே கொண்டுவந்து அண்ணி முன்னே வைத்துவிட்டுப் போயேன். ம்... எடுத்துக் குடியம்மா, சூடு சரியாக இருக்கிறதா?''

''சரிதான்,'' என்று காபியை மெல்ல ரசித்துக் குடித்தாள் மீரா.

''வெறும் வயிற்றோடு இருக்கும்போது கண்ட பேச்சுப் பேசக் கூடாது என்றால் உன் அத்தைக்குத் தெரிவது இல்லை, பாரம்மா. புருஷன் பொண்டாட்டிக்கு இடையே தகராறு வருவது உண்டுதான். ஆனால், அவன் அடித்துவிட்டான் என்பதற்காக நகையைத் தூக்கிப் போய் விற்றுப் பிறந்த வீட்டில் பணத்தைக் கொடுப்பது சரியில்லை. எப்படியாவது உன் அப்பா மூலியமாக அந்த நகைகளைத் திரும்ப வாங்கப்பார். நானும் உன் புருஷனிடம் கை நீட்டக் கூடாது என்று கண்டித்து வைக்கிறேன்.''

ஆச்சரியம் போலக் கண்களை விரித்து அவரைப் பார்த்தாள் மீரா. ''அதெப்படி மாமா! முன்பானால் அவர் உங்கள் பிள்ளை, கண்டிக்கலாம். இப்போது என் கணவர் ஆயிற்றே. பெற்றவர்கள் ஆனாலும் புருஷன் பெண்டாட்டி விஷயத்தில் தலையிடுவது தப்பு இல்லையா? தப்பு என்று தெரிந்த ஒன்றை இருந்திருந்து நீங்கள் செய்யலாமா?'' என்றாள் நமட்டுச் சிரிப்புடன்.

என்ன சொல்வது என்று புரியாமல் விழித்துவிட்டு எழுந்து போய் விட்டார் தாமோதரன்.

'குனியக் குனியக் குட்டிய மனிதர்கள் நிமிர்ந்து பார்த்தால் நடுங்குகிறார்கள்!' என்று ஏளனமாக முணுமுணுத்துக் கொண்டாள் மீரா.

அதே நிமிர்வை எல்லா விஷயங்களிலும் கடைப்பிடித்தாள்.

காலை ஐந்து மணிக்கே எழுந்து அடிமைபோல் உழைப்பதை நிறுத்தினாள்.

தன் வீட்டில் வழக்கம்போல் ஆறு மணிக்கு எழுந்து தன் வேலைகளை நிதானமாகச் செய்தாள்.

மாமியாரின் அழைப்புகளையோ காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

கட்டிச்செல்ல மீராவின் சேலையை எடுத்த யசோதாவை, "வைடி, கீழே!" என்ற ஓர் அதட்டல் அடக்கியது.

உள்ளே சென்று பார்த்தபோது, வேண்டும் என்றே காபியை முடித்து வைத்திருந்தாள் மாமியார்.

மேசைமேல் இருந்த இட்டிலியை எடுத்து உண்டு விட்டு ஒரு. தம்ளர் பாலில் யசோதாவுக்காக வாங்கி வைத்திருந்த 'போர்ன்விடா' வைப் போட்டுக் கலக்கிக் குடித்துவிட்டு அலுவலகத்துக்குக் கிளம்பிப் போனாள் மீரா. அதுவரை யாரையும் ஏறிட்டுப் பார்க்கவும் இல்லை, நிமிர்ந்த தலையைக் குனியவும் இல்லை.

அலுவலகம் சென்றால் அங்கே பதறிக் கொண்டு வந்தார் தந்தை.

"உன் நிலைமை அங்கே சரியாக இல்லாதபோது என்ன காரியம் செய்துவிட்டாய், அம்மா! முன்பே தெரிந்திருந்தால் தடுத்திருப்பேனே! பணத்தைக் கட்டி விட்டல்லவா வந்து சொல்கிறான் மடையன்!" என்று அங்கலாய்த்தார்.

"நான்தான் அப்படிச் சொல்லச் சொன்னேன், அப்பா. உங்கள் குணம் தெரிந்துதான் செய்துவிட்டுப் பிறகு சொல்லி அப்பாவுக்கு ஆனந்த அதிர்ச்சி கொடு அண்ணா என்று அண்ணனிடம் சொன்னேன்," என்று முறுவலித்தாள் மகள்.



"கண்ணம்மா, உனக்கு எது முக்கியம் என்று இன்னமும் தெரியவில்லையேடா. ஒரு வேலை போனால் இன்னொன்று. ஆனால் ஒரு வாழ்க்கை போனால் வேறு கிடையாதே... உன் கணவருக்குத் தெரியுமா தெரியாதா?" என்று திடுமென எழுந்த சந்தேகத்துடன் கேட்டார் ஈசுவரன்.

"தெரியும்," என்றாள் மீரா திருத்தமாக.

"பின்னே... ஒருவேளை இதற்காகவே நீ அவரிடம் சண்டை போட்டாயா? அதனால்தான்..." சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "இங்கே பேசவும் முடியவில்லை, மாலையில் வீட்டிற்கு வருகிறாயா? நான் இன்னமும் உன் காய்ச்சலை அம்மாவிடம் சொல்லவில்லை, பதறிப் போவாளே... அதிருக்கட்டும், நீ எப்படியாவது வீட்டுக்கு." என்றபோது மீரா இடைமறித்தாள்.

"இல்லையப்பா. சில நாள்கள் கழித்து வருகிறேன். ஆனால் நீங்கள் நினைப்பதுபோல ஒன்றும் பயம் இல்லை. நகைகளை விற்றதற்கு அவர் ஆட்சேபிக்கவே இல்லை. அதனால் கவலையே படாமல் போய் வாருங்கள். மதன் சம்பளத்தில் சீக்கிரமாய் நிறையச் சேமியுங்கள்," என்று சொல்லித் தந்தையை அனுப்பி வைத்தாள்.

ஆனால் தந்தையின் பேச்சு அன்றைய மாலையை மீண்டும் நினைவுபடுத்தி விட்டது.

அவன் அடித்ததும் கேட்டதும் படம்போல மனதில் வந்தன.

இதற்குப் பழி வாங்க வேண்டாமா?

ஒரு காரணம் இல்லாமல் என்னவெல்லாம் பேசினார்கள்! இதைச் சும்மா விட்டுவிடுவதா?

சுற்றுமுற்றும் பார்த்தாள், என்ன வழி என்பது போல.

ஓரக் கண்ணால் திருட்டுத்தனமாக அவளை ரசித்துக் கொண்டிருந்த மோகன்ராம் மீராவின் பார்வையில் பட்டான்.

சட்டென அவள் முகம் மலர்ந்தது.

அவன் புறமாகத் திரும்பி, பற்கள் அழகுற மின்ன மந்தகாசமாய் ஒரு புன்னகை புரிந்தாள்.

ஒரு கணம் அதிர்ந்துவிட்டுப் பின் பல் முப்பத்திரண்டை யும் காட்டினான் அவன்.

## 13

அன்று சம்பள தினம்.

ஏதோ எதிர்க்கட்சி ஊர்வலம் ஒன்று அந்தப் பக்கமாக வரப் போகிறது என்று ஒரு மணி நேரம் முன்னதாகவே அலுவலகம் மூடிவிட்டார்கள்.

'டிரைவ் இன்'னுக்குப் போகலாமா என்று கேட்ட மோகன்ராமிடம் மறுத்துவிட்டு வீடு திரும்பினாள் மீரா.

தகப்பனாருடைய கணக்கு வழக்குகள் ஏதோ பார்க்க வேண்டும் என்று லீவு போட்டுவிட்டு வீட்டில் இருந்தான் கிரிதரன்.

இருக்கட்டுமே நமக்கென்ன? வேண்டுமென்றே லேட்டாகப் போய்க் காட்டினால் என்ன என்றெல்லாம் மனம் நினைக்கவே செய்தது.

ஆனால் எங்கே இருப்பது?

அந்த மோகன்ராமின் உளறலை ஒரு மணிநேரம் கேட்பது கடினம்.



அம்மா வீட்டுக்குப் போனால் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேரும்—அதுவும் கடினம்.

மொத்தத்தில் ஒன்றும் பிடிக்காமல் வீட்டுக்கே கிளம்பினாள் மீரா.

சம்பளப் பணம் கைப்பையில் நெருட, சற்று யோசனை யுடனே உள்ளே காலடி எடுத்து வைத்தாள் மீரா.

ஹாலில் சோபாவில் அமர்ந்து உரையாடிக் கொண்டு இருந்த இரு பெண்களில் ஒருத்தி மீராவைக் கண்டதும் சற்றுத் திகைத்தாற்போல எழுந்தாள்.

அருகில் அமர்ந்திருந்த யசோதா, காலடியில் விழுந்து கும்பிடுபவள் போல அந்தப் பெண்ணைப் பயபக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். மீராவிடம் கவனம் திரும்பவும் அவள் கண்களில் கனல் வீசிற்று.

தன் வழக்கமான சன்னல் சீட்டில் சற்றே சாய்ந்தபடி நின்றிருந்தான் கிரிதரன்.

பேசிக் கொண்டிருந்த விஷயத்தை இடையிலே விட்டாற் போல, "பிறகு பார்க்கும்போது பேசலாம் ஆன்ட்டி, இப்போது நான் கிளம்புகிறேன். திறப்பு விழாவுக்குக் கட்டாயம் வந்துவிடுங்கள்," என்று கிளம்பினாள் புதிய பெண்.

"வருகிறேம்மா. கொஞ்சம் பொறு. குங்குமம் கொணர்ந்து தருகிறேன். ஊ.அவரவர்க்குக் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்!" என்று பெருமூச்சு விட்டபடி உள்ளே சென்றாள் தேவகி அம்மாள்.

கிரிதரன் முகத்திலிருந்து எதையும் கண்டுகொள்ள முடியாவிட்டாலும், யசோதாவின் முகத்தில் இருந்த சவாலையும், எழுந்த பெண்ணின் முக வெளுப்பையும் தமிழ் அல்லாதவர் போன்ற உச்சரிப்பையும் கேட்டாள் மீரா.

இரண்டும் இரண்டும் நாலு என்று கூட்டுவது கஷ்டம் இல்லையே

கூடவே, இவளா, எங்கே பார்த்திருக்கிறேன் என்று மனம் பிறாண்டியது.

எங்கே என்று யோசித்தபடியே ஒவ்வொருத்தர் முகத்தையும் பார்த்துவிட்டு ஓர் ஏளனச் சிரிப்புடன், ''ஏன் யசோ? வீட்டுக்கு வந்தவர்களை அறிமுகம் செய்து வைக்கும் நாகரிகம் கூட உனக்குத் தெரியாதா?'' என்றாள் கேலி போல.

''அண்ணி'' என்று ஆத்திரமாகக் கத்திய யசோதா உடனே வாயடைத்து நின்றாள்.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, ''பரவாயில்லை. நாமே அறிமுகம் செய்து கொள்ளலாமே. என் பெயர் மீரா. அதாவது மிஸஸ் கிரிதரன்!'' என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லி விட்டு, ''நீங்கள்?'' என்று கூரிய பார்வையுடன் கேட்டாள் மீரா.

''நான்...நான்...என் பெயர் நிஷா.''

கைப்பையை அலட்சியமாக டீபாய் மேல் போட்டாள். ''ஓ! நீங்கள்தானா அது? இவருடைய பழைய...காதலி... அல்லது 'பழைய' என்ற வார்த்தை சரியில்லையோ?'' என்று ஒரு குரூரத்துடன் வினவினாள் மீரா.

நிஷாவின் முகம் சட்டென வெளுக்க, யசோதாவின் முகம் கறுக்க. கிரிதரன் தன் இடத்திலிருந்து எழுந்து வந்தான். ''பண்டிகை சமயம் ஆறு மணிக்குள் கடைக்குள் இருக்க வேண்டும் என்றாயே, கிளம்புவதுதானே...' என்றான் நிஷாவிடம்.

சட்டெனப் புரிந்து போயிற்று மீராவுக்கு.

அந்தத் துணிக்கடையில் 'சேல்ஸ் வுமன்.'



ஆக செய்தி இப்படித்தான் வந்ததா?

''ஆமாம், மிஸ் நிஷா, உங்கள் கடையில் யார் துணி வாங்கினாலும் அவர்கள் வீட்டுக்கு உடனே தெரியப்படுத்தி விடுவதுதான் வழக்கமாக்கும்!'' என்று அப்பாவி போலக் கண்களை விரித்தாள்.

வந்தவளின் வெண்ணிற முகம் குன்றிச் சிவப்பதை ரசித்தபடி, 'சொன்னவர்கள் நடந்ததை முழுசாகச் சொல்ல வேண்டாமா? ஒரே மாதிரி இரண்டு சேலைக்கு இரண்டு பில் போட்டதையும், தனித்தனியாகப் பணம் தந்ததையும் கூடச் சொல்லியிருக்கலாமே... ஒரு வேளை எஃபெக்ட் கெட்டுவிடும் என்று விட்டு விட்டீர்களா?'' என்று எகத்தாளமாய்த் தொடர்ந்து கூறி முடித்தாள்.

ஃபேன் காற்றின் குளிர்ச்சியிலும் வந்தவளுக்கு வியர்த்துக் கொட்டுவதைத் திருப்தியுடன் கண்டாள்.

தேவகி அம்மாள் குங்குமத்துடன் வருவதைக் கண்டதும், பாய்ந்து சென்று குங்குமம் எடுத்துக்கொண்டு, 'நான் வருகிறேன்,' என்று வெளியே விரைந்தாள் நிஷா.

''பஸ் ஏற்றிவிட்டு வருகிறேன், அம்மா,'' என்று கிரிதரனும் உடன் கிளம்பினான்.

''பஸ் வரை தானா? ஏன், வீட்டிற்கே கொண்டு விட்டு வரலாமே! ஒருகால்... அவள் வீட்டில் கொஞ்சம் ஒத்துக் கொள்ள மாட்டார்களோ! ஆனால் என்னைப் பொறுத்த வரையில் ஆட்சேபனையே கிடையாது,'' என்று ஸ்டைலாகத் தோளைக் குலுக்கினாள் மீரா.

அதற்குள் கதவுவரை சென்றிருந்த கிரிதரன், திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்தான்.

பார்வையில் ஓர் உணர்ச்சியும் இல்லாதபோதும் மீராவின் பேச்சு நின்றுவிட்டது.

அவன் திரும்பிச் சென்றதும் தன்னிடமே மூண்ட கோபத்தில் தலையைச் சிலுப்பிக் கொண்டு மாடிக்குச் சென்றாள்.

முகம் கழுவிவிட்டுக் காபிக்காக அவள் கீழே வந்தபோது கிரிதரன் திரும்பி விட்டிருந்தான்.

நேராகச் சென்று, சாப்பாட்டு மேசையை ஆராய்ந்து தட்டில் கொஞ்சம் புட்டைக் கொட்டித் தேங்காய்ப்பூ. சர்க்கரை தூவிக் கலந்து உண்ணத் தொடங்கினாள்.

காபியைக் கொணர்ந்து அழுத்தத்துடன் மேசை மேல் வைத்துவிட்டு, ''சம்பளம் எங்கே?'' என்று கேட்டாள் மாமியார்.

வாயிலிருந்து புட்டை விழுங்கிவிட்டு, ''இந்த மாதம் சீட்டுப் பணம் எவ்வளவு கட்ட வேண்டும்?'' என்று வினவினாள் மருமகள்.

''இருநூற்று எண்பது ரூபாய். ஏன்?'' என்றாள் மாமியார் புரியாமல்.

ஓர் உத்தேசத்துடன் கையில் கொண்டு வந்திருந்த மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை மேசை மேல் வைத்து விட்டுச் ''சீட்டைக் கட்டி விடுங்கள்,'' என்றாள் மீரா.

திகைப்புடன், 'ஏன்? மிச்ச ஐந்நூறு ரூபாய் எங்கே?'' என்று மாமியார் வினவினாள்.

காபியை எடுத்து ஒரு வாய் அருந்திவிட்டுத், ''தரப் போவதில்லை!'' என்று அமைதியாகச் சொன்னாள் மீரா.

''என்னது!'' என்று வாயைப் பிளந்த தேவகி அம்மாள் உடனே சுதாரித்துக் கொண்டு கத்தத் தொடங்கினாள், ''வரவரத்



திமிர் ஒரேயடியாய்த்தான் ஏறுகிறது உனக்கு. காய்ச்சலில் கிடந்தவள் ஆயிற்றே என்று கொஞ்சம் விட்டுப் பிடித்தால் உச்சாணிக் கொம்பில் ஏறிப்பார்க்கின்றாயா? மரியாதையாக முழுப்பணத்தையும் தந்துவிடு. இல்லாவிட்டால்...'' என்று பயமுறுத்துவது போலப் பேசினாள்.

அலட்சியமாக அவளைப் பார்த்துவிட்டு, ''நான் முதுகு ஒடிய வேலை பார்த்துச் சம்பாதிக்கும் என் பணம் இது. பாவம். நம் சம்பளத்தை நம்பிக் கட்டத் தொடங்கிவிட்ட சீட்டாயிற்றே. அதையேனும் கட்டிவிடலாம் என்று பார்த்தேன். நீங்கள் பேசுகிற தினுசைப் பார்த்தால் அப்படி நினைத்ததே தப்பு போலத் தெரிகிறது,'' என்று மேசைமேல் வைத்த பணத்தைத் திரும்ப் எடுத்துக் கொண்டாள் மீரா.

''அப்படியானால் இங்கே இராதேடி. உன் வீட்டுக்கே போய்விடு. போ!'' என்று அதட்டினாள் மாமியார்.

''தாராளமாய்ப் போய்விடுகிறேன் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். நான் கொண்டுவந்த சீர்ப் பொருள்கள், ரொக்கப் பணம் எல்லாவற்றையும் இப்போதே தந்து விடுகிறீர்களா?'' என்றாள் கேலிக் குரலில்.

பதில் சொல்ல முடியாமல் முகம் சிறுத்துப்போய், ''உன்னிடம் வாங்குகிற வழியில் வாங்குகிறேனடி!'' என்று முன் அறைக்கு மகனிடம் ஓடினாள் தேவகி அம்மாள்.

''கிரி! கேட்டாயாடா உன் பொண்டாட்டி...'' என்று சொல்லி முடிக்குமுன், ''கேட்டது. சீட்டுக்கு இனி நான் பணம் தருகிறேன். விடுங்கள்,'' என்றான் மகன், அமர்ந்த குரலில்.

''ஆங்!... சீட்டு... சரி சரி. ஆனால் யசோ ஒரு சேலை வேணும் என்று ஆசைப்பட்டுக் கேட்டாளே. அதுக்கு இருநூறு வேண்டும்,'' என்று இழுத்தார் தாயார்.

''ஒவ்வொரு மாசமும் சேலை வாங்குவது அவசியம் இல்லையம்மா. தேவைக்குத் தக்க வாங்கினால் போதும். சேலையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்,'' என்று மகன் முடித்துவிட மறுபேச்சின்றி மாமியார் அகலுவது தெரிந்தது.

குரலை உயர்த்தாமலே கண்டிப்பாக உணர்த்துவது எப்படி என்பதும் அப்போது புரிந்தது மீராவுக்கு.

மொத்தத்தில் வீட்டில், அனைவருக்குமே கிரிதரனிடம் ஒரு பயம் இருப்பதை மீரா உணர்ந்திருந்தாள்.

தம்பி தங்கைகள் அவன் பேச்சுக்கு மாறிப் பேசுவதில்லை.

அன்னை அடங்கிப் போகும்போது தந்தை ஒதுங்கி விடுவார்.

அதனால்தான் எப்படியும் நிஷாவை மணந்து கொண்டு விடலாம் என்று நிச்சயமாக இருந்தானோ?

நிஷாவின் நினைவு வந்ததும் மீராவின் முகம் கடுகடுத்தது.

வீட்டிற்கே அழைத்து வந்தாகிறதா? இருக்கட்டும், இருக்கட்டும்.

மறுநாள் மாலையில் சற்றுத் தாமதமாகவே மோகன்ராமின் ஸ்கூட்டரில் அவனோடு வந்து இறங்கினாள் மீரா.

அங்கங்கே அவரவர் இருந்த இடத்தில் திகைத்து நிற்க அவனை உள்ளே அழைத்து வந்தாள்.

''உள்ளே வாருங்கள் மோகன், இதுதான் எங்கள் வீடு. ஊருக்கு வெளியே என்றாலும் வசதியாகப் பெரியதாகக் கட்டி வைத்திருக்கிறார்கள். இதோ இவர்தான் என் கணவர், பெயர் கிரிதரன் ரொம்...ப சாது. இவர் என்னோட ஆபீசில் வேலை செய்யற மிஸ்டர் மோகன்ராம். எம்.டி.க்குச் சொந்தக்காரர்! பஸ்ஸில் அலையப் போகிறேனே. பாவம் என்று லிஃப்ட் தந்தார். உட்காருங்கள் மோகன். இதோ வருகிறேன்...'' என்று உள்ளே சென்று, ஒரு தட்டில் பிஸ்கட் கொணர்ந்து வைத்தாள்.



மோகன்ராம் கிரிதரன் அமர்ந்திருந்த இரட்டை சோபாவிலேயே ஒருபுறமாய் அமர்ந்து கொண்டாள்.

''சாப்பிடுங்கள் மோகன்.''

கிரிதரன் முகத்தில் சலனம் ஏதும் இல்லை.

'என்ன வேலை என்ன நடப்பு' என்பது போல மோகன்ராமிடம் பொதுப்படையாகப் பேசினான்.

மோகன்ராம் கிளம்பும்வரையில் கூடவே இருந்து பேசி வழியனுப்பி வைத்தாள்.

அவன் சென்றதும் மனைவியிடம் திரும்பி, ''உன் காரியத்திற்காக நீ தேர்ந்தெடுத்திருக்கும் ஆள் சரியில்லை, மீரா. கவனத்துடன் இரு.'' என்று எச்சரிக்கை செய்தான்.

ஒருகணம் திணறிப்போய் தலைகுனிந்த மீரா உடனே நிமிர்ந்து, ''உங்கள் எதிர்ச்சீட்டுப் பயணிகளுக்கெல்லாம் இப்படித்தான் புத்திமதிகளை அள்ளி வீசுவீர்களாக்கும்!'' என்றாள் துடுக்காக.

மோகன்ராம் விஷயம் அத்துடன் முடிந்துவிடவில்லை.

''என்ன ஒரு திண்ணக்கம் இருந்தால் எவனையோ இங்கேயே இழுத்துக் கொண்டு வருவாய்!'' என்று வெடித்தாள் மாமியார்.

''அந்தப் பெண் நிஷாவோடு கொஞ்சியவர்கள் எந்த வாயோடு என்னிடம் பேசுகிறீர்கள்?'' என்று அவள் வாயை அடைத்தாள் மீரா.

மாமனார் வந்து, ''அந்தப் பையனோடு நீ அங்கே இங்கே போகிறதாகக் கேள்விப்பட்டது மெய்யாகப் போய்விட்டது. கிரியும் உன்னைக் கண்டிக்கிறதாகக் காணோம். நான் உன் அப்பாவிடமே போய்... உங்கள் பொறுப்பு என்று சொல்லிவிடப் போகிறேன்,'' என்றார் கோபமாக.

சற்று அவரையே நேராகப் பார்த்துவிட்டு மீரா சொன்னாள். ''உங்களுக்கு மட்டும்தான் பிளக்கில் கை வைத்துவிடுவேன் என்று மிரட்டத் தெரியுமா மாமா? என்னாலும் முடியும். ஆனால் நான் மெய்யாகவே வைத்து விடுவேன்.''

கணவனும் மனைவியுமாக அதிர்ந்ததுபோல் நிற்கையில், ''அதுவும் சும்மா கை வைக்க மாட்டேன். புகுந்த வீட்டுக் கொடுமையில் சாகிறேன் என்று போலீஸ் கமிஷனருக்கு எழுதி வைத்துவிட்டுத்தான் சாவேன். அப்புறம் உங்கள் கதியெல்லாம் என்ன ஆகும் தெரியுமா?'' என்று மிரட்டினாள்.

இருவருமாக முகம் வெளுத்து நிற்பதைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புடன், ''இவ்வளவு மாய்ந்து போகிறீர்களே! உங்கள் மகன் என்ன கையாலாகாதவரா? ஆண் பிள்ளைதானே, தன் கவுரவத்தைத் தானே காப்பாற்றிக் கொள்ள மாட்டாரா? அவ்வளவு நம்பிக்கை இல்லாமலா இருக்கிறீர்கள்?'' என வினவினாள்.

அருணும் வந்தான். ''நிமிர்கிறீர்கள் என்று திருப்திப் பட்டால் எங்கேயோ போகிறீர்கள் அண்ணி?'' என்றான் அழுது விடுபவன் போல.

பதில் சொல்ல வாயெடுத்து விட்டுப் பேசாமல் இருந்து விட்டாள்.

வருத்தம் நிறைந்த பார்வையுடன் போனான் அவன். யசோதா அப்படி இல்லை.



ஒருநாள் மீரா தாமதமாக வந்தபோது உள்ளே புகும் போதே வெடித்தாள். ''அண்ணி! ஏதோ நிஷாக்கா அண்ணியாக வரவில்லையே என்று உங்களிடம் கடுமையாக நடந்தது மெய்தான். தப்பும் கூடத்தான். அதற்காக மன்னிப்பே கேட்டுக் கொள்கிறேன். ஆனால், தப்புக்குத் தண்டனை கொடுப்பதாக எண்ணி என் அண்ணன் மனதை இன்னும் கஷ்டப் படுத்தாதீர்கள்!'' என்று கரம் குவித்தாள்.

மீரா பதிலை யோசிக்கும்போது, ''உன் வேலையைக் கவனி யசோ, அது போதுமானது. மற்றவர்கள் விஷயங்களில் தலையிடாதே!'' என்று அவளை அதட்டினான் கிரிதரன்.

கண்களில் நீர் பொங்க, ''என்னண்ணா, உங்களுக்காகத் தானே சொன்னேன்!'' என்று பொருமியவளைத் தோளில் சமாதானமாகத் தட்டினான் அவள் அண்ணன். ''சொல்ல வேண்டாம்,'' என்று ஒற்றை வார்த்தையை மட்டும் சொல்லி முறுவலித்து விட்டுப் போனான்.

இதெல்லாம் போக ஆபீஸ் மேனேஜரான உதயசங்கரும் ஒருநாள் மீராவை அழைத்தான்.

''திருமணமான பின் மீண்டும் வந்து சேர்ந்த முதல் நாளே நான் உனக்கு எச்சரிக்கை செய்தேன். மீரா! இவ்வளவு நாள்களாகப் பாராட்டும் விதமாகத்தானே நடந்து கொண்டாய். இப்போது என்ன? அடிக்கடி மோகன்ராமோடு உன்னை ஆபீஸிலும் பார்க்கிறேனே. இதையே உன் கணவர் பார்க்க நேர்ந்தால் என்ன ஆவது?'' என்று வருத்தமும் கோபமுமாக வினவினான்.

இவனிடம் எதை விளக்குவது?

அதுவும், அவளுக்கே நடப்பும், நடக்கப் போவதும் முடிவும் தெரியாதபோது அவனிடம் என்னவென்று சொல்வது?

ஓர் எரிச்சல்படும் பாவனையை முகத்தில் கொண்டு வந்து, ''ஆபீஸ் வேலையில் தப்பு நேர்ந்தால் சொல்லுங்கள். மற்றப்படி என் சொந்த விஷயங்களில் நீங்கள் தலையிடுவது சரியில்லை மிஸ்டர் மேனேஜர்!'' என்றாள் மீரா.

அதிர்ச்சியும் வருத்தமுமாக அதன் பிறகு அவளிடம் பேசுவதையே தவிர்த்தான் உதயசங்கர்.

இத்தனை பேர் இத்தனை விதமாகப் பேசியும் பேச உரிமை உள்ளவன் முதல்நாள் 'ஆள் சரியில்லை' என்று பூடகமாகப் பேசியபின் வேறு எதுவும் செய்தானில்லை.

எப்படிச் செய்வான்?

அவனைப் பொறுத்தவரையில் அவள் வெறும் எதிர்ச் சீட்டுப் பயணி. இவள் எக்கேடு கெட்டாலும் அவனுக்கு அக்கறை இல்லை. அவ்வளவுதான் விஷயம்.

'அவ்வளவேதான்!' என்று வேதனையோடு நினைத்தாள் மீரா.

'அவ்வளவேதானா?' என்ற சினமும் கூடவே கிளர்ந்தது.

## 14

மோகன்ராம் முட்டாள் அல்ல.

நிமிர்ந்துகூடப் பாராமல் ஒரு ஜடப் பொருளைப் போல அவனை ஒதுக்கிய மீரா, திடுமெனப் புன்னகை செய்ததும் பேசியதும் தலைசுற்ற வைத்தபோதும், அந்தத் தலைக்குள் யோசனை யையும் தூண்டியிருந்தன.

மணமாகிச் சில மாதங்களே ஆன பெண் என்றாலும் புதுமணப் பெண்களுக்குரிய நாணத்தையும், பொலிவையும் அவளிடம் அவன் காணவில்லை.



அன்று அவளது வீடுவரை அவனை அழைத்ததும், கணவன் எதிரிலேயே அவனோடு சோபாவில் அருகமர்ந்து பேசி உபசரித்ததும், கணவன் மனைவிக்குள் ஏதோ சரியில்லை என்பதை உணர வைத்தன.

ஒருவருக்கொருவர் உயிராக இருக்கும் தம்பதி என்றால் இதில் விகல்பமாக ஒன்றையும் எண்ணிவிட மாட்டான் என்ற தைரியத்தில் அப்படி உட்கார்ந்து உபசரித்ததாக எண்ணிக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு சாதாரணக் கணவன் மனைவியின் சொந்தங்கூட இவர்களிடம் காணப்படாதது அவனது கண்ணை உறுத்திப் பார்க்க வைத்தது.

சென்னையில் வசித்த தன் நண்பர்களிடம் கிரிதரன் பற்றிய விவரம் கூறி விசாரித்தான்.

நிஷா அவனது இனப்பெண் என்பதால் எளிதாகவே விவரங்கள் தெரிய வந்தன.

மொத்தத்தில் எங்கும் மனைவி பாராமுகக் கணவனின் பொறாமையைத் தன்னைக் கொண்டு தூண்ட முயல்கிறாள் என்று கண்டான்.

இந்த விவகாரத்தில் தானும் குளிர் காய்ந்துவிட எண்ணம் கொண்டான்.

ஒன்றும் அறியாதவன் போல, 'இன்று உன் கணவரை மொரேஸ்டைல் என்ற துணிக்கடையில் பார்த்தேன்,' என்றான் மீராவிடம்.

அது நிஷா வேலை செய்யும் கடை.

அங்கே கிரிதரன் போவது என்றால் நிஷாவைப் பார்ப்பதற்காக மட்டும்தானே இருக்க வேண்டும்?

நெஞ்சு குமுறினாள் மீரா.

அன்று மோகனராமுடன் டிரைவ் இன்னுக்குப் போய் பாசந்தியை ருசியறியாமல் சாப்பிட்டாள்.

''இன்று எங்கள் இனத்திருமணம் ஒன்றில் உன் கணவரைப் பார்த்தேன். அங்கே ஒரு பெண்ணோடு ஓரமாய் அமர்ந்து வெகு நேரம் பேசிக்கொண்டு இருந்தார். அவள் பெயர் உஷாவோ... என்னவோ, ஒரு ஷா என்றார்கள்,' என்றான் இன்னொரு நாள்.

அவனோடு பீச்வரை போனாள் மீரா.

மோகன்ராம் சொல்வது பொய்யாக இருக்கக்கூடும் என்ற எண்ணமே அவளுக்கு வரவில்லை.

கணவனோ வெளிப்படையாக நிஷாதான் தன் காதலி என்றான்.

அதோடு மோகன்ராமுக்கு நிஷா—கிரிதரன் உறவு பற்றி ஒன்றும் தெரியாதே!

சும்மா ஏதோ ஒரு பெண்ணோடு என்றால் கூட அவன் கதைவிடுகிறான் என்று ஒதுக்கி விடலாம்.

ஆனால் நிஷாவின் கடை, அவள் பெயர்...எல்லாம் மீராவுக்கு அவனை மெய்யாக்கின.

அதோடு கிரிதரனும் நிஷாவை வீடுவரை அழைத்து வரவில்லையா என்ற ஆத்திரம் வேறு.

இவளிடம் ஒரு வார்த்தை - 'இன்னொருவனோடு சுற்றுகிறாயே!' என்று அவன் கேட்க வேண்டும். கேட்கையில் பதிலுக்கு, 'நிஷாவோடு நீங்கள் சுற்றவில்லையா?' என்று கேட்டுத் தலைகுனிய வைக்க வேண்டும் என்ற வெறியுடன் இருந்தாள் மீரா.



கடைசியாக ஒருநாள், மோகன்ராம் சற்று அதிர்ச்சியுற்ற முகபாவனையுடன் நாலு தடவை பேச வாயெடுத்து நிறுத்திப் பின்னர், ''மீரா, கிரிதரனுக்கும் அந்தப் பெண் நிஷாவுக்கும் இடையே தப்பான உறவு ஒன்றும் இல்லையே!'' என்று விசாரித்தான்.

''என் கண்ணில்தான் கோளாறாக இருக்க வேண்டும்!'' என்று முணுமுணுக்கவும் செய்தான்.

அவன் வலையில் விழுந்தாள் மீரா.

அவன் கணித்தது போலவே, ''இவன், ஏதோ தப்பான நிலையில், அவர்களைப் பார்த்திருக்கிறான்!'' என்று ஊகித்தாள்.

உள்ளே தீப்பிடித்த போதும் காட்டிக் கொள்ளாமல், ''அதெல்லாம் இராது,'' என்றாள் அலட்சியம் காட்டி.

அவன் மீண்டும் ஏதோ சொல்லத் தொடங்கவும், முந்திக் கொண்டு, ''மோகன்! மெய்யாகவே நீங்கள் மகாபலிபுரம் பார்த்ததில்லையா? ஏன்?'' என்று பேச்சை மாற்றினாள்.

சில நாட்களாகவே தான் ஒருவன் மட்டும் மகாபலிபுரம் பாராதது பெரும் குறைபோல வருத்தப்பட்டுக் கொண்டிருந் தான் அவன்.

''இந்த கைடுகள் ஆளுக்கொரு கதை விடுவார்கள் என்கிறார்கள். உன்னைப்போல விஷயம் தெரிந்தவர்களும் வந்தால் போகலாம். ஆனால் உன்னால்தான் வரமுடியாதே!'' என்றான் அவன்.

''ஏன்?''

''உங்கள் வீடுகளில் ஆண்கள் எங்கே எப்படிப் போனாலும் பெண்கள் அடக்கமாக வீட்டோடுதானே கிடக்கிறீர்கள். எங்கள் பெண்களைப் போலத் தைரியமாய் நிற்பது இல்லையே''

எங்கள் பெண்களைப் போல...

அந்த நிஷாவைப் போல—இன்னொருத்தியின் கணவனோடு குலாவும் தைரியம்...

"நான் வருகிறேன்," என்றாள் மீரா நிமிர்ந்து

காலையில் மோகன்ராமுக்கு வேறு வேலை இருந்ததால் மதியத்திற்கு மேல் போவதாக முடிவு செய்தனர்.

இரண்டு மணிக்குக் கிளம்பிச் சென்று, ஒரு மணி நேரம் சுற்றிவிட்டு ஐந்து மணிக்கு இங்கு வந்து சேர்ந்து விடுவதாக ஏற்பாடு.

மறுநாள் காலையில் பேப்பர் படித்துக் கொண்டு இருந்த கிரிதரன் முன்வந்து தொப்பென்று அமர்ந்தாள் மீரா.

"இன்று மதியம் மோகன்ராமுடன் மகாபலிபுரம் போகப் போகிறேன்!" என்று அறிவித்தாள்.

அவன் ஏதாவது சொல்லுவான். திருப்ப வேண்டும் என்று கண்கள் பளபளக்கக் காத்திருந்த மீரா ஏமாந்தாள்.

இவள் பேசத் தொடங்கியதும் பேப்பரை இறக்கிக் கவனித்தவன், "சரிதான்," என்ற ஒற்றைச் சொல்லுடன் மீண்டும் பேப்பரில் மூழ்கினான்.

மனைவி என்பதே மறந்து விட்டதோ என்று கொதிப்பு ஆறாமலேயே மதியம் மோகன்ராமுடன் கிளம்பினாள் மீரா.

வெளியே ஸ்கூட்டருக்குப் பதிலாகச் சின்னக் கார் ஒன்றைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டாள்.

"வெயில் மழை இரண்டுக்கும் பாதுகாப்பு!". என்று அவளிடம் விளக்கினாலும் மோகன்ராமின் எண்ணம் வேறு.



கிரிதரன் அக்கறை அற்ற கணவனாக இருக்கலாம். ஆனால் மீராவின் பெற்றோர் உடன்பிறந்தோர்? அவர்களில் யாரும் பார்த்துத் தடுப்பதற்கு ஸ்கூட்டரில் அதிக வாய்ப்புண்டு. எனவேதான் தன் நண்பனிடம் கார் ஒன்றைக் கடன் வாங்கியிருந்தான். அதோடு ஸ்கூட்டரிலும் கூட மீரா உரசிக்கொண்டு உட்காருகிற ரகம் இல்லை. கைப்பிடியையும் சீட்டையும் பிடித்துக் கொள்வாளே தவிர அவனைத் தொட்டது இல்லை.

ஒரு தரம் கைப்பிடி ஸ்க்ரூவை லேசாக்கி விட்டுக் கூட முயன்றிருக்கிறான்.

"கைப்பிடி சரியில்லை மீரா, என் தோளைப் பிடித்துக்கொள். நான் என்ன அந்நியனா?" என்றதற்கு, "சீட்டுக்கு அடியில் பிடித்துக் கொள்வேன் மிஸ்டர் மோகன்ராம்," என்று அழுத்தமாகப் பதில் வந்தது.

அதனால் காரும் ஸ்கூட்டரும் ஒன்றுதான் என்று எண்ணினான்.

செல்லச் செல்ல மீராவுக்கு மனது அருவருக்கத் தொடங்கி விட்டது.

டிட் ஃபார் டாட் என்பது போல அவன் தப்புச் செய்தால் நானும் செய்ய வேண்டுமா? யார் இவன்? ஏன் இவனோடு போய்க்கொண்டு இருக்கிறேன்? முதல் நாளே இவன் பார்வை என்ன அசிங்கமாய். துச்சாதனத்தனமாய் இருந்தது! இப்போது மட்டும் அந்த எண்ணம் இல்லாமலா இருக்கும்?"

'மேலும் இவன் எப்படிப்பட்டவன் என்று என்ன தெரியும்? ஒருவேளை, பெண்களைக் கடத்திப்போய் விடுதிகளுக்கு விற்பவனாக இருந்தால்?'

அதுவும், இவன் எம்.டி.யின் நெருங்கிய சொந்தக்காரன் அட்ரஸ் இல்லாதவன் போல அந்த வேலை செய்ய மாட்டான் என்ற எண்ணம் வந்தது பிறகு.

கூடவே, 'இன்னொருவனோடு மகாபலிபுரம் போகிறேன்!' என்றபோதும் சலனமற்று இருந்த கணவனை எண்ணி வெகுவாக மனம் வாடியது.

எல்லாமாகச் சேர்ந்து மனதை அழுத்த மீரா தவித்தாள்.

காரைத் திருப்பச் சொல்லலாமா என்றுகூட நினைத்தாள்.

ஆனால் கிட்டத்தட்ட மகாபலிபுரமே வந்துவிட்டது.

சரி, இங்கே ஒரு மணிநேரம், திரும்பும் பயணம் ஒரு மணி நேரம். இரண்டு மணி நேரம் சகித்துக் கொள்ள வேண்டியது தான். முடிவு செய்துகொண்டு மகாபலிபுரத்தில் முக்கியமான வற்றை எல்லாம் அவனுக்குக் காட்டினாள்.

ஒற்றைக்கல் யானை, ஏழு ரதங்கள், ஜோடிக்குப் பேன் பார்க்கும் குரங்கு, அர்ச்சுனன் தவம்.

இவள் அவசரப்பட அவசரப்பட அவன் வெகுவாக நின்று ரசித்தான்.

''உங்கள் தமிழ் நாட்டில் இவ்வளவு அழகை எதிர்பார்க்க வில்லையே!'' என்று அவன் சொல்லவும், ரோஷத்துடன், ''இன்னும் தெற்கே போய்ப் பாருங்கள். ஒவ்வொரு கோயிலும் ஒரு கலைப் பொக்கிஷம்தான்!'' என்றாள்.

''இனிப் போகலாமா?'' என்று அவசரப்பட்டாள்.

ம்... அதோ அந்த இடம், அது இது என்று கிளம்பவே மணி ஐந்துக்கு மேல் ஆக்கிவிட்டான் மோகன்ராம்.



அப்போதும், 'ஒரு ரூம் எடுத்து முகம் கழுவி டிபன் சாப்பிட்டு விட்டுப் போகலாமே! கார்தானே?' என்றே சொன்னான்.

''நீங்கள் இருங்கள். நான் பஸ்ஸில்போகிறேன்,'' என்று மீரா கிளம்பிய பிறகுதான் காரை எடுத்தான்.

''கொஞ்சம் வேகமாக ஓட்டுங்கள், மோகன்ராம்! இருட்டுமுன் வீட்டுக்குப் போய்விட வேண்டும்,'' என்று துரிதப்படுத்தினாள் மீரா.

''அப்படியானால் குறுக்கு வழியில் போகலாமே!'' என்று ஒரு கிளைப்பாதையில் காரைத் திருப்பி வேகமாக ஓட்டினான் அவன்.

''இல்லை இல்லை, நேராகவே போகலாம்,'' என்ற மீராவின் குரலுக்கு மதிப்புத் தராமல் வெகு வேகமாக ஓட்டினான்.

''எங்காயினும் போய் மாட்டிக் கொள்ளக்கூடாது. காரைத் திருப்புங்கள்,'' என்றாள் மீரா.

ஆனால், பதிலும் இல்லாது வேகமும் குறையாமல் போகவும் துணுக்குற்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அங்கே கண்டது அச்சத்தை ஊட்டவே வண்டி செல்லும் இடத்தைப் பார்த்தாள்.

ஒருபுறம் பெரிய சவுக்குத் தோப்பு. மறுபுறம் பிளாட் போடப்பட்டுக் கொண்டு இருந்த பரந்த நிலப்பரப்பு.

எங்கும் ஆள் நடமாட்டமே இல்லை.

திகிலைக் காட்டாது மறைத்து, ''இன்னமும் ஓட்டினால் குதித்து விடுவேன்!'' என்று மிரட்டினாள் மீரா.

காரை நிறுத்திச் சாவியை எடுத்துப் பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான் மோகன்ராம்.

''குதி! ஓடி விளையாட நிறைய இடம் இருக்கிறது. லவ் பண்ணக்கூட நமக்கு இடைஞ்சலாக யாரும் வர மாட்டார்கள்!'' என்று சிரித்தான், ''இதற்காக எத்தனை நாள் திட்டம் போட்டேன்!'' என்று கைநீட்டி அவள் கன்னத்தைத் தொட்டான்.

தொண்டைக்குள் வந்து, இதயம் துடிக்க, ''சீ'' என்று அவன் கையைத் தட்டிவிட்டாள் மீரா.

வேகமாகக் கதவைத் திறந்து இறங்கிக் கண் மண் தெரியாமல் வந்த வழியே ஓடலானாள்.

விரைவிலேயே அவளை எட்டிவிட்டான் மோகன்ராம்.

''உன் கணவனைச் சீண்டிவிட மட்டும் என்று ஓர் இளிச்ச வாயனைத் தேடினாயா?'' என்றபடி அவளை மடக்கினான்.

ஒரு போராட்டத்தின் முடிவில் அவனைக் கீழே தள்ளிவிட்டு மீண்டும் ஓடினாள் மீரா.

ஓடியவளை யாரோ பற்றினார்கள்.

யாரென்றும் பாராமல் மூர்க்கத்தனமாகத் திமிறியவளை ''ஷ்... மீரா...'' என்ற குரல் அடக்கிற்று.

உடம்பின் பலம் எல்லாம் தீர்ந்து விட்டவள் போல ஓய்ந்து தொய்ந்தாள் அவள்.

## 15

**ஓ**ய்ந்து நின்ற மீராவை விலக்கிப் பின்புறம் நகர்த்திவிட்டு அவளைத் துரத்தி வந்து கொண்டிருந்த மோகன்ராமை நோக்கி முன்னேறினான் கிரிதரன்.

அவனும் தீவிரமாகவே எதிர்த்த போதும் நாலைந்து குத்து, கைவெட்டுகளில் மோகன்ராமைச் சாய்த்துவிட்டு, கிரி மனைவியிடம் திரும்பி வந்தான்.



மழையில் நனைந்த கோழிக்குஞ்சு போல் வெட வெடவென்று அவள் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சட்டென இழுத்து அணைத்துக் கொண்டான்.

விம்மலுடன் அவன் மார்பில் புதைந்தாள் அவள்.

மெல்ல மெல்ல விசிப்பும் நடுக்கமும் குறைந்து மறைந்து உடம்பில் கதகதப்பு ஏறிய பிறகு தான் நிற்கும் நிலை மீராவுக்குப் புரிந்தது.

ஆனால் இந்த ஆறுதலுக்கு அவள் கொடுத்து வைக்க வில்லையே!

உதட்டைக் கடித்துக் கொண்டு மெல்ல விலகினாள்.

''உன் அப்பா வீட்டுக்குப் போகலாம், என்ன.''

'சரி' என்று கிளம்பியவள் சட்டென நின்று, தன் ஆடைகளை ஒரு கலவரத்துடன் ஆராய்ந்தாள்.

''முட்டாள்! கிளம்பு. நீ நினைக்கிறமாதிரி ஒன்றும் இல்லை வா,'' என்று அவளை அழைத்துக் கொண்டு போனான் கிரிதரன்.

சவுக்குத் தோப்பின் தொடக்கத்தில் கிரிதரனுக்காக அவனது அலுவலகத்தில் கொடுக்கப்பட்டிருந்த கார் நிற்பதைக் கண்டாள் மீரா.

அவளை ஏற்றிவிட்டுத் தானும் அமர்ந்து கொண்டு சீப்பை அவளிடம் நீட்டினான் கிரிதரன். ''மேலாக வாரிக்கொள்.''

அவள் வாரி முடிந்ததும் சீப்பை வாங்கி க்ளோஸ் கம்பார்ட்மெண்டில் போட்டு மூடிவிட்டுக் காரை எடுத்தான்.

ஈஸ்வரனுக்கு மகளையும் மருமகனையும் கண்டதும் சற்றுநேரம் ஒன்றுமே ஓடவில்லை.

சும்மாவே கவலை! சொல்லாமல் கொள்ளாமல் மகளை அழைத்து வந்திருக்கிறானே என்று முதலில் பயந்து போனார்.

ஆனால் கிரிதரன் சிரித்த முகமாக, ''மகாபலிபுரம் போயிருந்தோம் மாமா! திரும்பும்போதுதான், இங்கே சேர்ந்து வந்து தங்கவே இல்லையே என்று தோன்றியது, வந்துட்டோம்!'' என்ற பிறகு நிம்மதியாக மூச்சுவிட்டார்.

''வாடி கண்ணு. ஏண்டா முகமெல்லாம் சோர்ந்து கிடக்கிறது?'' என்று மகளிடம் ரகசியமாய் மாமியார். வினவியதைக் கவனித்து, 'பகலெல்லாம் மகாபலிபுரத்தில் சுற்றினோ மில்லையா? இன்றைய வெயில் எல்லாம் எங்கள் தலையில்தான்!'' என்று சிரித்தான் கிரிதரன்.

மைத்துனனிடம், ''வேலை எப்படி இருக்கிறது?'' என்று விசாரித்தான்.

''எளிதாக இருக்கிறது அத்தான்! உங்களுக்கும் மீராவுக்கும் கோடி தாங்க்ஸ்!'' என்று பதிலுரைத்தான் மதன்.

''மதன்'' என்று உள்ளிருந்து குரல் வரவும், ''ஒரு நிமிஷம்,'' என்று அத்தானிடம் அனுமதி பெற்றுக்கொண்டு உள்ளே சென்றான் மதன்.

சற்று முகம் கறுக்க, ''மாப்பிள்ளை! அந்த நகைகளை...'' என்று தொடங்கிய மாமனாரை இடைமறித்தான் மாப்பிள்ளை.

''மாமா! அது என் சம்மதத்துடன் நடந்ததுதான். பணமாகக் கொடுக்க வழியில்லாமல் போனதால் அப்படிச் செய்தோம், மறந்து விடுங்கள்,'' என்றான்.

அப்போதும் சமாதானம் இன்றி, ''பின்னே... அன்று...'' என்று நிறுத்திவிட்டுத் திரும்ப உள்ளே ஒரு தரம் பார்த்தார் ஈஸ்வரன்.



வீட்டில் இன்னமும் அவர் சொல்லவில்லை என்பதை அறிந்து தணிந்த குரலில், ''அன்று நடந்தது முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் நடந்த ஒரு தவறு மாமா! தயவு செய்து நீங்கள் அதை மறக்க வேண்டும்!'' என்றான் மருமகன்.

உள்ளிருந்து வந்த மைத்துனன் சைக்கிள் சாவியை எடுக்கவும், ''நில் மதன், ஒன்றும் வாங்கி வரவேண்டாம். இருப்பதைச் சாப்பிடலாம், போதும்,'' என்று தடுத்தான்.

''வேறு ஒன்றும் இல்லை. முதல் தடவையாக வந்திருப்பதால் கொஞ்சம் ஸ்வீட்...'' என்று கூறிவிட்டு, செல்லும்படி மகனுக்கு ஜாடை காட்டினாள் கற்பகம்.

''அவன் போகட்டும், மாப்பிள்ளை. இல்லாவிட்டால் உங்கள் மாமியாருக்கு நிம்மதியிராது. போய் வாங்கிவாடா,'' என்று மகனை அனுப்பிவிட்டு, மருமகனிடம் சம்பிரதாயமாகக் குடும்ப நலம் விசாரிக்கலானார் ஈஸ்வரன்.

கிரிதரன் இயல்பாய்ப் பொருந்திட மீராதான் திணறினாள்.

''என்னது ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று தொண தொணத்த தங்கையிடம், ''வெயிலில் சுற்றியது தலைவலி!'' என்று சமாளித்து வைத்தாள்.

பிறகு, ''வியர்வையாக இருக்கிறது. குளிக்கிறேன்,'' என்று குளியல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

வெகுநேரம் கழித்து, ''சாப்பிடலாம், வா,'' என்று குரல் வந்த பிறகுதான் வெளியே வந்தாள்.

நன்றாக நீரில் குளித்ததால் களைப்பு, அலுப்பு எல்லாம் தீர்ந்து மனம் கூட நன்றாக இருந்தது.

''மக்கு மக்கு! இந்த நேரத்தில் தலைக்கா குளித்தாய்? காயுமா?'' என்று கடிந்து கொண்டாள் அன்னை.

''தலையெல்லாம் மண்ணாயிருந்ததம்மா!'' என்று தாயிடம் மீரா சிணுங்கவும், ''சுமி! போய் டிரையரை எடுத்து வந்து அக்கா முடியைக் காய வைம்மா!'' என்று சின்ன மகளை ஏவினாள் கற்பகம்.

''தலையில் மண் என்கிறாளே, உள்ளே இருந்தது எல்லாம் வெளியில் வந்து விட்டதா?'' என்றான் மதன் சிரிப்புடன்.

''மகாபலிபுரத்தில் சிற்பம் பார்த்தீர்களா, அல்லது சினிமா டூயட் பாடினீர்களா?'' என்று கேலி செய்தாள் ராதா.

''என்ன மாதிரி வீட்டில் வளர்ந்து என்ன மாதிரி வீட்டில் தள்ளி விட்டார்கள்!'' என்று மீரா பொருமியது, இதை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கிரிதரனுக்கு நினைவு வந்தது.

இரவில் தனியறைக்குள் சென்று கதவைச் சாத்திய மீரா சற்று நின்றாள்.

கட்டிலில் அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவன் மார்பில் ஒண்டியபோது அடைந்த ஆறுதலும் சுகமும் நினைவு வந்தது.

பெருமூச்சைச் சமாளித்துக் கொண்டு, தரையில் விரிப்ப தற்காகக் கட்டிலில் இருந்த போர்வையைக் குனிந்து எடுத்தாள்.

போர்வையைத் தொட்ட கைமேல் அழுத்தித் தடுத்தது அவன் கரம்.

திகைப்புடன் லேசாகத் திரும்பியவளின் விழிகளை ஊடுருவி விட்டு, அவளை மெல்ல இழுத்து அணைத்து, உதடுகளில் மென்மையாக முத்திரை ஒன்றைப் பதித்தான் கிரிதரன்.



பிறகு முகமெங்கும்.

அவன் கைகளில் கொடியாய்த் துவண்டவள் திடுமென நினைவுவர, ''அந்த நிஷா...'' என்றாள் கம்மிய குரலில்.

அவளது விரல்களைப் பற்றி விளையாடியபடி, ''அவளுக்கென்ன?'' என்றான் அவன்.

கையை இழுத்துக் கொண்டு விலகி, ''அவளுக்குக் கோபம் வராதா?'' என்றாள்.

''எதற்கு?''

''இ...இ...தற்கு...'' என்று முகம் சிவந்தாள் மீரா.

அவன் உரக்கச் சிரித்துவிட்டுப் பிறகு அவளை மீண்டும் கைவளைவில் இழுத்துக் கொண்டான்.

''அன்று பஸ் ஏற்றி விட்டபின் அவளை நான் சந்தித்துப் பேசியதே இல்லை, மீரா!'' என்றான்.

அவள் விழிகளை விரிக்கவும், ''மெய், மீரா! அதற்கும் முன்பிருந்தே என் மனம் மாறத் தொடங்கியிருந்தது. பிடிவாதமாய்ப் பழசைப் பிடித்துக் கொண்டு இருந்து பார்த்தபோதுதான் அந்த சேலைத் தகராறு வந்தது. அன்றே— உன்னிடம் கைநீட்டிய விநாடியிலிருந்தே மனம் இடிக்கத் தொடங்கிவிட்டது. அன்று கிணற்றடியில் குமுறினாய் பார்...சே!'' என்று அவளை அணைத்து, ''ஸாரி கண்மணி!'' என்றான்.

பிறகு தொடர்ந்து, ''அவள் வேண்டும் என்றே பொய்யாக உன்னை மட்டம் தட்ட முயன்றாள் என்பதை அறிந்தபின் மிகவும் அருவருப்பு ஆகிவிட்டது...'' என்றான்.

''அப்படியானால் நானும் கெட்டவளானால் என்னையும் உதறி விடுவீர்களா?'' என்று சட்டெனக் கேட்டு விட்டாள் மீரா.

"இப்போதெல்லாம் நீ ரொம்ப நல்லவளாக இருப்பதாக எண்ணமா!" என்று ஒரு மாதிரிக் குரலில் அவன் வினவவும் மீரா திகைத்தாள்.

புதிதாகத் தோன்றியிருந்த தைரியம் மறைய ஓரக்கண்ணால் அவன் முகத்தை ஆராய்ந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கிரிதரன் முறுவலோடு அவள் மூக்கைப்பிடித்து ஆட்டினான். 'பெரியவர்களிடம் மரியாதையில்லாமல் பேசுவது, வேலையையெல்லாம் தலையில் கட்டிவிட்டு ஒதுங்குவது, பிளாக்மெயில் பண்ணுவது, கண்டவனுடன் சுற்றுவது... இவையெல்லாம் ரொம்ப நல்ல பெண்ணின் அடையாளமாக்கும்?' என்று வினவினான்.

"நான்...நான்..." என்று அவள் திணறினாள்.

முதுகில் லேசாகத் தட்டி, "ஓகே...ஓகே... எனக்குப் புரிகிறது. விடு. ஆனால் இப்படியெல்லாம் நீ நடந்தும் எனக்கு ஆத்திரம் வரவில்லையே என்று எண்ணிப்பார்த்த போதுதான், அப்பா சொன்ன மோகக் கவர்ச்சியும் உண்மைக்காதலும் புரிந்தது. என் அன்பு உனக்கு என்பது தெரிந்தால் நம் வீட்டிலும் எல்லாம் சரியாகிவிடும். நீயும் பார்த்துக் கொள்ள வேண்டும். சரிதானா?" என்றான் அவன்.

விழிகளில் நீர் மல்கத் தலையாட்டினாள் மீரா.

"இனி இந்த விழிகளில் கண்ணீரே வரக்கூடாதாக்கும்!" என்று அவளை முத்தமிட்டான் கிரிதரன்.

★ ★ ★


ஒரு
கல்யாணத்தின்
கதை
ரமணிசந்திரன்